484

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 3. | ஹிஜ்ரி 1351 ஜமாதுல் ஆகிர் 1932 அக்டோபர் மீ | இதழ் 10

17 OCT 1932

உள்ளடக்கம்		பக்கம்
1.	ஸூரத்துல் பஜ்ர்	425
2.	நாயகவாக்கியம்	428
3.	காதியானிகளும் முஸ்லிம்கள் தானே?	430
4.	இஸ்லாமிய வாழ்க்கை	431
5.	ஆராய்ச்சிமேடை	432
6.	குர்ஆனின் அற்புதசக்தி	436
7.	தா. இ. ஹாபிஸின் மார்க்கமுரணான பத்வா	439
8.	ஏகத்துவத் தூதரும், தா. இ. ஹாபிஸும்	441
9.	மிர்ஸாயி இயக்கத்திற்குச் சாவுமணி	443
10.	எம்பெருமானார் (ஸல்.) அவர்களும், சக்தி அற்றோரும்	445
11.	காலத்தின் அருமை	448
12.	சுகாதாரம்—க்ஷயரோகம்	452
13.	நிரூபசாரம்	454
14.	மிர்ஸா மஹ்மூதின் பிதற்றல்	455
15.	இஸ்லாமும் மேனாட்டு மக்களும்	457
16.	ஆசிரியர் குறிப்பு	462

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

சந்தா நண்பர்களுக்கு

நம் அரும் மாசிகையின் சந்தாவை இதுவரை செலுத்தாமலிருக்கும் நண்பர்கள் தங்கள் சந்தாவை தாமதியாது அனுப்பிவைப்பார்களென்று நம்புகிறோம். இதுபொழுது ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணாவாக உயர்த்தப்பட்டிருப்பதால் வி. பி. அனுப்புவதானால் நேயர்களுக்கு 5 அணா வீண்செலவு ஏற்படுகிறது. ஆதலின் நமது பழைய சந்தா நேயர்களும் புதிதாக சேரும் கனவான்களும் தங்கள் சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பிக் கொடுக்கும்படி கோருகிறோம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமாயிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது வெளிதேச நண்பர்களுக்கு சிரமமாகயிருக்கும்; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய,

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு "77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு, 67, அரப் ஸ்டிரீட், M. M. ஷரீப் இவர்களிடமும்,

பினாங் வாசிகள் 119, சோலியா ஸ்டிரீட்,
N. K. முஹம்மது கவ்து சாஹிப், அவர்களிடமும்,

பெட்ரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் "கிள்ளானிலுள்ள ஜனாப் K. A. பகீர் முஹம்மத் ஸாஹிப்" அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் "385, மங்கமாரி ஸ்டிரீட் தர்கா மஸ்ஜித் பேஷ் இமாம் மௌலவீ சுல்த்தான் அஹ்மத் சாஹிப்" அவர்களிடமும்,

கொளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் கராஸ் ஸ்ட்ரீட்டிலுள்ள மெஸர்ஸ் A. M. K. ஆலிம் ஸாஹிப் அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத் தொகையை செலுத்துமாறு கோருகின்றோம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

"மானேஜர்,"

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

48, அங்கப்பன் தெரு, G.T., மதருஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்ரஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 3	ஹிஜ்ரி 1351 ஜமாதுல் ஆகிர் ௴ 1932 ௵ அக்டோபர் ௴	இதழ் 10

17 OCT 1932

ஸூரத்துல்பஜ்ர்

(சென்ற மீ தொடர்)

இவ்வத்தியாயத்தின் இரண்டாவது வாக்கியத்தில், பத்து இரவுகள் மீது பிரமாணஞ் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே முபஸ்ஸிரீன்களான விரித்துரை கர்த்தாக்கள், அப் பத்து இரவுகளானது யாதாகுமென்பதில் பலவாறான அபிப்பிராயங்கொள்கின்றனர். அதாவது:—சிலர், இவ்வத்தியாயத்தில் அல்லாஹுதஆலா பிரமாணஞ் செய்து கூறியிருக்கும் பத்து இரவுகளானது, துல்ஹஜ்ஜு மாதத்தின் முந்திய பத்து இரவுகளாகும் எனக் கூறுகின்றன. எனவே இதில் ஆண்டவனது உண்மை அடியார்கள் தேயத்தின் நாலுபாகங்களிலுமிருந்து ஒரு இடத்திற்கு வந்து ஆண்டவனை வணங்குவதிலும், தங்களுக்குத் தேவைப்படுபவைகளை அவனிடம் கேட்டுக்கொள்வதிலும் தங்களருமை நேரங்களைப் போக்குகின்றனர். ஆகவே இவ்வாறு ஒன்றுகூடுவது மறுமைநாளில் யாவரும் ஒன்று சேர்வதற்குள்ள அடையாளமாக யிருக்கும் என்கின்றனர்.

சிலர், ரமலான் மாதத்தின் பிந்திய பத்து இரவுகளாகும்; இதில் "லைலத்துல் கத்ர்" என்னும் மேன்மைவாய்ந்த இரவுமிருக்கின்றது; இதனால் தான் எம்பெருமானார் சற்குணசீலர் (ஸல்.) அவர்கள் அவ்விரவுகளில் விழித்து வணக்கம் புரிந்திருப்பதுடன் தங்கள் குடும்பத்தினர்களையும் வணக்கத்தின் பக்கல் அழைத்திருக்கின்றார்கள் எனக் கூறுகின்றனர். சிலர் முஹற்றம் மாதத்தின் முதல் பத்து இரவுகளென்றும் கூறுகின்றனர். எனவே, இம்மாதத்தின் பத்தாம் நாளில் நோம்பு நோற்பதுகொண்டு அநேகப்பிரயோசனமேற்படுகிறதென ஹதீதுஷரீபில் கூறப்பட்டிருக்கின்றது. தவிர சிலர், இப் பத்து தினங்கள் வருஷத்தின் பல மாதங்களிலும் கலந்திருக்கிறதெனக் கூறி, ரமலான் மாதத்தின் கடாசி ஐந்துதினங்களும், ஈதுல்பித்ர், ஈதுல் அல்ஹாவின் இரவுகளும், அரபாவின்இரவும், மிஃராஜ் இரவும், பராஅத் இரவுமாகும் என்கின்றனர். முடிவாக அப்பத்து இரவுகளும் மூடலாகவே இருக்கின்றதென பெரியார்கள் கருதுகின்றனர்.

இதன் ஆறாவது வாக்கியத்தில் உம்முடைய நாயன் 'ஆத்' கூட்டத்தினரை என்ன செய்தானென்பது உமக்குத் தெரியுமா? எனக் கூறப்பெற்றிருக்கின்றது.

அதாவது 'ஆத்' கூட்டத்தினர் மாபெரும் புஜபல பராக்கிரமம் பெற்றவர்க ளாகவும் உயரமானவர்களாகவு மிருந்தார்கள். அவர்கள் மலைகளை உடைத்து மாபெருங் கட்டடங்களைக் கட்டியிருந்தார்கள். அவ்வாறான கட்டடங்கள் இதுகாலைவரை உலகில் ஏற்பட்டிருக்கவில்லை. அதாவது இக்கூட்டத்தினர் நூஹ் (அலை.) அவர்களது வெள்ளப் பிரளயத்திற்குப் பின் எமன் தேசத்தில் அபிவிர்த்தியாகி அரப் தேசமென்ன? மிஸர் முதலியவைகளிலும் தங்கள் இராஜியங்களை ஸ்தாபித்து விட்டனர். எனவே அங்கு அவர்கள் பெரும் பெரும் கட்டடங்களைக் கட்டிக் கொண்டு அளவற்ற சுவண்டியை அனுபவித்து வந்ததின் காரணமாய், மிதமிஞ்சிய இன்ப சுகங்களை அனுபவிப்பதிலும், அக்கிரமங்கள் புரிவதிலும், கெட்ட காரியங்களைச் செய்வதிலும் சிறந்து விளங்கினார்கள். அக்கூட்டத்தின் தலைவரான "ஆத்" என்பவருக்கு "ஷதீத்" "ஷத்தான்" என இரு குமாரர்களிருந்தனர். இதில் ஷதீத் காலஞ் சென்றபின் ஷத்தான் தேசங்களைக் கைப்பற்றிக்கொண்டு பெரும் ராஜிய பரிபாலனஞ் செய்து வந்ததின் காரணமாக அநேக இராஜர்கள் அன்னோனுக்கு வழிப்பட்டு வந்தனர். இங்கிலைமையில் அவனிடம் சுவனலோகத்தைப் பற்றிக் கூறப்பட்டபொழுது, தாமும் அவ்வாறான சுவர்க்கத்தைத் தயார் செய்வதாகக் கூறி, எமன் தேசத்தின் காட்டில் "இரம்" என்னும் ஊரை ஏற்படுத்துவதற்கு அஸ்திவாரமிட்டான். அதனை கட்டி முடிக்க முந்நூறு ஆண்டுகள் செல்படியாயின. அதில் பல வகையான தோட்டங்களும் நதிகளும் அளவற்றனவாகயிருந்தது. இவ்வாறான பல சௌகரியங்களை ஏற்படுத்திவிட்டு தம் பரிவாரங்களுடன் அதனுள் நுழையுங்காலை, வானத்தின் பக்கலிருந்து ஒரு சத்தம் ஏற்பட்டு யாவற்றையும் நாசமாக்கி விட்டது. எனவே "ஷத்தாத்" தமது 900-ம் வயதில் மரணமடைந்தான். பிறகு அநேக காலஞ் சென்றபின் அபூகலாபா (ரலி.) அவர்கள் ஒட்டகத்தைத் தேடிக்கொண்டு கானகத்தின் வழியே சென்றபோது "இரம்" என்னும் ஊர் இருந்த இடத்தைப் பார்த்து வந்ததாகக் கூறப்படுகின்றது.

"தமூத்" கூட்டத்தினர் மலைகளை வெட்டிக் கொண்டுவந்து மாபெரும் கட்டடங்களைக் கட்டி தாங்கள் அதிலேயே சதாகாலமும் இருப்போமென உறுதி கொண்டிருந்தனர். எனவே, "ஹஜர்" என்னுமிடத்திலிருந்து "வாதியகுரா" வரை அன்னோர் வதிந்து வந்தனர். அவர்கள் மாபெரும் மஹால்களைக் கட்டியிருந்ததுடன் அக்கட்டடங்களில் பலவாறான சித்திரப்படங்களையும் வரைந்திருந்தார்கள். அத்துடன் கெட்ட காரியங்கள் அன்னோரில் மலிந்திருந்ததுடன் ஆண்டவனுக்கு மாறுசெய்பவர்களாகவு மிருந்தார்கள். கடாசியாக ஆண்டவன் சாலிஹ் (அலை.) அவர்களை அன்னோருக்கு நபியாக அனுப்பிவைத்தான் அதன் பிறகும் மேலும் மேலும் அவர்கள் மாறுசெய்து வந்ததின் காரணமாக அவர்கள் அழிந்துபோய்விட்டனர்.

"பிர்அவ்ன்" என்பான் அளவற்ற பட்டாளங்களை யுடையவனாக இருந்தான்; அத்துடன் ஆண்டவனுக்கு மாறு செய்பவனாகவு மிருந்ததால், ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்கள்மீது ஈமான் கொண்டிருந்த அநேக முஸ்லிம்களை ஷஹீதாக்கிவிட்டான். எனவே, அவனது பொக்கிஷாதிபதியாக இருந்த "ஸஜீல்" என்பவர் அந்தரங்கத்தில் ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்கள்மீது ஈமான் கொண்டிருந்ததை அறிந்த பிர்அவ்ன், அவரை ஷஹீதாக்கிவிட்டான். இஃதென்ன? பிர்அவ்னின் பெண்சாதியான ஆஸியா என்பவரும் ஹஸ்ரத் அவர்கள்மீது ஈமான் கொண்டிருந்ததினிமித்தம் அவருக்கு சதா கஷ்டத்தைக் கொடுத்துவந்து கடாசியில் கோப மேலிட்டவனாக அம்மாதை சூடான தரையிற் போட்டு நான்கு பக்கமும் முளை அடித்து அதிலிழுத்துக்கட்டி பாரமானகல்லை நெஞ்சில் வைத்துவிட்டான். இங்கிலைமையில் அம்மாது சிரோன்மணியின் ஆத்மா தெய்வகதியடைந்தது. ஆகவே அவர்களெல்லோரும் இவ்வாறு பூவுலகின்கண் பெரும் அக்கிரமம்புரிந்து வந்ததை அறிந்த அல்லாஹ் தஆலா, அன்னோரை நேர்வழியின் பக்கல் அழைப்பான் வேண்டி நபிமார்களை அனுப்பிவைத்தும், நல்லுபதேசம் புரியும்படி செய்தும் அன்னோர் நேர்வழிக்கு வராத்ததின் காரணமாக அன்னோருக்குக் கடிசான வேதனையை அனுப்பிவைத்து அவர்களது இராஜாங்கம் பரிபட்டுப் போய், பலவாறான

கஷ்ட சங்கடத்தில் அகப்பட்டு மரணமடையும்படி செய்துவிட்டான் என்பதே.

இதன் பதினைந்தாம் பதினாறாம் வாக்கியத்தில் ஆண்டவன் மானிடனுக்குக் காருண்யத்தை அளித்துவிடுவானாகில் தன்னுடைய நாயன் தன்னை கன்னியப்படுத்தியதாகவும், அவனை சோதித்து ஆகாராதிகளை மட்டுப்படுத்தி விடுவானாகில் நாயன் தன்னைத் தாழ்மைப்படுத்திவிட்டதாகவுங் கூறுகின்றான். அதாவது மானிடன் இராப்பகல் முழுதும் உலகின் இன்ப சுகங்களிலும், அதின் அபிலாஷைகளிலும் மூழ்கிக்கிடக்கின்றான். இந்நிலைமையில் அவனுக்கு உலகில் பற்பல சௌகரியங்களும் ஐசுவரியங்களும் கிடைத்துவிடுமாயின், அதுபொழுது ஆண்டவன் தம் மீது பொருத்தமுடையவனாகித் தமக்கு சங்கை மரியாதை அளித்திருப்பதாயும், தமக்கு மிடுமைத்தனம் ஏற்பட்டு கஷ்ட சங்கடங்களிற் சிக்குண்டு போவனாகில், ஆண்டவன் தம் மீது பொருத்தமற்றவனாக இருப்பதன் காரணமாகத் தம்மைத் தாழ்மைத்தனத்திலாக்கி வைத்திருப்பதாகவுங் கருதிவிடுகின்றான். எனவே ஆண்டவனது பொருத்தந்தான் தமது சங்கை மரியாதைக்குக் காரணமெனவும், அவனது வெறுப்புத்தான் உலகின் பலவாறான கஷ்ட சங்கடங்களுக்குக் காரணமெனவும் உறுதி கொள்கின்றான். அன்னோன் இவ்வாறு கருதுவது முழு முட்டாள்தனமேயாகும். ஆண்டவன் மானிடனுக்கு சுவண்டி, காருண்யம், ஐசுவரியம் முதலியவைகளை அளிப்பதும், மிடுமைத்தனம், ஏழ்மை, வியாதி முதலியவைகளைக் கொண்டு சோதிப்பதும் இன்னோன் ஆண்டவனால் அளிக்கப் பெற்ற காருண்யங்களுக்கு எவ்வாறு நன்றி செலுத்துகின்றான் என்பதையும், கஷ்டத்தை எவ்வாறு சகித்துக் கொள்கின்றான் என்பதையும் பரீக்ஷிப்பதற்காகவே யாகுமென்பதை நன்குணரல் வேண்டும். ஆதலின் மானிடன் கஷ்டத்தைச் சகித்துக் கொள்வது அவனது உயர்வுக்குக் காரணமாகவும், அவன் காருண்யங்களுக்கு நன்றி செலுத்தாதிருப்பது அவனது பிற்போக்குக்கு அடிகோலியதாகவுமாய் விடுவது திண்ணம். எனவே, உலகின்கண் மாணிடனுக்கு சுவண்டி ஏற்படுவது ஆண்டவனுடைய பொருத்தத்தினாலென்றும், தாழ்மை உண்டாவது அவனுடைய வெறுப்பினாலென்றும் கருதுவது உண்மைக்கு நேர்விரோதமாகும். ஆனால் மானிடன் தாழ்மை அடைவதற்குள்ள உண்மை காரணம், அவன் தந்தையை இழந்து பரிதபிக்கும் அகதிகள் மீது பிரீதி, அன்பு கொள்ளாதிருப்பதும், ஏழை பரதேசிகளுக்கு அன்னமளிக்காதிருப்பதும், மரணித்துப்போனவர்களின் பொருள்களைச் சட்டப்படி பாகஸ்தர்களுக்குப் பிரித்துக் கொடுக்காமல் வீண் செலவு செய்துவருவதும், ஐசுவரியங்கள் மீது அதிகப்பற்றுகொள்வது மாகுமென்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம்.

மானிடர்காள்! நீங்கள் செய்யும் நல்ல கெட்ட காரியங்களை ஆண்டவன் பார்த்துக் கொண்டு அதற்கு தெண்டனை கொடுக்க சக்தி இல்லாமலிருப்பதாகவோ, அன்றி தெண்டனை கொடுக்கமாட்டான் என்பதாகவோ கருதிவிடலாகாது. அவன் இப்பூவுலகைத் துண்டந் துண்டமாக உடைக்கப்பட்டு அதிலுள்ளவைகளெல்லாம் அழிந்து நாசமாய் மறுஉலக மேற்பட்டு முந்தியோர் பிந்தியோர் யாவரும் நியாயத்தீர்ப்பிற்காக அவனது சந்நிதானத்தில் நிற்கும்படியானவும், அவன் தீர்ப்பளிக்கும் நோக்கத்தோடு மானிடர்கள் பக்கல் திரும்பும்படியானவும், மலக்குகள் தங்கள் தகுதிக்குத்தக்கபடி வரிசை வரிசையாக வரும்படியானவும், நரகத்தை மானிடர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கப்படும்படியானவுமாகிய காலத்தில் நிச்சயமாக அவர்கள் புரியும் நன்மைகளுக்குக் கூலியும், தீமைகளுக்கு வேதனையுமளிப்பான் என்பது திண்ணம். அதுகாலை மானிடன்தான் உலகின்கண் புரிந்த நன்மை தீமைகளை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து, உலகின்கண் அன்பியாக்களும் உலமாக்களும் கூறியவைகளின் உண்மையைத் தெரிந்து கொண்டு தம் வருங்காலத்திற்காக யாதொன்றையும் சம்பாத்தியஞ் செய்துகொள்ளாமல் உலகின் இன்பசுகங்களிலகப்பட்டுக்கொண்டிருந்ததற்காக வருந்தி, தாம் அதுபொழுது முக்தி அடைவதற்காக உலகிலிருந்தே நன்மைகள் செய்திருக்கவேண்டியிருந்ததே என சஞ்சலப்படுவான். ஆனால் அவ்வாறான சஞ்சலம் யாதொருபிரயோசனத்தையுமளித்துவிடாது. அக்காலை ஆண்டவன் அவனுக்குத் தக்கவேதனை அளிப்பான். அவ்வாறான வேதனை இவ்வுலகில் கொடுக்க முடியாது.

எனவே, அவன் எவ்வகையிலும் அவ் வேதனையை விட்டுத் தப்பித்துக்கொள்ள முடியாது.

ஆனல் சாலிஹான நற்கருமங்கள் புரிந்துள்ள நல்லடியார்கள் சஞ்சலப்படுங்காலே, மலக்குகள் அன்னேருக்கு ஆறுதல்தேருதல் சொல்லி, உங்களுடைய நாயனின்மீது நீங்கள் சந்தோஷமடைந்தவர்களாகவும், அவன் உங்கள்மீது விருப்பமுற்றவனகவு மிருக்கும் நிலைமையில் அவனது சமூகத்திற்கு வாருங்களென அழைத்து வருவார்கள். அதுபொழுது இவனுக்குக் கிடைக்கும்ஆண்டவனது கிருபைக்கு எவ்வித மட்டுத் திட்டமு மிருக்கமாட்டாது. ஆகவே ஆண்டவன் இன்னேனை நோக்கி, தனக்கு வழிப்பட்டு நடந்த அடியார்களுக்காகத் தயார் செய்து வைத்திருக்கும் உயர் பதவிக்கு வந்துவிடும்படியும், அவர்களுக்காக முன்னமேயே தயார் செய்து வைத்திருக்கும் சுவர்க்கத்தில் நுழைந்து சதா இன்புற்றிருக்கும்படியும் கூறுவான். பிறகு அவன் அதில் நுழைந்து சதாகாலமுள்ள சுகானுபவங்களைப் பெற்றுச் சிறப்புற்று விளங்குவானென்பது திண்ணம்.

(வல்லாஹ் அஃலம்)

நாயக வாக்கியம்

"ஆண்டவன் எவனுடைய நலவை நாடுகின்றுனே அவனை மார்க்கத்தை விளங்கினவனகச்செய்து விடுகின்றுன். நான் பங்கிடுபவராக யிருக்கின்றேன். கொடுப்பதெல்லாம் ஆண்டவன் புறத்திலேயே இருக்கின்றது. ஆதலின் இந்த உம்மத்துகள் சன்மார்க்கத்தின்மீது உறுதியாக இருக்குங் காலமெல்லாம் அவர்களது விரோதிகளால் எவ்வாருன கெடுதியுஞ் செய்துவிட முடியாது. இந் நிலைமையிலேயே மறுமை நாள் வந்து விடு"மென எம்பெருமானர் (ஸல்.) கூறியதாக ஹஸ்ரத் முஆவியா (ரலி.) அவர்களைத் தொட்டு ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

"இல்மு (கல்வி) எடுபட்டு மடமை குடிகொண்டுபோவதும், சாராயங்குடிப்பது அதிகமாய் விடுவதும், பஹிரங்கமாக விபசாரஞ் செய்வது ஏற்பட்டுவிடுவதும் கியாமத் நாள் வருவதற்குள்ள அடையாளமாகும்" என எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அனஸ் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.

"எவனுடைய கை வாயினின்று முஸ்லிம்கள் தப்பித்திருக்கின்றனரோ அவன்தான் சரியான முஸ்லிமென்றும், எவன் ஆண்டவனல் விலக்கப்பட்டவைகளைத் தவிழ்ந்து நடக்கின்றுனே அவன்தான் பாவங்களை வெறுத்தவனென்றும்" எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றுர்கள்.

"மற்ற வஸ்த்துக்களைப் பார்க்கினும் அல்லாஹ்வின்மீதும் அவனது ரசூலின்மீதும் பிரீதி கொள்பவனும், ஆண்டவனுக்காகவே ஒருவர்மீது பிரீதி கொள்பவனும், குபிரின் பக்கல் திரும்புவதை நெருப்பில் விழுந்து மாண்டுபோவதற்குச் சமமாகக் கருதுபவனும் ஈமானின் இன்பத்தைப் பெற்றுக் கொள்வானென" எம்பெருமானர் கூறியிருக்கின்றுர்கள்.

மானிடர்கள் ஏதாகிலும் நலவான காரியங்கள் செய்வதற்கு எம்பிரான் (ஸல்.) அவர்கள் உத்திரவிடுங்காலே, அவர்களின் சக்தியை நோட்டமிட்டுப் பார்த்து அவர்களின் சக்திக்குத் தக்கவாறு காரியங்கள் புரியும்படி உத்திரவிடுவார்கள். எனவே சஹாபாக்கள் இதனை அறிந்து நாங்கள் தங்களைப்போலில்லை; ஆண்டவன் தங்களின் முந்தியபிந்திய பாவங்கள் யாவற்றையும் மன்னித்திருக்கின்றுன்; ஆதலின் தாங்கள் அதிகமாக வணங்க வேண்டுமென்னும் அவசியமில்லை; நாங்கள் அதிகமாக ஆண்டவனுக்கு வணக்கம் புரிய வேண்டியிருக்கிறது. என கூறியதால், எம்பிரான் (ஸல்.) அவர்கள் அதிக கோபமேலிட்டவர்களாய் முகஞ் சிவந்து "உங்களைப் பார்க்கினும் நான் அதிகமாக ஆண்டவனுக்குப் பயப்படுகின்றேன்" எனக் கூறினுர்கள்.

"வார்த்தைப்பாட்டை நிறைவேற்றுமல் அதற்கு மாற்றம் செய்வதும், பொய் பேசுவ

தும், அமானிதம் வைக்கப்பட்டால் அதனை மோசஞ் செய்வதும் முனபிகீன்களின் அடையாளமாகுமென'' எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஒருநாளன்று உலக தயாளர் சற்குண சிலர் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களினிடையே வீற்றிருக்குங்காலை ஒருவர் அங்கு விஜயஞ்செய்து "ஈமான்" என்பது யாதாகுமென வினவினர். அதற்கு எம்பிரான் (ஸல்.) அவர்கள் "ஆண்டவனை யும், அவனது தூதர்களையும் அவனுடைய சந்திப்பையும், அவனது ரசூலையையும் உறுதி கொண்டு மரணித்தவர்கள் ஒரு காலத்தில் எழும்புவதைஉண்மைகொள்வதுமாகுமென'' கூறினார்கள். அதற்குப்பின் அம்மனிதர் "இஸ்லாம்'' என்பது யாதாகுமெனக் கேட்டார். எம்பெருமானார் (ஸல்.) அவர்கள், "இஸ்லாமென்பது ஆண்டவனுக்கு இணை வையாதிருப்பதும், அவனுக்கு வணக்கம் புரிவதும், தொழுகையை சரிவரத் தொழுது வருவதும், ஜகாத் கொடுப்பதும், நோன்பு நோற்பதுமாகு மெனக் கூறினார்கள். உடனே அம்மனிதர், எம்பிரான் (ஸல்.) அவர்களை நோக்கி, இவ்வாறு வணக்கம் புரிவதுகொண்டு யாது பிரயோசனம் ஏற்படும் எனக்கேட்டார். அதற்கு எம்பிரான் (ஸல்.) அவர்கள், ஆண்டவனை நீங்கள் பார்த்தால் எவ்வாறு வணக்கம் புரிவீர்களோ அவ்வாறே வணக்கம் புரியுங்கள். அப்பதவியை ஏற்றுக்கொள்ள இயலாது போயின் ஆண்டவன் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்பதையாகிலும் மனதில் வைத்து வணக்கம் புரியவேண்டும்'' எனக் கூறினார்கள். பிறகு அம்மனிதர் 'கியாமத்' எப்பொழுது ஏற்படுமெனக் கேட்டார். அதற்குஎம்பெருமானார்(ஸல்)அவர்கள், கியாமத்நாள் விஷயமாக எவரிடம் கேழ்க்கப்படுகிறதோ அவரைப்பார்க்கினும் கேழ்க்கிறவர் அதுவிஷயத்தை மிகத் தெரிந்தவராக இருக்குமெனக் கூறினார்கள். பிறகும் அவர் வேறு சில வார்த்தைகளைப் பேசிச் சென்றார். உடனேஉலகரெட்சகர் (ஸல்) அவர்கள்சஹாபாக்களை நோக்கி, இதுபொழுது என்னிடம் வந்துசென்றவர் ஜிப்ரயீலாகும். அவர் மானிடர்களுக்கு மார்க்கத்தை விளக்குவதற்காக என்னிடம் வந்து மேலே கூறப்பெற்ற விஷயங்களைப்பற்றி வினவினர் எனக்கூறினார்கள்.

கொஞ்சமேனும் விடாமல் செய்யப்படும் நற்கருமங்களே ஆண்டவனுக்கு மிகமிகப் பிரியமானவைகளாகும். ஆகவே எந்த நற்காரியத்தைப் புரிய முற்பட்டாலும் ஆரம்பசூரர்களாக இல்லாது அக்காரியத்தை இடைவிடாது செய்துவருவதே உத்தம காரியமாகும். தொழுகையை சரியான நேரத்தில் நிறைவேற்றுவதும், அதன்பின் தாய்தந்தையர்களுக்குக் கீழ்படிந்து நடக்கும் சேவையைமேற்கொள்வதும் ஆண்டவனுக்கு மிகப் பிரியமான கருமங்களாகும்.

மானிடர்களில் மேலானவர்கள் யாரென நபிபெருமானார் (ஸல்.) அவர்களிடம் கேழ்க்கப்பட்ட பொழுது "ஆண்டவனுக்கு பயந்து பாவத்தை விட்டு விலகி இருப்பவர்களே மேலானவர்கள்'' என அருள்செய்தார்கள்.

எவன் கோபத்தை அடக்கிக் கொள்கின்றானோ அவன்மீது அல்லாஹ்தஆலா தன் வேதனைசெல்லாது தடுத்துக்கொள்கின்றான். எவன் அல்லாஹ்வினிடத்தில் தன்பாவத்தை மன்னிக்கத் தேடுகின்றானோ அவனது வேண்டுதலை ஆண்டவன் அங்கீகரித்து விடுகின்றான். எவன் நாவை அடக்கிக்கொள்கின்றானோ அவன் குறைகளை மறைத்துவிடுகின்றான். என எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றார்கள்.

தர்மஞ் செய்வதால் பொருள் குறைந்துவிடாது. தன்மீது புரிந்த தவறை மன்னித்து விடுவதால் கௌரவம் போய்விடாது. ஆதலின் எவன் ஆண்டவனுக்காகத் தாழ்மையை அனுசரிப்பானோ அவனை ஆண்டவன் உயர்பதவிக்குக் கொணர்ந்து சேர்ப்பான்.

எவனிடம் கீழே குறிப்பிடப்படும் மூன்று விஷயங்கள் காணப்படுகின்றனவோ அவன் மீது அல்லாஹ்தஆலா தன் நிழலைப்பரப்பி, அவனை சுவர்க்கத்திற் புகவைப்பான். அவை யாவன:—பலஹீனர்களுக்கு உதவி புரிதல், தாய்தந்தையர்களிடம் அன்புடனிருத்தல், வேலையாட்களிடம் கிருபை காட்டுதல் இவைகளே யாகும்.

உனக்கு விருத்தாப்பியம் வருவதற்கு முன்னுள்ள வாலிப பருவத்தையும், வியாதி வருவதற்கு முன்னுள்ள தேக சௌகரியத்தையும், தரித்திரத்திற்கு முன்னுள்ள ஐசுவரியத்தையும், வேலை ஏற்படுவதற்கு முன்னுள்ள சாவகாசகாலத்தையும், மரணத்திற்கு முன்னுள்ள உன்னுடைய ஜீவிப்பையும் உனக்குள்ள பாக்கியங்களாகக் கருதிக்கொள்.

786

حفاظة الإسلام مدراس

காதியானிகளும் முஸ்லிம்கள் தானே ?

காதியானிகள் எவ்வாறான கொள்கையுடையவர்களென்பதை பன்முறையும் நாம் விளக்கியுள்ளோம். அவர்கள், பாஞ்சாலதில் தோன்றி தன்னை நபியென்றும், ஆண்டவனென்றும் தாவாச்செய்து போந்த குலாம் அஹ்மத் காதியானியை நபி என்றும், ரசூலென்றும், ஆண்டவனால் அனுப்பப்பெற்ற இமாம் என்றும் முஜத்தித், மஹ்தி என்றும் வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹ் என்றும் ஒப்புக்கொள்வதுடன் அக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதோரை காபிர்களென்றும் கூறுகிற்கின்றனர். எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் இறுதிநபி யாவார்களென்பது உலகப்பிரசித்தமாகும். இதனை திரு குர்ஆன் பஹிரங்கமாக போதித்துவிட்டது. ஆண்டவனால் அருளப்பெற்ற வேதங்கள் திருக் குர்ஆனோடே முற்றுபெற்றுவிட்டதுடன் இறுதிநாள்வரை மானிடர்களுக்கு அவசியமான சகல கட்டளைகளும் அதன் மூலம் அருளப்பட்டிருக்கின்றது. இனி வேறு வேதமோ வேறு நபியோ அனுப்பப்பட வேண்டிய அவசியமில்லை. எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள், சகல காரியங்களிலும் நிறை பூர்ணமானவர்களாக இருந்ததுடன் திருக் குர்ஆனில் அருளப்பெற்றவாறு அவைகளை மக்களுக்கு அனுஷ்டித்தும் காட்டினார்கள். எனவே மக்களை சீர்திருத்தி உத்தமர்களாக்குவதற்கு வேண்டிய பரிகாரங்களைச் செய்துகொண்டும் அதனை போதித்துக் கொண்டுமிருந்தார்கள். தவிர அக்காலத்தில் மலிந்துகிடந்த அனாச்சாரங்களைக் கெல்லி எறிந்து உலக முழுதிலும் நற்கிரிகைகள் தலைசிறந்திலங்க வேண்டியதற் கவசியமான சகல போதனைகளையும் தம் பக்தகோடிகளுக் கெடுத்தோதினார்கள். தங்களது மார்க்கம் உலகமெங்கனும் பிரலாபித்துச் சிறந்து விளங்கி மக்கள் நற்பெயர் பெறுவதற்கு வேண்டிய சகல சாதனங்களையும் செய்துவைத்தார்கள். அவர்களுடை நற்குணங்களைக் கொண்டும், அரும் பெரும் சேவைகளைக் கொண்டும் எல்லா நபிமார்களுக் கிடையே சிறப்புற்று விளங்கினார்கள். இதனால் தான் அல்லாஹ்தஆலா, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைவிட மேலானவர்களைப் படைக்கவில்லையென அருள் செய்திருக்கின்றான். எனவே அவர்கள் தான் கடைசி நபீ. அவர்களோடு நுபுவ்வத்தென்னும் வாயல் அடைபட்டுப் போய்விட்டதென்பதை நன்கு தெரிந்துகொள்கின்றோம்.

இந்நிலைமையில் மிர்ஸா குலாம் அஹ்மத் என்பார் எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்குப் பின் தன்னை ஒரு நபி என்று தாவாச் செய்தார். அதனால் அவர் பொய்யரும் புழுகருமாகுமென நன்கு நிரூபிக்கப்பட்டுப்போயிருக்கிறது. தவிர அவர் திருக் குர்ஆனுக்கு விரோதமாய்த் தன்னை நபி என்று தாவாச் செய்து போனதால் நிச்சயமாய் அவர் காபிராய் விட்டாரென்பது திண்ணம். எனவே அவரை முஸ்லிம்கள் எவ்விதத்திலும் பின்பற்றுவது கூடாத காரியமாகும். இந்நிலைமையில் அவரை நபிஎன்று நம்பி, அவருடைய கோட்பாடுகளை அனுசரித்து நடப்பவர்கள் காபிராய்விடுவார்களென்பதில் எவ்வாறான சந்தேகமுங்கொள்ள சற்றேனும் இடங் கிடையாது. இதுவே முஸ்லிம்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். இதற்கு மாற்றமாய் அவரைப் பின்பற்றுபவர்களில் இவண் ஒரு சிலர் இல்லாமற் போகவில்லை. துர்அதிர்ஷ்டவசமாய் அவ்வாறு வழிசறுகிய அன்னோரை நற்போதனைகளைக்கொண்டு சன்மார்க்கத்தின் பக்கலழைத்து எம்பெருமானார் (ஸல்.) அவர்களது உம்மத்துகளிற் கொணர்ந்து சேர்க்கவேண்டுவது அவசியமாகயிருக்க, சன்மார்க்கத்தையே சீர்திருத்தத் தாம் இத்தரணியில் அவதரித்திருப்பதாய்ப் பறைசாற்றி வரும் தா. இ. ஆசிரியர்கள், காதியானிகளும் முஸ்லிம்களில் ஒருசாகையினர் என்று கைகூசாது வரைந்து வருகின்றனர். காதியானிகள், எம்பெருமானார் (ஸல்.)

அவர்களுக்குப் பின் ஒரு பொய்யனை "நபி" என்று கூறுவதினாலேயே காபிராய் விடுகின்றனரென சன்மார்க்கக் கட்டளை பிறந்திருக்கும் நிலைமையில், தா. இ. ஆசிரியர்கள் அக்காதியானிகளை எதற்காக முஸ்லிம்களென்று கூறுகின்றனர் என்பது தான் விளங்கவில்லை. எனவே, மிர்ஸா தாம், எம்பெருமானார் (ஸல்.) அவர்களைவிட மேலானவரென்றும், அவர்களுடைய "வஹி" அறிவிப்பில் தவறு ஏற்பட்டுவிட்டதென்றும் கூறிவதினாலா? அன்றி ஹஸ்ரத் மர்யம் (அலை.) விபசாரிஎன்றும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் விபசாரப் புத்திரரென்றுங் கூறுவதினாலா? குர்ஆன் பூமியிலிருந்து எடுபட்டுப் போய்விட்டது, நான் அதனை மறுபடியும் கொண்டு வந்திருக்கின்றேன் என வரைந்திருப்பதினாலா? நான் முஸ்லிம்களுக்கு வாக்குச் சொல்லப்பட்ட மஹ்தீஹாகவும், ஹிந்துக்களுக்கு கிருஷ்ணனாகவும் இருக்கின்றேன் எனக் கூறியதினாலா? வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்டவன் தாம்தான் எனக் கூறினதினாலா இக்கோஷ்டியினரை இவ்வாசிரியர்கள் முஸ்லிம்களென்று கூறுகின்றனர்? இவ் வபாண்டமானவும், இஸ்லாமிய ஷரீஅத்தின் மூலக்கொள்கைக்கு முற்றமுற்ற விரோதமானவுமாகிய கொள்கைகள் சன்மார்க்கத்திற்கு முரண்பாடானதென்பதும், இக்கொள்கையுடையோர் ஒருக்காலும் முஸ்லிமாயிருக்க முடியாதென்பதும் இன்னோருக்குத் தெரியாது போனதேனோ? இந்நிலைமையில் காதியானிகளும் முஸ்லிம்கள்தான் என்று வற்புறுத்தி பன்முறையும் இவ்வாசிரியர்கள் எழுதிவருவதின் இரகசியம் நேயர்களுக்குத் தெரியாததன்று. எனவே அவ்வாசிரியர்கள் நந்தமிழ் நாட்டில் எவ்வகையிலும் வழிகெட்ட கொள்கைகளையே பரத்த முயற்சிக்கின்றனரென்பது நன்கு புலனாகின்றது. ஆதலின் நம் நேயர்கள் இவ்வாறான கொள்கைகள் பரவாமல் தடுக்கத்தக்கன செய்வார்களென மிக மிக எதிர்பார்க்கின்றோம்.

இஸ்லாமிய வாழ்க்கை.

(சென்ற மாதத் தொடர்)

வீட்டின் சுத்தம்.

"வீட்டையும் வாசல்களையும் நல்லவிதமாக சுத்தஞ் செய்யுங்கள்; அல்லாஹ் தஆலா தூய்மையாக இருக்கின்றான்; அவன் சுத்தத்தையே விரும்புகின்றான்" என எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

பள்ளிவாசலின் சுத்தம்.

பள்ளிவாசலின் சுத்தமானது மிகமிக கவனிக்கத் தக்கதேயாம். ஒருநாளன்று யாரோ ஒருவர் பள்ளிவாசலின் சுவற்றில் துப்பி இருப்பதை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் பார்த்து அளவற்ற மனவருத்தமடைந்து உடனே துப்பரவு செய்யும்படி கட்டளை பிறப்பித்தார்கள். எனவே பள்ளிவாசல் சுத்தமாக யிருக்கவேண்டுமென்பதைக் கருதியே துர்வாடையுடைய வஸ்துக்களைத் தின்றுவிட்டு, யாரும் பள்ளிவாசலுக்கு வரக் கூடாதென கட்டளை பிறப்பித்திருக்கின்றார்கள்.

ஒருநாளன்று ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் தங்கள் பிரசங்கத்தில் "மானிடர்காள்! இது பொழுது பச்சை வெங்காயம் பூண்டு இவைகளைத் தின்றுவிட்டுப் பள்ளிக்கு வருகின்றீர்கள். ஆனால் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் இவ்வாறு வருபவர்களை பள்ளியிலிருந்து வெளியாக்கிவிடும்படி கட்டளை பிறப்பித்திருந்தார்கள்" எனக் கூறினார்கள். (அவைகளை தின்ன நாடுவோர் அதன் வாடை நீங்கி விடும்படி சமைத்துச் சாப்பிடவும்.)

தேகாப்பியாசம்

இஸ்லாமிய விரோதிகளையும் பகைவர்களையும் எதிர்ப்பதற்குப்போதிய சக்தியைஉண்டு பண்ணிக் கொள்ளுங்கள். மானிடன் பலக்குறைவுள்ளவனாகயிருப்பது அவன் மேன் பதவி அடைவதை தடைசெய்வதாக இருக்கின்றது. எனவே பலக்குறைவான ஒரு முஸ்லிம் அநேக நேரங்களில் மார்க்கக் கடமைகளையுங்கூட நிறைவேற்றுவதைவிட்டு பின்னடைந்துவிடுவான். இதற்காகத்தான் எம்

பெருமானர் (ஸல்.) அவர்கள், "புஜபல பராக்கிரமசாலியான ஒரு முஸ்லிம் பலக் குறைவான ஒரு முஸ்லிமைப் பார்க்கினும் மேலானவனாக யிருக்குமென"க் கூறியிருக் கின்றார்கள்.

ஓடுவது

சஹாபாக்கள் யுத்தங்களில் ஓடும் வேலையி லீடுபட்டு சுத்த வீரியத்தனத்தோடு வெற்றி பெற்றிருக்கின்றார்கள். எனவே ஓடுவதில் அஸ்ஸாரிலுள்ள ஒரு சஹாபியை யாரும் வெற்றிபெறவில்லை. ஆகவே ஓடுவது தேகாப்பி யாசத்திற் சிறந்த மேலான காரியமாகும். எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் ஓடுவதை மிக மிக சிலாக்கித்துக் கூறியிருக்கின்றார்கள்.

குதிரை சவாரி.

விளையாட்டுகளில் ஆண்டவனுக்குப் பிரிய மானதானது, குதிரை சவாரி செய்வதும், அம்பு எறிவதுமாகுமென எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். எனவேஇவ்வேலைகள் சதாவும் மானிடனுக்கு சந்தோஷத்தை அளித்துக்கொண்டிருக்கும்.

அம்பு எறிதல்.

சங்கைவான்களான சஹாபாக்கள் அம்பு வீசும் வேலையை அதிகப் பிரீதியோடு நடத்தி வந்தார்கள். "பனூஇஸ்மாயீல்களே! அம்பு எறியும் வேலையை பழக்கத்திற்குக் கொண்டு வாருங்கள். உங்கள் பாட்டனாரும் அம்பெய் திருக்கின்றார்கள் என எம்பெருமானர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தேகாரோக்கியம்.

அல்லாஹ் தஆலா தன் பாவங்களுக்காக மன்னிப்புத்தேடுபவனையும், சதா துப்பரவாக யிருப்பவர்களையும் அதிகமாகப் பிரீதி கொள் கின்றான். எனவே இஸ்லாம் மார்க்கமானது மானிடன் தேகாரோக்கியமாக இருப்பதற்கு சுத்தத்தை ஒரு கட்டாயமாக ஆச்கி வைத் திருக்கின்றது.

ஆராய்ச்சி மேடை.

(அபுல்ஹஸன் சாஹிப் மத்ராஸீ)

சோதரீர்!

தா. இ. ஆசிரியர்களால் சுயமே இயற்றப் பெற்றதாகக் கூறப்படும் ஜவாஹிருல் புர்கான் என்னும் நூலில் வரையப்பட்டிருக் கும் வியாக்கியானங்களிற் பெரும்பாகம் குர் ஆன், ஹதீதுகளுக்குமுற்றமுற்ற விரோதமாக யிருக்கிற தென்பதை பலராலும் பன்முறை யும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறதென்பது யாவருமறிந்ததே. எனவே அதில் மலிந்து கிடக்கும்பற்பலதவறுகளைத்திருத்தி ஒழுங்கு செய்து விடுவதாக அவர்கள் எத்தனையோ முறைஅறிவித்திருந்தும், இதுவரை ஒன்றுமே செய்யாது மௌனஞ் சாதித்துவிட்டு இது பொழுது தங்கள் கொள்கைதான் சரியெனக் கூற முற்பட்டிருக்கின்றனர். எனவே இதனடி யில் திரு குர்ஆனின் பல வசனங்களையும், அதற்கு எம்பெருமானர் நபீய்யகரீம் (ஸல்.) அவர்களது திருவாக்கியங்களை அனுசரித்து மகான்களான இமாம்களால் வரையப்பெற் றிருக்கும் விரித்துரைகளையும், அவ்வசனங்க ளுக்கு இவ்வாசிரியர்கள் செய்திருக்கும் தப் பருத்தங்களையும் தவறான வியாக்கியானங் களையும் விபரமாய் விளக்கப்போவதால் நேயர்கள் ஊன்றிப் படித்து பயன்பெறு வார்களாக.

பின்னும் (நினைத்துப்பாருங்கள்) ஒரு மாட்டை நீங்கள் அறுக்கும்படி உங்களுக்கு அல்லாஹ் (தஆலா) நிச்சயமாக கட்டளையிடுகி றானெனமூஸா தன் சமூகத்தார்(களாகிய உங் கள் மூதாதை) களுக்குக் கூறியபோது, அவர் கள் நீர் எங்களைப் பரிகாசஞ் செய்கின்றீரா? எனக் கேட்டார்கள். (அதற்கு மூஸா) நான் (பரிகாசஞ்செய்யும்) மடையர்களில் (ஒருவ னாக) ஆவதைவிட்டும் அல்லாஹ்வினிடம் பாதுகாப்பைத் தேடுகின்றேன் எனக் கூறி னார். (அதற்கவர்கள்) அது (அதன்வயது)

இன்னதென்று எங்களுக்கு விபரித்தறிவிக்கும்படி உம்முடைய ரப்பை நீர் எங்களுக்காகக் கேளும் என அவர்கள் (மூஸாவிடம்) கூறினார்கள். (அதற்கு) நிச்சயமாக அது கிழமுமல்ல கன்று மல்ல. இதற்கு மத்திய பருவத்திலுள்ள ஒருமாடு எனத் திட்டமாக அவன் சொல்லுகின்றான் என (மூஸா) கூறி, உங்களுக்கிடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள் என்றார்.

அவர்கள், அதன் நிறம் என்ன என்று எங்களுக்கு அறிவிக்கும்படி நீர்உம்முடைய ரப்பை எங்களுக்காகக் கேளும் எனக் கூறினார்கள். அதற்கு (மூஸா) நிச்சயமாக அது பார்ப்பவரின் மனதைக் கவரக்கூடிய கலப்பற்ற மஞ்சள் நிறமான ஒரு மாடு எனத் திட்டமாக அவன் கூறுகின்றான். என்று சொன்னார்கள்.

அவர்கள், அம்மாடு எங்களை நிச்சயமாய்த் தடுமாரச் செய்கின்றது. அது எதுவென எங்களுக்கு விபரித்தறிவிக்கும்படி உம்முடைய ரப்பை எங்களுக்காக (பின்னும் ஒருமுறை) நீர்கேளும். அல்லாஹ் நாடினால் இனி நிச்சயமாக நாங்கள் நேர்வழி பெற்றுவிடுவோம் எனக்கூறினார்கள்.

(அதற்கு மூஸா) நிச்சயமாக அது பூமியில் உழவடித்தோ, பயிருக்குத் தண்ணீர் இறைத்தோ கசங்காததும் அதில் யாதொரு வடிவுமில்லாததுமான மாடென்று நிச்சயமாக அவன் கூறுகின்றான் எனச் சொன்னார். (அதற்கு) அவர்கள் இப்பொழுதுதான் நீர் சரியான விபரம் கொண்டுவந்தீர் எனக் கூறி அதைச் செய்ய மனமில்லாமலே அதை அவர்கள் அறுத்தார்கள். மேலும் நீங்கள் ஒருவனை கொலைசெய்துவிட்டு அதில் (தப்பித்துக் கொள்வதற்காக உங்களுக்குள் ஒருவர்மீது ஒருவர் பழிசுமத்தி நீங்கள் தர்க்கித்துக் கொண்டபொழுது கொலை விஷயத்தில்) நீங்கள் மறைத்து வைத்திருந்ததை அல்லாஹ் வெளிப்படுத்துவதற்காகவே அம் மாட்டை அறுக்கும்படி உங்களை ஏவுகின்றவனாக இருந்தான்.

ஆகவே (யூதர்களே! நீங்கள் அறுத்த மாடாகிய) அதில் ஒருபாகத்தைக் கொண்டு (கொலையுண்ட) அவனை அடியுங்களென நாம் கூறினோம். (அடித்தவுடன் கொலையாளியை அறிந்துகொண்டார்கள்) இதேவிதம் மரித்தவர்களை அல்லாஹ் உயிர்ப்பிப்பான். தவிர (இதை) நீங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு அவன் தன்னுடைய தத்துவங்களை அறியக்கூடிய திருஷ்டாந்தங்களை உங்களுக்குக் காட்டுகின்றான். 2-67முதல் 73 வரை.

அதாவது மூஸா(அலை)அவர்களது காலத்தில் இஸ்ரவேலர்களில் ஒரு சீமான் இருந்தார். அவரிடம்மிதமிஞ்சியஐசுவரியமிருந்தும் அவருக்கு ஒரே பெண்குழந்தைதான் இருந்தது. அவருடைய சிற்றப்பன் மகனொருவன் ஏழையாக இருந்தான். அவன் அவருடைய மரணத்திற்குப்பின் அனந்தர பாத்தியதை அடைய அருகதையுடையவனாகும். இந்நிலைமையில் அவருடைய ஏகப் புத்திரியை விவாகஞ் செய்து கொண்டு அச்சொத்து முழுதையும் இதுபொழுதேஅவனடையவேண்டுமென்னும் கெட்ட எண்ணங் கொண்டு அவரை இரவில் கொலை செய்து வேறொருவர் வாயிலண்டைப் போட்டு விட்டான். காலையில் தன் பெரியதந்தையை யாரோகொன்று விட்டனரென்றும், அதற்குப் பழி வாங்கவேண்டுமென்றும் பலர்மீது கொலைக் குற்றத்தைச் சுமர்த்தினான் அதனால் ஒருவருக் கொருவர் சச்சரவுசெய்துகொண்டுகடாசியில்கைகலந்து பெரும்போர் துடங்கவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டுவிட்டது. அதுவிஷயத்தைஎல்லோரும் ஆலோசித்து முடிவாக விவகாரத்தை ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களிடம் கூறி, ஆண்டவனிடம் கேட்டு கொலையாளியை அறிவித்துக்கொடுக்கும்படிவேண்டிக்கொண்டார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்து, அல்லாஹ் தஆலா ஒரு மாட்டை அறுக்கும்படி கட்டளையிடுகின்றான் எனத் தெரிவித்தார்கள். இஸ்ரவேலர்கள் இக்கட்டளையின் இரகசியத்தை அறியாமலோ, அன்றி அறிந்து அதன்மீது ஆச்சரியப்பட்டோ மூஸா(அலை.) அவர்களை நோக்கி, எங்களுடன் பரிகாசமா செய்கின்றீர்கள்? எனக் கேட்டார்கள். அதற்கு மூஸா (அலை.) அவர்கள், தாங்கள் கூறுவது ஆண்டவனால் இடப்பெற்ற கட்டளை என அறிவிக்கவே, யூதர்கள் அம்மாட்டின் விவரங்களை வினவத் தொடங்கினார்கள். இதுவன்றி ஆரம்பத்திலேயே அவர்கள் ஏதாவது ஒரு மாட்டை அறுத்திருப்பார்களாயின் அக்கட்டளையை நிறைவேற்றியவர்களாய் விடுவர். ஆனால்அவர்கள் அது

விஷயமாய்ப் பற்பல கேள்விகளை வினவிக்கொண்டே போனதால், இறைவனும் அதற்கேற்ப அம்மாட்டின் வர்ணிப்புகளையும் அதிகப்படுத்திக்கொண்டே போகும்படி நேர்ந்தது. இறுதியில் "அல்லாஹ் தஆலா நாடினால் நாங்கள் நேர்வழி பெறுவோம்" என இஸ்ரவேலர்கள் கூறியிருந்ததால் வர்ணிப்புகள் யாவற்றும் பொருந்திய மாடொன்று அவர்களுக்குக் கிடைக்கும்படி ஆண்டவன் செய்தான். அதாவது இஸ்ரவேலர்களில் சாலிஹான ஒரு மனிதர் இருந்தார். அவர் மரணமாகுங் காலத்தில் தன் சிறு குழந்தைக்காக ஒரு காளைமாட்டை விட்டிருந்தார். அது மனிதர்களைக் கண்டால் வெறிக்கக்கூடியதாக யிருந்ததால் காட்டிலேயே நின்று வளர்ந்துகொண்டிருந்தது. எனவே, அச்சிறுவருக்கு வயது வந்த பின் அம்மாட்டை காட்டிலிருந்து பிடித்துக் கொணர்ந்து வைத்திருந்தார். அம்மாட்டில் தான் ஆண்டவனால் அறிவிக்கப் பட்டிருந்த சகல வர்ணிப்புகளும் பொருந்தி இருந்தது. ஆகவே அதைவாங்குவதற்கு இஸ்ரவேலர்கள் முயற்சிக்குங்கால் அம்மாட்டை யுடையோர் அதற்கு மிதமிஞ்சிய கிரயம்கேட்டதால், முடிவில் அம்மாட்டின் தோலி நிரம்ப பவுன் நிறப்பிக் கொடுப்பதென்று பேசி, பெருங் கஷ்டத்தோடு அதைவாங்கி ஆண்டவனது கட்டளைப்பிரகாரம் அறுத்து அதன் நாக்கை எடுத்து கொடலையுண்டிருந்த தனவந்தர்மீதுஅடித்தார்கள். உடனே அவர் உயிர்ப்பித்தெழுந்து "என் சிற்றப்பன் மகன்தான் என்னைக்கொலைசெய்தானென" அறிவித்துவிட்டு மீண்டும் மரணமாய்விட்டார். எனவே கொலை செய்தவன் அக்குற்றத்திற்காக பழிவாங்கப்பட்டான் அதனால் அவர்களுக்கிடையேஏற்பட்ட சச்சரவுநீங்கிற்று. இதைத்தான் அல்லாஹ் தஆலா தன் திருமறையில் விபரமாய்க்கூறி இருக்கிறான். இதுவிவரங்களை அல்லாமா ஜரீர் அவர்கள் தக்க ஆதாரங்களைக் கொண்டு நிவாயத்துச்செய்திருக்கின்றார்கள். இதைப்பின்பற்றியேதான் சகல விரித்துரைகர்த்தாக்களானஇமாம்களும், பனீஇஸ்ராயீல்களில் நடைபெற்ற இச்சம்பவத்தைத்தான் இவ்வத்தியாயத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறதென்று வரைந்திருக்கின்றார்கள். எனவே மேலே கூறப்பெற்றுள்ள ஏழு திருவசனங்களும் இஸ்ரவேலர்களில் நடந்த கொலை சம்பந்தமாகவே அறிவிக்கின்றன வென்பது வெள்ளிடை.

விஷயமிவ்வாறிருக்க, தா. இ. ஆசிரியர்கள் இத்திரு வசனங்களுக்குச் செய்திருக்கும் நவீன வியாக்கியானங்களை விவரிப்பாம்.

அதாவது மேலே கூறப்பெற்ற ஏழு திருவசனங்களையும்அவர்கள் இரண்டு பாகமாகப் பிரித்து முந்திய ஐந்து திரு வசனங்களில் மாடு அறுக்கும் கட்டளையின் விவரங்களையும், பிந்திய இரு திரு வசனங்களில் ஈஸா (அலை.) அவர்களை சிலுவையில் அறையப்பட்ட விஷயமாகவும் கூறப்பட்டிருக்கிறதென பாகுபாடு செய்திருக்கின்றனர். இதுசம்பந்தமாய்அவர்கள் ஜவாஹிருல்புர்கான் 174-ம் பக்கத்தில் கூறியிருப்பதாவது:—

இவ்விடத்தில் ஆண்டவன் கூறும் கட்டளையானது பனீஇஸ்ராயீல் கூட்டத்தாரின் பசுவின் பூஜையை ஒழிப்பதற்காகத்தானென்று நன்கு தெரிந்துகொள்கிறோம் என்பதே. இங்கு, பனீஇஸ்ராயீல்களுக்கு மாட்டை அறுக்கும்படி ஏற்பட்ட கட்டளையானது, அவர்களின் கோபூஜையை ஒழிப்பதற்காக மட்டுந்தான் என்றும், அம்மாட்டைஅறுத்ததானது கொலையாளியை வெளியாக்க அல்லவென்றும் தா. இ. ஆசிரியர்கள் வரைகின்றார்கள். இது, அவர்கள் குர்ஆன் திருவசனங்களின் தாத்பரியங்களை நன்கு விளங்கிக் கொள்ளாததின் காரணமேயன்றி வேறில்லை. இதனால்தான் அடியில் கண்டவாறு 178-ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள் அதாவது:—

> சிற்றப்பனுடைய ஐசுரியத்தையும் பெற்றுக்கொண்டு அவனுடைய மகளையும் விவாகஞ் செய்துகொள்ள வேணுமென்னும் எண்ணத்தினால் ஒருவன் தன்னுடைய சிற்றப்பனைக் கொன்றுவிட்டானென்றும் பிறகு வதை செய்யப்பட்ட ஒரு பசுவின் மாமிசத்தால் ஸ்பரிசிக்கப்பட்டவுடன் அந்த செத்த பிரேதம் உயிர்பெற் றெழுந்து தன்னைக் கொன்றவனுடையபெயரை விளக்கிற்றென்றும் அந்தக் கதை காணப்படுகின்றது. இந்தப் பசுவே முன் பிரிவின் இறுதிப் பகுதியில் சொல்லப்பட்ட பசுவென்று அபிப்பிராயப்படுகின்றார்கள். ஆனால் ஒருவனுடைய சொத்திற்காகவும் அவனுடைய பெண்ணுக்காகவும் ஒருவனை ஒருவன் கொலை செய்வதானது இவ்வுலகில் ஒரு சகஜமான காரியமாய்க் காணப்படுகின்றது. இப்படிப்பட்ட

> ஒரு சர்வ சாதாரணமான விஷயத்தைப் பற்றி இந்தத் திருமறையானது இங்கே வியவகரிப்பதற்கு என்ன அவசியம் நேரிட்டிருக்கிறது என்பதே.

சோதரீர்!

பனீஇஸ்ராயீல் கூட்டத்தாரில் இக்கொலை பாதகம் ஏற்பட்டிருந்தபோது கொலை செய்தவன் இன்னாரென்று விளங்காமல் ஒருவர் மீது ஒருவர் பழி சுமத்தினர்; கொலையில் சம்பந்தப்படாதவர்கள்மீதும் அக் கொலைக் குற்றத்தைச் சுமத்தவுஞ் சிலர் முயற்சித்தனர். இதனால் அவர்களுக்கிடையே பெரும் போர் நிகழ்வதற்கு ஆரம்பமாயிற்று. இதனைத் தடுப்பதற்காகவே அல்லாஹ்தஆலா கொலை செய்தவனைக் காட்டிக்கொடுப்பான் வேண்டி மாடு அறுக்கும்படி கட்டளையிட்டான். எனவே அவ்வாறு அவர்கள் மீது அல்லாஹ்தஆலா செய்த நன்றியை அவர்களது சந்ததியார்கட்கு இத்திரு வேதத்தின் மூலம் எடுத்துக் காண்பிக்கின்றான். இதனை அவ்வாசிரியர்கள் விளங்கிக்கொள்ள சக்தியில்லாது திருவசனத்தின் கருத்தை திரித்துப் புறட்டிக் கூற முற்படுகின்றனர்.

மேலும் அவ்வாசிரியர்கள் வரைவதாவது:—

> இத் தன்மைத்தாகிய கொலையானது அதாவது அவர்களுக்குள் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுவிடும்படியா யிருந்த கொலை யானது, ஈஸா நபியின் (அலை.) சிலுவையின் விஷயத்தைப்பற்றித் தான் கூறுவதென்று கொள்வதில்கிஞ்சிற்றும் சந்தேகமில்லை......ஆதலின் இவ்விடத்தில் (ஈஸாநபிக்கு) மரணத்தைப் போன்ற நிலைமையானது உண்டாக்கப்பட்டது என்பதுதான் நிச்சயமானபொருளாய்க் காணப்படுகின்றது. ஏனெனில் ஈஸாநபி அவர்கள் சிலுவையின் மீது மூன்றுமணி நேரந்தான் அறையப்பட்டிருந்தார்கள். இவ்வளவு குறியகால அளவுக்குள் ஒருவரும் சிலுவையின் மீது மரணமடைந்து விடுவது முடியாது என்பதே.

இத்திருவசனங்களில் கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கும் மனிதர் சாமான்ய மானவரன்று. ஈஸா (அலை.) அவர்களைக் கொலைசெய்ய முயற்சித்ததைத்தான் குறிக்கின்றதென்று சவிஸ்தாரமாய் எழுதியிருக்கின்றனர். எனவே ஈஸா(அலை.) அவர்களை யகூதிகள் சிலுவையில் அறைந்து வைத்து விட்டார்களென்று இவ்வாசிரியர்கள் கூறுகின்றனர். அல்லாஹ் தஆலோவோ "அவர்களை (ஈஸா அலை. யை) அவர்கள் (யூதர்கள்) கொன்றுவிடவுமில்லை சிலுவையில் அறைந்து விடவுமில்லை" என்று எவ்வித சந்தேகமுங் கொள்வதற்கு இடமில்லாது தெளிவாய்க் கூறியிருக்க, "சிலுவையில் அறைந்துவிடவில்லை" என்பதற்கு "சிலுவையிலறைந்து மரணிக்கச் செய்யவில்லை" என்று தப்பர்த்தஞ்செய்து, ஹஸ்ரத் ஈஸா(அலை) அவர்களை எஹூதிகள் சிலுவையிலறைந்து விட்டதாகவே, குர்ஆனின் பஹிரங்க போதனைக்கு மாற்றமாய் திருக்குர்ஆனுக்கு வியாக்கியனம் எழுதியிருக்கிறார்கள். இவர்களது ஈமானின் போக்குத்தானென்னே! இவர்களது புத்தி போனவாறு தானென்னே!!

மேலும் இவ்வாசிரியர்கள் கடைசி திருவசனத்திற்குச்செய்திருக்கும்மொழிபெயர்ப்பாவது:—

> ஆதலின் அவனை (அந்த ஜீவனை) அதன் (குலைக்குறிய செயலின்) ஒரு பகுதியைக் கொண்டு அடியுங்களென்று நாம் சொன்னோம் என்பதே.

சோதரீர்! முந்திய வசனங்களுக்கு ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலறையப்பட்டார்களென்று கருத்தமைத்துக் கொண்டனர். இத்திருவசனத்திற்கு அவ்வாறு சிலுவையில் அறைந்து கொலைசெய்யும் செயலின் ஒரு பகுதியைக் கொண்டு மட்டும் அடியுங்களென்று அதாவது சொற்பமாக அடியுங்களென்று ஆண்டவன் கூறியதாக வியாக்கியானஞ் செய்கின்றனர். இவர்களினது இக் கூற்றுப்படி ஈஸா (அலை) அவர்களை சிலுவையிலறையப்படும் போது, அவ்வாறுசெய்த கொலைபாதகர்களை நோக்கி கொஞ்சமாக அடியுங்களென்று ஆண்டவன் அறிவித்ததாக ஏற்படுகின்றது. எனவே இதனால் அப்பாதகர்கட்கு வஹீ அறிவிக்கப்பட்டதாக ஏற்படுகிறதன்றோ? இவ்வாறு கூறும் ஆசிரியர்களின் புத்தி போனவாறுதானென்னே!

இஸ்ரவேலர்கள் அறுத்த மாட்டின் ஒரு துண்டைக் கொண்டு கொலையுண்ணப்பட்டவர் அடிக்கப்படவே அவரெழுந்து தன்னைக் கொன்றவன் இன்னாரென்று அறிவித்துக் கொடுத்தார். இஃதோர் அற்புத நிகழ்ச்சியாகும். இதனை அல்லாஹ்தஆலா ஹஸ்ரத்

மூஸா (அலை.) அவர்கள் மூலம் வெளியாக்கினன். காதியானிகள் திரு குர்ஆனில் கூறப்பட்ட சகல அற்புதங்களையும் மறுப்பவர்களென்பது உலகப் பிரசித்தம். அதேபோல் இத் திருவசனத்திலுள்ள இவ்வற்புத நிகட்சியையும் மறுத்து அதற்குப் பொருத்தமற்ற நூதன வியாக்கியானஞ்செய்ய முற்பட்டிருக்கின்றனர். எனவே இவ் வசனத்தில் கொலையுண்ணப்பட்டதாகக் கூறப்படும் மனிதர் ஈஸா (அலை.) அவர்கள்தானென்று ஆசிரியர்கள் தப்பர்த்தஞ் செய்துவிட்டதால், அதற்கு முன்பின்னுள்ள வசனங்களையும் திரித்துப் புறட்டிக் கூறவேண்டிய அவசிய மேற்பட்டுவிட்டது. ஆதலின் அவர்கள் செய்த அர்த்தங்கள் யாவும் அனர்த்தமாகவே வந்து முடிந்துவிட்டது.

இதனுல்தான் எம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், திருக்குர்ஆனுக்கு தமதிஷ்டப்படி யாராகிலும் வியாக்கியானஞ் செய்வாராயின் அவர் நிச்சயமாய்க் காபிராய் விடுகின்றனரென்றும், அவருடைய ஒதுங்குந்தானம் நரகமாகயிருக்குமென்றும் அறிவித்திருக்கின்றூர்கள். எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் சிலுவையில் அறையப்பட்டார்களென்று கூறுவது அல்லாஹ் தஆலாவின் சொல்லுக்கு நேர்முரணுனதாகும். இவ்வாறு நிர்ணயங் கொள்ளக் கூடியவர்கள் நிச்சயமாய் முர்தத்தாய் விடுவார்களென்பதில் கிஞ்சிற்றும் சந்தேகங் கிடையாது. காதியானி முஹம்மத் அலியால் எழுதப்பட்ட பயானுல் குர்ஆன் என்னும் நூலிலும் இவ்வாறேதான் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றது. அதனைப்பின்பற்றித்தான் தா.இ. ஆசிரியர்கள் இவ்வாறு தப்பர்த்தஞ் செய்துவிட்டார்களென்பதில் ஐயமில்லை. இத்தப்பான வியாக்கியானங்களைப் பார்த்து முஸ்லிம்கள் தங்கள் ஈமானைக் கெடுத்துக்கொள்ளாதிருப்பார்களாக.

ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் சிலுவையிலறையப்பட்டார்களென்பது யூதர் கிறிஸ்தவர்களின் கொள்கையாகுமென்பது யாவருமறிந்ததே. இக்கெட்ட கொள்கையைத் திருத்தி ஒழுங்குசெய்து விடுவதாக தா. இ. ஆசிரியர்கள் வரைந்திருந்தனர். எனவே இதுவரை அவ்வாறு ஒன்றுஞ்செய்யாது, ஈஸா (அலை.) அவர்களைப்பற்றி முஸ்லிம்களுக்கென்ன அவ்வளவு அக்கரை ஏற்பட்டுப் போய்விட்டது எனமழுப்பி எழுதி தங்கள் பழைய கொள்கையின்மீதே பின்னும் ஸ்திரமாயிருந்து வருகின்றனர். ஈஸா (அலை.) அவர்கள் பரிசுத்தமான நபியாகயிருக்கும். அவர்களுடைய பரிசுத்தத்தைப்பற்றி குர்ஆனின் பல திருவசனங்களும் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் விஷயமாய் திருக்குர்ஆன் என்ன போதிக்கின்றதோ அதைத்தான் முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு மாற்றமான கொள்கைகளை எல்லாம் எதிர்த்துத் தள்ளுவது முஸ்லிம்களின் கடமையாகும். எனவே தா. இ. ஆசிரியர்கள் தங்கள் பிடிவாத குணத்தை விட்டொழித்து, சன்மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பார்களாக.

குர்ஆனின் அற்புதசக்தி.

"குர்ஆன்" என்னும் வார்த்தையே இஸ்லாத்தின் சுத்த சத்தியத்திற்கோர் முன் மாதரியான பஹிரங்க அத்தாக்ஷியாயிருக்கின்றது. இப்பிரபஞ்சத்தின் கண் இதைப்போன்ற திருவேதம் வேறெதுவுங் கிடையாதென்பது திண்ணம். ஏனெனின், குர்ஆன் ஷரீபானது இஸ்லாமிய மக்களால் இரவும் பகலும் பாராயணஞ் செய்யப்படுகின்றது. மேலும் அதனை சாஸ்வதமாய்ப் பாதுகாத்தருளும் பொறுப்பை சர்வலோக இரக்ஷகனுன ஆண்டவன், தன்பால் ஏற்றுக் கொண்டுள்ளான். எனவே குர்ஆனின் மொழியாகிய அரபிவாசகங்களும், அதன் ஒவ்வோர் அக்ஷரங்களும் ஓர் இம்மியளவும் மாற்றப்படாமல் பல நூற்றுண்டுகளாய்ப் பாதுகாக்கப்பட்டு நம்மவர் முன் திகழ்கின்றதைக் காண்கின்றேம்.

மேலும் குர்ஆன் ஷரீப்தான் சகலவிஷயங்களும் சர்வத் தத்துவார்த்தங்களும் நிறையப்பெற்ற பரிபூரணக் கிரந்தமாயிருக்

கின்றது. ஆகையால் அக் குர்ஆன் போதனை யின் அனுஷ்டானம் புரியப்படாவிடின், உலகார்த்த முன்னேற்றமும், பரலோக வாழ்வில் முக்தியும் எவ்வாற்றாலும் பெற்றுய்வது முடியாத காரியமென்பது திண்ணம்.

சிலகாலத்திற்கு முன் ஆக்ரா, ஊத் ஆகியமாகாணங்களின் லெப்டினட் கவர்னராயிருந்தவரும், நபிகணூதர் சரிதை என்னும் நூலும், கிலாபத்தின் முன்னேற்றம் அதன் சீர் நிலைமை வீழ்ச்சி என்னும் நூலும் எழுதியவரும், கிறிஸ்தவ மதத்தின்மீது பிடிவாதமாக இருந்தவருமாகிய அறிஞர் ஸர்வில்லியம் முயூர்என்பார் பரிசுத்த குர்ஆனை மிகமிக சிலாகித்துக் கூறியிருக்கின்றார். அவர் மதக்குரோதம் மிக்க ஒரு கிறிஸ்துவராகயிருந்தும் "பைபிள் வேதமானது அராபிய சமுதாயத்தார்பால் வெளிப்படையாய் எத்தகைய குணப்பாட்டையும் செய்து விடவில்லை. ஆனால், குர்ஆன் வேதமானது அவர்களுக்கு தக்க ஏகத்துவத்தை போதித்துவிட்டது. என்று ஓரிடத்தில் கூறியிருக்கின்றார்.

மிஸ்டர் கார்லைல் என்பவர், ஆங்கிலப் பாஷையில் மகா அறிஞராகவும் எழுத்தாளராகவு மிருந்தவராவர். அப்படிப்பட்டவர் குர்ஆன் ஷரீபின் மகாத்மியத்தைப் பற்றி எழுதுவதாவது :—" குர்ஆன் வேதத்தில் சத்திய அத்தாக்ஷிகள் இரத்தினமாக அதன் சகல அருத்தங்களிலும் அமைந்திருக்கின்றது. அந்த அத்தாக்ஷிகள்தான் காட்டுமிராண்டிகளாயிருந்த அரபியர்களை இணையிலாச் சீர்திருத்தம்பெற்றவர்களாய்ச்செய்துவிட்டது என்பதே என் சொந்த அபிப்பிராயம். மேலும் முடிவாய்க் கூறுமிடத்து இந்த வேதமானது, எல்லாவற்றிலும் ஆதி பூர்வமானதும், எல்லாவற்றிலும் கடைசியாய் வெளிப்பட்டதுமா யிருக்கின்றது. குர்ஆனானது தன்னுள் அமையப்பெற்றுள்ள சிறப்புக்களினாலும் போதனைகளினாலும் சகல குணாசார ஒழுக்கங்கட்கும் மூலப்பொருளாயிருக்கின்றது. ஆகையால் எல்லாவிதமான நல்லம்சங்கள் அந்த குர்ஆனிலிருந்தே வெளிப்பட்டதெனலாம்." என்பதே

மேலும் Lectures on Heroes (அதாவது, 'சிரேஷ்டர்களைப் பற்றிய சொற்பொழிவுகள்) என்னும் கிரந்தம் மிஸ்டர் ஹெக்ஸ் என்பவரால் எழுதப்பட்டதாகும். அதில் அவர் எழுதியிருப்பதாவது :—" முஹம்மத் (ஸல்.) உடைய காலத்துக்கு முன்னர், அராபிய ஜனங்கள் மதுபானப் பழக்கத்திலும், சூதாட்டங்களிலும் மிகவும் பழக்கப்பட்டு அதிலேயே ஆழ்ந்துபோய்க் கிடந்தார்கள். எனவே, பரிசுத்தகுர்ஆனின் கட்டளையானது அவர்களை விட்டும் அப்பெரும் இரு பாதகங்களையும் அறவே ஒழித்து நிறுத்திவிட்டது. இஸ்லாம் மதத்தில் பக்திவிசுவாசமும், பரிசுத்த வாழ்க்கையும் பெயருக்கு மட்டுந்தானிருக்கிறதென்று கருதிவிடக் கூடாது. வாஸ்தவத்தில் இஸ்லாம் மதம் அனுஷ்டான பூர்வமான தன் போதனைகளைச் சாதித்திருக்கின்றது.எனவே கட்குடியும் சூதாட்டமும் மன்னிப்பதற்கரிதான மகாபாதகமென்று சட்டமேற் படுத்தப்பட்டு ஒரே அடியாய் அப்பாதகம் வேரோடு கெல்லி எறியப்பட்டுப் போயிற்று. 'குர்ஆனைப் பின்பற்றியொழுகுபவர்களை சகல விதமான மனோ இச்சைகள், குரோதங்கள், விரோதங்கள் எல்லாவற்றை விடும் அவ்வேதம் தடைசெய்து விட்டது" என்பதாகும்.

மேலும் பாதரி நிக்கல்ஸன் என்பார் தாம் இயற்றிய "நகர சீர்திருத்தம்" என்னும் நூலில் " நாமெல்லோரும் இஸ்லாமிய மக்களுக்கு நன்றி பாராட்டக்கடமைப் பட்டிருக்கின்றோம். ஏனெனின் அவர்கள்தான் கலைஞான வித்தைகளை இவ்வாங்கில நாட்டுக்கு அனுப்பிவைத்தார்கள்" என்று வரைந்துள்ளார். இங்ஙனம் எதிர்மதவாதிகள் கூறுவது முற்றும் ஒப்புக்கொள்ளத் தக்கதேயாகும். ஏனெனின் அப்லலுமா ஷஹிதத்பிஹில் அஃதாவு (அதாவது விரோதிகள் சாக்ஷியங் கூறியவை மற்றதைவிட சிரேஷ்டமானதாகும்) என்று அரபி உபமானமுளது. மேலும் உண்மையாகவே, உலகமனைத்திலும் பரவியுள்ள ஆன்மார்த்த, விவகார்த்த, ஒழுங்காசார போதனைகளெல்லாம் பரிசுத்த குர்ஆனிலிருந்து திரட்டிவடித்துப் பிழிந்து கிரகித்துக் கொண்ட (அத்தர்) சத்துவாகவே இருக்கின்றது. எவ்வாறெனில், மகாயுத்தத்திற்குப் பின்னர் உலகத்தைப் புதுவிதத்தில் நிர்மாணஞ் செய்து வைப்பதற்கு குர்ஆன் கிரந்தமே போதியதாய் விளங்கிவந்தது. ஆத்மார்த்தம், குண ஒழுக்கம் முதலியவற்றை அதுவே போதித்தது.

பரிசுத்த குர்ஆன் இறங்குவதற்கு முன் இவ்வுலகின் நிலைமை எங்ஙன மிருந்ததென்

பதை உற்றுணர்ந்து பார்த்தல் வேண்டும். உலகமக்கள் பெரும்பாலும் குப்ரிலும் ஷிர்க்கிலும் மற்றும் வழிகேடு மௌட்டிகம் ஆகிய அந்தகாரங்களிலுமாழ்ந்து போய்க்கிடந்தார்கள். இதன் உண்மை விபரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், சரித்திர நூல்களைப் படித்துப் பார்ப்பது கொண்டு நன்கு துலக்கமாகும். உதாரணமாய் Pre Islamic Arabia அதாவது, "இஸ்லாத்துக்கு முன்னைய அராபியா" என்னும் நூலில் அவ்விபரங்களெல்லாம் நன்கு விளக்கப் பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கேவலமான நிலைமையை பரிசுத்த குர்ஆனின் போதனையானது மஹத்தான விதத்தில் மாறுபடச் செய்துவிட்டது. அதாவது, நபிகள் நாயகம் ரஸுல் (ஸல்.) அவர்களது வாழ்க்கையின் 23-வருடங்களுக்குள் அராபியாவானது ஒரே அடியாய் சத்தியத்தின் பக்கல் மாறிவிட்டது. இதன் பயனாய், இரத்த வெறி கொண்டிருந்த அராபியரில் காட்டு மிராண்டியிலும் பெருங் காட்டு மிராண்டிபோலிருந்தவருங் கூட சுத்த சத்திய சற்குண சீலர்களாய் விட்டனர். சாதாரண மனிதராயிருந்தோர் சற்குணம் மிக்க மனிதராயினர்; சற்குணம் மிக்க மனிதர்களாயிருந்தோர் தெய்வ பக்தசிகாமணிகளாயினர்; தெய்வபக்த சிகாமணியா யிருந்தோர் இகபர மிருலோகத்துக்கும் அதிபதிகளாகி, கெய்ஸர் கிஸ்ரா ஆகிய எதேச்சாதிகார ஆட்சியின் சிம்மாஸனங்களையும் முறியடித்து விட்டனர்.

மேலும் இஸ்லாமிய கிலாபத் ஆட்சி ஏற்பட்ட முப்பதாண்டு காலத்திற்குள் மேற்குப் பிரதேச மெங்கும் பாங்கு தொனியும், இஸ்லாத்தின் பேரொலியுமேற்பட்டு விட்டது. அக்காலை எந்தப் பக்கம் கண் கொண்டு பார்த்தபோதிலும் இஸ்லாத்துக்கே வெற்றி மேல் வெற்றி கிடைத்து வந்தது. ஜெயமும் கீர்த்தியும் முஸ்லிம்கட்கே கிடைத்து வந்தது. கலா ஞான வித்தையும் இஸ்லாத்தின் வழியினாலேயே உலக மெங்கும் பரவி தழைத்தோங்கிற்று. இஸ்லாத்தை உலகத்தினிடையே பரவச் செய்யும் விஷயமாய் ஆண்டவன் இட்ட கட்டளையை அக்கால முஸ்லிம் வீரதீர பக்திமான்கள் பூர்த்திச் செய்து வைத்தார்கள். அங்ஙனம் அக்கால முஸ்லிம்கள் தம் கடமையை யுணர்ந்து, சுத்த வீரப் பராக்கிரமசாலிகளாய் விளங்குவதற்கு மூல காரணமாயும், ஊக்கமும் உற்சாகமும் புகட்டும் அருஞ்சாதனமாயும் இருந்தது எது? அது தான் பரிசுத்த குர்ஆன் ஷரீபாகும். குர்ஆனின் அரும்பெரும் போதனையும், அதனைப் பின்பற்றி யொழுகிய பக்தியும் தான் அந்தப் பண்டைய முஸ்லிம் மகான்களுக்குக் கீர்த்தியையும் வெற்றியையும் அளித்தருளிய தெனலாம். இதை யுற்றுணருங்கால், குர்ஆன் ஷரீபின் அரிய பெரிய மின்சார சக்தியைப் போல் ஒரு நொடியில், மௌடீகர்களாயிருந்த அராபியரை உத்தமர்களாகவும் ஒழுக்காசார உத்தம சமுதாயத்தினராகவுமாக்கி, அன்னோரைப் பாராளும் அதிகாரிகட்குச் சமமாய் சம அந்தஸ்திலாக்கி வைத்துவிட்ட தென்பது நன்கு புலனாகின்றது.

உலகில் வேதங்களென்று தோன்றியவைவற்றுள் குர்ஆனைப் போல், அழியாத வஸ்த்து எதுவுமில்லை என்ற கீர்த்தி குர்ஆனுக்கு மட்டுந் தானுண்டு. எவ்வாறெனின் சென்ற பதினைங்கு நூற்றாண்டுகளில் அப்பரிசுத்த குர்ஆனிலிருந்து ஓரக்ஷரங் கூட மாறுதலாகவேயில்லை. இனியும் உலக முள்ள காலம் வரை யாராலும் எந்த அக்கிரம சக்தியாலும் அப் பரிசுத்த குர்ஆனின் திருமொழிகளை மாற்றவே முடியாது. மேலும் இலக்ஷக்கணக்கான ஜனங்களின் உள்ளத்தில் மனப்பாடமாயிருக்கும் கீர்த்தியும் சிலாக்கியமும் இத்தாரணியில் குர்ஆன் ஷரீபுக்கு மட்டுந்தான் பிரத்தியேகமானதாய் அமைந்திருக்கின்றது. மேலும் ஓதிப் பாராயணஞ் செய்வதற்கு இலேசாயிருப்பதும் குர்ஆன் தான். எல்லா காலத்துக்கும் எல்லா சந்தர்ப்பத்துக்கும் எல்லா நாட்டாருக்கும், எல்லா சமுதாயத்தாருக்கும் போதனையால் ஒரேவிதமான பயனை அளிப்பதில் சிரேஷ்டமானது குர்ஆன் ஷரீபே யாகும். குர்ஆனானது சன்மார்க்கவிவேக போதனையின் உறைவிடமாகவும், கல்விஞான போதனைகளின் ஊற்றுக்கண்ணாகவும் அமைந்திருக்கின்றது. மேலும் அது உலகத்தாருக் கெல்லாம் அருட்கொடையாகவும், உலக சீர்திருத்தச் சாதனமாகவு மமைந்திருக்கின்றது.

ஓர் அறிஞரான மஷம் என்பார் குர்ஆனின் சிரேஷ்டத்தைப்பற்றி எழுதியிருப்பதாவது:—சென்ற பத்தாவது நூற்றாண்டிலிருந்து ஐரோப்பிய நாட்டின்கண் தோன்றி

யுள்ள கலைகள், இயற்கை சாஸ்திரங்கள், விஞ்ஞான விஷய ஆராய்ச்சிகள், தத்துவஞானங்கள் ஆகியவைகளெல்லாம் பண்டைய அராபியரின் இஸ்லாமியக் கலையினின்று கிரகித்துக் கொண்டுபோய் சேர்த்துக்கொண்டவைகளே யாகும். உலகமுற்றும் இஸ்லாத்துக்கு வெற்றியும் கீர்த்தியும் எத்துணை துரிதத்தில் ஏற்பட்டதோ, அத்துணைத் துரிதத்தில் இஸ்லாத்தின் கல்வி ஞானங்கள் உலகமெங்கும் பரவிச் சென்றது.'' என்பதே,

'குர்ஆனைப்போன்ற வேறு வேதத்தை கொண்டுவாருங்கள் பார்க்கலாம்' என்று அறைகூவியழைத்து சாலென்ஞ் செய்து இது காறும் பதினைங்கு நூற்றுண்டுகளாகியும் அந்த சாலெஞ்சை நிறைவேற்ற எவரும் முன்வரவில்லை. இனியும் இவ் வாதத்தை நிறைவேற்றிவைப்பவர் எவருமிருக்க மாட்டாரென்பது திண்ணம்.

குர்ஆனின் பேரனுகூலங்களைச் சிலாகிப்போருமுளர். அதனை வெறுப்போரு முளர். எனவே இஸ்லாம் வாளாயுதத்தால் பரத்தப்பட்டதென்றும், அதனுல் இஸ்லாம் வாளாயுதம்போன்றதாகுமென்றும் ஒரு சிலர் கூறுகின்றனர். ஒருவிதத்தில், இஸ்லாமானது அசத்தியத்தையும் நாஸ்திகத்தையும் வெட்டி வீழ்த்தி சத்தியத்தை நிறுத்துவதில் வாளாயுதம்போலவேதான் காரியம் செய்திருக்கின்றது. மேலும் குர்ஆனையும், அதன் போதனையான ஏக தெய்வத்துவ சன்மார்க்கத்தையும் ஒழித்து நாசப்படுத்திவிட முன்வந்தோரை எதிர்த்து சத்தியத்தைப் பாதுகாத்துக் கொண்டதிலும் இஸ்லாம் வாளாயுதம்போல் தானிருந்துவந்துளது. (இஸ்லாமானது சாத்வீகமான போதனையுடையதாகும். அது அனுவசியமாய் பிறர்க்கு தீங்கிழைக்க ஒரு சிறிதும் இடங்கொடாது.) ஆகையால் பரிசுத்த இஸ்லாம் ஆண்டவனுல் இத்தாரணியில் அழிவுறுமல் என்றென்றும் பாதுகாக்கப்படுமென்பதில் ஐயமில்லை. ஆனுல் இனி இஸ்லாமை சீர்குலைப்பதற்கு எவராலும் முடியாது. நவீன கலையான ஸைன்ஸ் முதலிய சாதனங்கள் இதுகாலை இஸ்லாத்தை உலகமெங்கும் பரப்பிவருகிறது. இஸ்லாத்தின் ஜோதியானது உலகின் சகல திக்கிலும் பரவி வியாபித்து வருகின்றது. இஸ்லாத்தின் போதனைகளெல்லாம் இயற்கையானதென்பதற்கு காலப்போக்கே போதிய சான்ருயிருக்கின்றது. ஆகையால் உலகசமூகத்தினர் எல்லோரும் இஸ்லாத்தின் முன் தலைசாய்த்து, அதனைத் தழுவிக்கொள்வது கொண்டு யாவற்றும் முஸ்லிம் மயமாகிவிடும் நாள் கூடியமட்டும் சமீபித்துக்கொண்டே வருகின்றது. ஆகையால் நிச்சயம் ஒருகாலத்தில் இவ்வுலகமெல்லாம் இஸ்லாமிய மயமாய் விளங்கு மென்பதில் ஐயமில்லை.

தா. இ. ஹாபிஸின் மார்க்க முரணுன பத்வா.

(அபுல்ஹஸன் சாஹிப் மத்ராஸீ)

சோதரீர்!

மகுடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஹாபிஸ் என்பார், நீண்டநாளாய் நம் சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கத்திற்கு விரோதமாக பற்பல விஷயங்களை வெளியிட்டு வருவதால், அவைகள் அப்போதைக் கப்போது தக்க கண்டனத்திற்கு இலக்காகி அத்தவறுகளில் சிலவற்றை அவர் திருத்தியும், சிலதை மழுப்பியும் விட்டிருக்கின்ருர் என்பது நேயர்கள் அறிந்தவையே. அவ்வாறே இதுபொழுதும் 2-10-32-ல் வெளியான தா. இ-யில் அவர் அளித்திருக்கும் சிற்சில மார்க்க வினுவிடைகளை ஈண்டு குறிப்பிடுவோம். எனவே அதன் தவறையும் நேயர்கள் நன்கறியக்கடவர்.

வினு (1) ஒருவர் அவர் மனைவிக்கு ஒரு தலாக் மட்டும் சொல்லி மகர் முதலியதெல்லாம் கொடுத்துத் தீர்த்துவிட்டபின் மீண்டும் அப்பெண்ணை புதிய நிகாஹ் செய்யாமல் சேர்த்துக்கொள்ளலாமா?

(2) ஒரு தலாக்மட்டுங் கொடுத்து விட்டால் விவாகரத்தாகக் கருதப்படுமா?

....

விடை (1) இவ்விதம் தலாக் சொல்லி மூன்று மாதங்களுக்கு மேலாய் விட்டால் புதிய நிகாஹ்செய்து தஹ்லீஹ் செய்யாத வரை தலாக் சொல்லிய புருஷன் அவளை விவாகம் பண்ணிக்கொள்ளக்கூடாது.

(2) இதுவும் தலாக்தான். ஆனல் இந்த தலாக்கிற்குப் பின் இரண்டுமாதக் காலம் வரை தன் பெண்சாதியாக அவளைச் செய்து கொள்ளலாம். தலாக் சொன்னதிலிருந்து மூன்று மாதம் வரை புருஷனுக்கும் பெண் சாதிக்கும் சம்பந்தமொன்று மேற்படாமலே இருந்து விடுவார்களாயின் அஃது மூன்று தலாக்கின் இடத்திலேயே வந்துவிடும்.

அன்பீர்! மேலே வினவப்பட்டிருக்கும் இரண்டு கேள்விகளுக்கும் மேலே குறிப் பிடப்பட்டுள்ள இரு விடைகளை ஹாபிஸ் அளித்து, அப்பெண்ணை வேறு ஒருவருக்கு நிகாஹ் செய்துகொடுத்து தஹ்லீல் செய்த பின்புதான் இவன் விவாகஞ்செய்துகொள்ள வேண்டுமென குறிப்பிட்டிருக்கின்றார். இது முற்ற முற்ற தவருனதென்பதை சாமான்ய ரென்ன? சன்மார்க்க ஞானம் சற்றேனு முள்ள யாவரும் நன்கறிவர். இவ்விரண் டிலும் "ஒருதலாக்" என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. எனவே ஒருதலாக்மட்டும் கொடுக்கப்பட்டபெண்ணை "இத்தா"வுடைய காலமான மூன்றுமாதக்கெடுவிற்குள் பெண் சாதியாக ஆக்கிக்கொள்ளலாம். இத்தாக் கழித்துவிடுமாயின் அப்பெண்ணை அவளது சம்மதத்தின்பேரில்மறுமுறைநிகாஹ்செய்து சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது சன் மார்க்கக் கட்டளையாகும். இதுவிபரங்கள் திரு குர்ஆனிலேயே நன்கு விபரிக்கப் பட்டிருக் கிறது. இவ்வாறிருக்க ஹாபிஸ் என்பார், ஒரு தலாக்கொடுக்கப்பட்டு இத்தாஉடையகாலம் சென்று விட்டால், அதை மூன்று தலாக் காகப்பாவிக்கப்படுமென்றும், அப்பெண்ணை வேறுஒருவருக்குநிகாஹ்செய்துதஹ்லீல் செ யாதவரை முந்திய புருஷன் அவளை விவாகஞ் செய்து கொள்ளக் கூடாதென்றும் வரைந் திருக்கின்றார். இது எவ்வளவு தூரம் சன் மார்க்கத்திற்குமாற்றமாயிருக்கிறதென்பதை நேயர்கள் நன்குணரக்கடவர். இவ்வாறு சன்மார்க்கத்தைப் புறட்டிக் கூறிய ஹாபிஸ் என்பவரின் மார்க்கத்தீர்ப்பின் மகிமைதா னென்னே? இவர் கல்வி பயின்றதற்காக இவ ருக்களிக்கப்பட்டிருந்த "பாக்கவீ" பட் டம் பறிப்பட்டுப்போய்விட்டதால், இவர் கற்ற மார்க்கக்கிரந்தங்களிலுள்ள சன்மார்க் கக் கட்டளைகளும் அவருக்குத் தெரியாது போயிருக்கலாம். ஆனல் இவர் ஹாபிஸ் என்று நடிப்பதால் இது விஷயமாய் அல்லாஹ் தஆலா குர்ஆனில் பஹிரங்கமா கக் கூறியிருப்பது இவருக்குத் தெரியாது போனதுதான் விந்தையாகயிருக்கிறது? இத ஞல் இவர் குர்ஆனையும் மறந்து விட்டாரென யூகிக்க வேண்டி யிருக்கின்றது. இவ்வாருன பத்வா அளிப்பதற்குத் தான் தமக்கு பீஸ் கொடுக்க வேண்டு மென்று விளம்பரஞ் செய்திருந்தார். ஆஹா! இவ்வாருன பத் வாக்களுக்கு தக்க வெகுமதி அளிக்க வேண் டியது முஸ்லிம்களின் கடமையல்லவா? ஆகவே இஸ்லாமியப் பிரசாரஞ் செய்வதற் காக வென்றே தியாகஞ்செய்து உழைத்து வருவதாகப் பறைசாற்றி வரும் பத்தி ரிகைக் கமைந்திருக்கும் ஒரு ஆசிரியரின் மார்க்கத் தீர்ப்பின் இலக்ஷணம் எவ்வா றிருக்கிற தென்பதை அன்பர்கள் ஆராய் ந்து பார்த்து, தப்பான பத்வாவைத் தள்ளி உண்மையைக் கடைப்பிடிப்பீர்களாக.

இதுவன்றி மற்று மொரு வினவுக்கு ஹாபிஸ் விடைஅளித்திருப்பதையும் ஈங்கு கவனிப்பீர்களாக:—

வின:— (1) இஸ்லாம் மார்க்கத்தில் தலை யில் சேக் (கிராப்) வைப்பது ஆகுமோ? ஆகாதா?

விடை:— (1) தலைக்குமேலே இருக்கும் கேவலம் உரோமம் எப்படியு மிருக்கலாம் ஆனல் தலைக்குள்ளிருக்கும் வஸ்துவே நன்ருய் இருக்க வேண்டும்.

என விடை அளித்திருக்கின்ருர்.

சோதரீர்! நம் சன்மார்க்கமோ, மானிடன் புரியக் கூடிய ஒவ்வொரு வேலைகளையும் ஒரு வாறு வரையறுத்து தலைக்கு மேலுள்ள உரோமங்களையோ தாடி மீசைகளையோ இவ் வாறு தான் வைத்துக்கொள்ள வேண்டு மென அறிவித்திருக்கின்றது. எனவே ஒரு சிறு பையனின் தலையின் உரோ மத்தின் சில பாகம் சிறைக்கப் பட்டும் சில பாகம் விடப்பட்டும் இருந்ததை எம்பெ ருமானர் (ஸல்.) அவர்கள்பார்த்து, அவ் வாறுசெய்ய வேண்டா மென விலக்கி, உரோ மங்கள் யாவற்றையும் சிறைத்து விடுங்

கள் அல்லது யாவற்றையும் விட்டு விடுங்க ளென்று கூறியதாக இப்னு உமர் (ரலி.) அவர்களைத் தொட்டும் முஸ்லிம் ரிவாயத்துச் செய்திருக்கின்றார்கள்.

எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் "கஜஉ" செய்வதை விலக்கினார்கள். அது யாதாகு மென வினவப் பட்டபோது, தலை உரோமங் களிற் சிலதை விட்டு சில பாகத்தை எடுத்து விடுவதாகுமெனக் கூறினார்கள். என இப்னு உமர் (ரலி.) அவர்களைத் தொட்டும் நாபிஉ, ரிவாயத்துச் செய்ததாக புகாரி முஸ்லிமில் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஹதீதுகளைக் கொண்டு, தலையில் கிராப் வைப்பது சன் மார்க்கத்தில் விலக்கப்பட்ட காரியமென் பதை செவ்வனே தெரிந்து கொள்கின்றோம். அதிலும் இக் காலத்தில் நஞ்சிறார்கள் தலையில் கிராப் வைத்துக்கொண்டு கிறிஸ்தவர் களைப் போன்று நடித்து வருகின்றனர். அவர் களுக்கு, உரோமம் வைக்கும் விஷயமாய் நமது சன்மார்க்கத்தில் எவ்விதக் கட்டுப் பாடுங் கிடையாதெனக்கூறுதல் எவ்வளவு தூரம் கெடுதியை விளைவிக்குமென்பதை நேயர்கள் நன்குணர்வார்களாக.

தவிர, மேலே கூறப்பெற்ற வினாவிடுத்தவர், இஸ்லாம் மார்க்கத்தில் கிராப் வைப்பது ஆகு மா ஆகாதா? என்று கேட்கின்றார். அதற்கு ஹாபிஸ் என்பார், "கேவலம் உரோமங்கள் எப்படியுமிருக்கலாம் ஆனால் தலைக்குள்ளிருக் கும் வஸ்துவே நன்றாய் இருக்கவேண்டும்" என்று விடைபகர்கின்றார். இது எந்த மார்க் கத்திலுள்ள சட்டமென்பது தான் நமக்கு விளங்கவில்லை. ஏதாகிலும் மார்க்க சம்மந்த மான விஷயங்களைப்பற்றி வினவப்படின், அதுவிஷயமாய் குர்ஆனிலோ, நாயகவாக்கி யத்திலோ யாது கூறப்பட்டிருக்கின்றன வென்பதை உற்றுணர்ந்து பாராது இவ்வா றான மார்க்க முரணுள்ள விடை அளித்துவிடு வதன் இரகசியம் இன்னதென்பது நேயர் களுக்குத் தெரியாதவையன்று. ஆதலின் கிராப் வைக்கும் நண்பர்கள் ஹாபிஸின் மார்க்க முரணான விடையைப் பார்த்து ஏமார்ந்து போகாமலிருப்பார் களென்று நம்புகின்றேன்.

ஏகத்துவத் தூதரும், தா. இ. ஹாபிஸ௨ம்

(M. V. அப்துல் ஜப்பார் சாஹிப் வரைவது)

இவ்வருடம் "யவ்முந் நபி"க் கென்று ஸையித் சுலைமான் சாஹிப் நத்வீ அவர் களால் இயற்றப் பெற்ற "ரசூலெவஹ்தத்" என்னும் உர்தூ பிரசுரத்தை நம் "ஹிபாஜத் துல் இஸ்லாம்" சங்கத்தார் நந்தாய் பாஷை யில் மொழி பெயர்த்து வெளியிட்டிருந்தன ரென்பது யாவரு மறிந்ததே. ஆனால் அதன் சில இடங்களிற் சிற்சில பாகங்கள் விடப்பட் டிருந்த தென்பதைக் குறித்து ஹாபிஸ் பல வாறாய் எழுதி வருகின்றார்.

எனவே, அதன் சில பாகங்கள் மொழி பெயர்க்கப்படாமல் விடுபட்டிருந்ததென்பது உண்மையே. அதாவது நபிமார்களின் விப ரங்களைக் கூறுமிடத்து, பெயர் குறிப்பிடப் படாமல்விடுபட்டவர்களுள் யூனன் தேயத்து சொக்ராத்தையும், ஈரான் தேசத்து ஜர்தஷ் தையும், ஹிந்துஸ்தானத்தில் அவதரித்த ஸ்ரீ ராமசந்திரரையும், ஸ்ரீகிருஷ்ணரையும், ஸ்ரீ கவ்தமபுத்தரையும் அவர் குறிப்பிட்டு, கடாசி யாக இன்னோர் நபிமார்கள் என்பதற்கு எம் பெருமானார் (ஸல்.) அவர்களுடைய ஹதீது களில் எவ்வித அறிவிப்பும் காணப்படாதி ருப்பதால் அவர்களை நபிகளென்று நிச்சய மாய்க் கூறுவதற்கில்லை என்று ஸையித் சுலை மான் சாஹிப் நத்வீ அவர்கள் எழுதியிருக் கின்றார்கள். இதில், மேலே குறிப்பிடப்பட் டுள்ளவர்கள் நபிமார்களுடைய தோரணை யில் எண்ணப்பட்டாலும் கடைசியாக அவர் கள் நபிகளென்று நிச்சயிக்க முடியா தென் பதற்குத் தக்க ஆதாரம் குறிப்பிடப்பட்டிருக் கிறது. நபிமார்களின் விஷயமோ முஸ்லிம் களின் ஈமானில் சம்பந்தப்பட்டதாகும். என வே, இந்த இடத்தில் இவர்களும் நபிமார் களிற் சேர்ந்தவர்களாயிருக்கக் கூடுமென்று

சாமான்யர்கள் கருதி விடக் கூடுமாதலால், ஹி. இ. மொழி பெயர்ப்பில் அப்பாகம் விடப் பட்டிருக்கின்றது. இவ்வாறே மற்றும் சந்தேகங் கொடுக்கக் கூடிய சில பாகங்களும் விடுபட்டிருக்கின்றன. ஒரு விஷயத்தை மொழி பெயர்ப்பதாயின், மொழி பெயர்ப்பவர்களும் அவ்விஷயத்திற்கு ஜவாப்தாரியாகின்றார்கள். எனவே, மொழி பெயர்ப்பாளர் இவ்வாறு சந்தேகங் கொடுக்கக்கூடிய விஷயங்களை விட்டு விடுவது அவர்களது கடமையாகும். ஆனால் தா. இ. ஆசிரியர் களோவெனில், மொழி பெயர்ப்புக்குத் தாங்கள் எவ்வகையிலும் ஜவாப்தாரி யல்லவென்று கூறிவிடுவர்.

மிர்ஸாயிகள், மேலே கூறப்பட்டவர்கள் நிச்சயமாக நபிகளென்று செப்பியும் எழுதியும் வருகின்றார்கள். உதாஹரணமாக அஹ்மதியத் தலைவரான காஜாகமாலுத்தீன் அநேக கிரந்தங்களில், கிருஷ்ணன்ஜீ அலைஹிஸ்ஸலாம் என்று வரைந்திருப்பதுடன், கிருஷ்ண அவதாரமென்று ஒரு நூலும் இயற்றி யிருக்கின்றார். (நஊதுபில்லாஹ்) இக்கொள்கையையே காதியானிகள் பிரகடனப்படுத்தி வந்தனர். இதுதான் அவர்களுடைய உண்மையான கொள்கையுமாகும். இதனையேதான் தா. இ. யும் பிரகடனப்படுத்தி வருகின்றது. எனவே, இவ்வாறான விஷயங்களில் பொது ஜனங்களுக்குச் சந்தேக மேற்படுமாதலின், ஹி. இ. மொழி பெயர்ப்பில் அப்பாகங்கள் விடுபட்டிருக்கின்றன. ஆனால்தா. ஹி. ஹாபிஸ் என்பாரோ, தம் மூளைத் துலக்கத்தைக் கொண்டு ஹி. இ. மொழி பெயர்ப்பில் இவ்வாறான பெரும் தவறைக் கண்டி பிடித்த விஷயமாய் ஆச்சரியப்படாதிருக்க முடியவில்லை.

இதைவிட அவருடைய ஆராய்ச்சியின் பேராச்சரிய மென்னவெனில், 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்கத்திற்குப் பெயரிடப்பட்டிருப்பதில், இலக்கண வழுவிருப்பதாக அவர் கண்டு பிடித்ததேயாகும். அவர் "ஹிபாஜத்" என்னும் பதம் "ஹபில"வின் மஸ்தராக வரக்கூடா தென்று ஆக்ஷேபிக்கின்றார். அதாவது. "பயில" என்னும் வஜனுக்கு தேயைக் கொண்டுள்ள "மஜ்தர்" வரக்கூடாதென்று கூறுகின்றார். இவருடைய ஆராய்ச்சியின் மகிமைதானென்னே! மூளையின் துலக்கந்தானென்னே!! புத்தியின் கூர்மைதானென்னே!!! ஸர்ப், நஹ்வையுங்கூட இவர் மறந்து விட்டார்போலும்.

"பயில" என்னும் வஜன் லாஜிமான (செயல்) தொழிலின்மீது அறிவிக்குமாயின், அது "பிஆலா" வென்று தேயைக்கொண்டு மஸ்தராக வருவதுதான் சட்டம். உதாஹரணமாக "வலிய" என்னும் மாலிக்கு "விலாயத்" என்னும் மஸ்தர் வந்திருப்பதுபோல. இது சம்பந்தமான விபரங்கள் அவ்பியாவினுடைய ஷாருகளில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. தவிர, "ஹபில"வுக்கு "ஹிப்லன்" என்று மஸ்தர் வரவேண்டுமென்று சொல்வாராயின், அது கியாஸி மஸ்தரென்று அவரால் நிரூபிக்க முடியுமா? இது சம்பந்தமாக இன்னும் அநேக விபரங்கள் உள. விரிவஞ்சி விடுத்தனம். ஆனால் ஹாபிஸின் அறியாமைக்கு வருந்தாதிருக்க முடியவில்லை. இவருடைய பட்டம் பரிக்கப்பட்டது; குர்ஆனுடைய ஹிப்லையும் மறந்து, தலாக் போலொத்த எத்தனையோ விஷயங்களில், குர்ஆனில் பஹிரங்கமாகக் கூறப்பட்டிருப்பவைகளுக்கு மாற்றமாய் உளரி இருக்கின்றார். இப்பொழுதோ அரபிக் கலையின் ஆரம்பமாகிய ஸர்பையும் மறந்து "ஹிபாஜத்" என்பதே இன்னதெனத் தெரியாது விழிப்புற்று வாயில் வந்தபடி பிதற்றுகின்றார். இவ்வாறுள்ள திறமைசாலியான ஒருவர் தம்பத்திரிகைக்கு ஆசிரியராகக் கிடைத்ததற்காக பா. தா. பெருமை பாராட்டி எழுதிவருகின்றார். காதியானி கூற்றுக்களுக்கும், அநேக வழிகேடான கொள்கைகளுக்கும் அவர் தாளம் போட்டு வருவதால், பா. தா. பெருமை பாராட்டுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. இவ்விதமான ஆசாமி அவருக்கு வேறு எவ்வகையிலும் கிடைக்காதென்பது திண்ணம்.

ஆகவே ஹாபிஸ் "ஹிபாஜத்" என்பது "ஹபில"வின் சரியான மஸ்தர் தானென்று நன்குணர்ந்து, தாம் அறியாமல் இழைத்த தவறுக்காக வருந்தி உண்மையைக் கடைப்பிடிப்பாராக.

மிர்ஜாயி இயக்கத்திற்குச் சாவுமணி.

ஷாஹ்பூர் ஜில்லாவில் இஸ்லாத்திற்கு எதிர்பாராத வெற்றி

காதியான் பாதரியான மிர்ஸாமஹ்மூத் அஹ்மத் என்பார், சாமான்ய பொதுமக்களை ஏமாற்றி அவர்களிடையே தமது தந்தையின் நபித்துவத்தைப் பரத்தும் நோக்கத்துடன் ஒரு பிரசாரக் கூட்டத்தினரை பஞ்சாப் முழுதும் சுற்றுப் பிரயாணஞ் செய்துவரும்படி ஏற்பாடு செய்தார். எனவே, அவர்கள் பாஞ்சாலத்திலுள்ள ஷாஹ்பூர் ஜில்லாவில் மட்டும் ஒன்றரை மாதம் வரை சுற்றுப் பிரயாணஞ் செய்வதற்குள்ள "புரோகிராம்" தயாரித்திருந்தனர். எனவே மௌலவீ முஹம்மத் சலீம், மலிக் அப்துற்றஹ்மான், மௌலவீ அப்துல்லா, மௌலவீ நதீர்முல்தானீ முதலியவர்கள் பிரசாரத்திற்காகப் புறப்பட்டனர். இந்நிலைமையில் "பஹீரா"விலுள்ள சுன்னத்வல் ஜமாஅத்தார்களின் "ஹிஜ்புல் அன்ஸார்" என்னும் பிரசார சபையானது, காதியானிகளை எதிர்த்து அவர்களது விஷமப் பிரசாரத்தைத் தடுத்து உண்மைக் கொள்கையை பொது ஜனங்கள்பால் எடுத்துக் காண்பிப்பதற்காக சில பிரசாரர்களை அனுப்பத் தீர்மானித்தது. அதற்கேற்ப மௌலவீ முஹம்மது ஹுசேன் சாஹிப், மௌலானா மௌலவீ முஹம்மது ஷபீஉ சாஹிப், மௌலானா முஹம்மது இஸ்மாயில் சாஹிப், மௌலவீ ஜுஹுர் அஹ்மத் சாஹிப், மௌலவீ அப்துற்றஹ்மான் சாஹிப் முதலியோர் அடங்கிய கூட்டமொன்று செப்டம்பர் மாதம் 22-ம் தேதி வரை மிர்ஸாயிகளைப் பின் தொடர்ந்து சென்று, அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் அவர்களது நாட்டம் நிறைவேறாமற் செய்துவிட்டது. எனவே, "மயானீ" என்னுமூரில் மிர்ஸாயிகள் பெரும் அவமானமடைய நேரிட்டது. பஹீராவில் செப்டம்பர் மாதம் 5, 6 தேதிகளில் தற்கம் நடைபெற்றதன் பயனாய், காதியானி இயக்கம் புதைக்கப்பட்டுப் போயிற்று. பிறகுகாதியானிகள் அங்கிருந்து "குஷாப்" சென்றனர். அங்கு மாபெரும்தற்க மகாநாடொன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால், பற்பல இடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மகாஜனங்கள் விஜயஞ்செய்திருந்தனர். அதுசமயம் சுன்னத்வல் ஜமாஅத்தார்கள் சார்பிலுள்ள மௌலவீகள் சுத்த வீர பராக்கிரமத்துடன் விளங்கினர். அதனால் மிர்ஸாயிகளின் நிறம் மஞ்சனித்து அவர்கள் பேச்சுமூச்சில்லாது அடங்கிவிட்டனர். இச்சமயத்தில் மௌலவீ குலாம் ரசூல் என்பார், காதியானிப் பிரசாரர்களின் உதவிக்காக அங்கு வந்துசேர்ந்தார். ஆனால் சத்தியமானது, அவருடைய மனதை திடுக்கிடும்படி செய்துவிட்டது. ஆதலின் அன்னோர் தக்க சந்தர்ப்பத்தில் தற்கம் செய்வதை மறுத்து, போலீஸ் ஸ்டேஷன் சென்று தங்கள் உயிருக்கு ஆபத்து வருமென்னும் பயமேற்படுகிறதென மனுச் செய்துகொண்டனர். இந்நிலைமையில் சுன்னத்வல் ஜமாஅத்தார்களின் சார்பாக, டில்லி வைத்திய கலாசாலையில் படித்துத்தேறிய ஹகீம் ஹாபிஸ் வீன்பீர் அஹ்மத் சாஹிபும், முனிஸிபல் கவுன்ஸிலர் சேட் அப்துற்றஹ்மான் சாஹிபும், 5000 ரூபாய்க்குஜாமீன் கொடுக்க முன்வந்தனர். இவ்வாறு காதியானிகளுக்கு எவ்வளவோ சமாதானங் கூறியும், அவர்கள் எவ்வகையிலும் தற்கம் செய்வதைவிட்டு ஓட்டம் பிடித்துவிடுவதே உத்தமமெனக் கருதினர். ஆகவே இரவு 11 மணிக்கு அன்னோர் குதிரைவண்டியிலேறி "மஜுகா"வின்பக்கல் சென்றுவிட்டனர். இவ்வாறு ஓடிவிட்டதால், காதியானி இயக்கத்தின் மருமம் சிறார்முதல் யாவருக்கும் நன்கு புலனாய்விட்டது. அதனால் அவ் வியக்கத்தை யாவரும் மிகவே வெறுத்துத் தள்ளினர். அதற்குப் பின் குஷாபிலுள்ள பெரிய பள்ளிவாசலில் அன்றிரவு ஒரு மகாநாட்டைக் கூட்டி ஜெயக்கொண்டாட்டம் நடத்தினர். அக் கூட்டத்தில் சுன்னத் வல் ஜமாஅத் உலமாக்கள், காதியானி இயக்கத்தைத் துண்டந்துண்டமாகக்கிழித்து ஆகாசனத்தில் பறக்க விட்டு விட்டனர்.

பிறகு இரண்டுமணிக்கு இஸ்லாமிய வீரர்கள், படகுகளில் ஏறிக்கொண்டு மஜுகாவின்பக்கல் பிரயாணமாயினர். ஒரு இரவு பகலில் 40 மைல் பிரயாணஞ் செய்து, செப்டம்பர்மீ 13-ந் தேதி மக்ரிப்தொழுகைக்குப் பின் 'அல்லாஹ் அக்பர்' என்னும் தக்பீர் முழக்கத்துடன் மஜுகாவினுள் பிரவேசித்தனர். அங்கு யாதொரு அச்சமுமின்றி காதியானிப் பிரசாரகர்கள் நஞ்சு கலந்த பானத்தை யாவருக்கும் புகட்டுவதில் தங்கள்நேரங்களைப் போக்கிக்கொண்டிருந்தனர். அது சமயம் இஸ்லாமிய சேனை அங்கும் வந்துவிட்டதென்பதை அறிந்த காதியானிப் பிரசாரகர்களின் நாவெழவில்லை. அங்கு அன்றிரவு 12 மணி வரை முஸ்லிம் உலமாக்கள் தக்க சொற்பெருக்காற்றினார்கள். மறுநாள் காதியானிகளுக்கு எவ்வளவோ உரோஷ முட்டியும், செலன்ஞ் செய்து பார்த்தும் அவர்கள் வீட்டிற்குள்ளேயே பதுங்கிக்கொண்டு விட்டனர். பிறகு மத்தியானத்திற்குப் பின் காதியானிகள் அங்கிருந்து அவமான மடைந்தவர்களாகவும், தாழ்மைத்தனமெனும் துப்பட்டி போர்த்திக் கொண்டவர்களாகவும் தங்களது நாட்டம் நிறைவேறாது ஓடிவிட ஆயுத்தமாயினர். மகா ஜனங்கள் கொஞ்ச தூரம் வரை அன்னோரைப் பின் தொடர்ந்து சென்று வந்தனர். அதற்குப் பிறகும் இஸ்லாமியப் பிரசாரகர்கள் அங்கு தக்க மார்க்க உபன்னியாசஞ் செய்து விட்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

"சுலானவீ"யில் காதியானிகள், முஸ்லிம்களால் இயற்றுக் கொள்ள முடியாத சில கண்டிஷன்களைக் கூறி விட்டு, எவ்வகையிலும் தர்க்கத்திற்கு வராதிருந்து விட சூட்சி புரிந்தனர். ஆனால் இஸ்லாமிய வீரர்கள் பொருத்தமற்ற சகல கண்டிஷன்களையும் ஏற்றுக்கொண்டு காதியானிகள் பின் செல்வதற்கு ஹேது வில்லாது செய்து விட்டனர். ஆகவே, அங்கு செப்டம்பர் மாதம் 15,19,20-ம்தேதிகளில் விவாத மகாநாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதில் முஸ்லிம்கள் சார்பாக மௌலானா முஹம்மது ஹுசைன் சாஹிப், மௌலவீ முஹம்மது ஷபீஉ சாஹிப் இவர்களும், காதியானிகள் சார்பாக மௌலவீ முஹம்மது சலீம், மலிக் மௌலவீ முஹம்மது அப்துற்றஹ்மானும் ஏற்படுத்தப் பட்டிருந்தனர். இன்னோருக்கு உதவியாக மௌலவீ அப்துல்லா, மௌலவீ முஹம்மத் நதீர் முல்தானீ, மௌலவீ குலாம் முஸ்தபா முதலியவர்களிருந்தனர். மௌலவீ லுஹூர் அஹ்மத் சாஹிப் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அம்மகா நாட்டில், ஈஸா (அலை) அவர்களது ஜீவிப்பு விஷயமாயும், எம்பெருமானார் (ஸல்.) அவர்களோடு நபிப் பட்டம் முடிவடைந்து போய் விட்ட விஷயமாயும் தர்கம் நடக்குங்காலை, மிர்ஸாயிகள் தக்க பதில் கூற முடியாது அகப்பட்டு விழித்துக் கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கனவாகயிருந்தன. எனவே, கடைசியாக அவர்கள் விஷயம் அதோகதியாய்விட்டது. இவ்வாதத்தின் கடாசி நாள் மிர்ஸாகுலாம் அஹ்மதைப் பொருத்து விவாதம் நடை பெற்றது. அது பொழுது காதியானிகள் நடந்துகொண்ட முறையும், அவர்களது வாயிலிருந்து வெளியான துர்வார்த்தைகளும் யாவருக்கும் அறுவறுப்பைக் கொடுத்துவிட்டது. ஆனால் அது சமயம் முஸ்லிம்கள் தக்க பெருந்தன்மையோடு நடந்துகொண்டு காதியானி இயக்கத்தின் ஆணிவேரைக் களைந்தெறிந்ததைப் பார்த்து யாவரும் நகையாடினர். அதனால் மிர்ஸாயிகளின் சாயம் வெளுத்துவிட்டது. கடைசியாக காதியானிகள் பெரும் வெட்கத்தோடு அவமானப் பட்டவர்களாகத் தங்களிருப்பிடஞ் சென்றனர்.

பிறகு அங்கிருந்து நடு இரவில் பிரயாணமாகி "பஹல்வால்" பக்கல் ஓட்டம் பிடித்து விட்டனர். பிறகும் இஸ்லாமிய வீரர்கள் அன்னோரைப் பின் தொடர்ந்தே சென்றிருந்தனர். எனவே காதியானிகள் முஸ்லிம்களைக் கண்டு நடுக்கமுற்றிருக்கின்றனர்.

எதுபொழுது மிர்ஸா தாம் நபீ எனக்கூற முற்பட்டாரோ, அக்காலமுதல் இதுவரைகாதியானிகளை யாரும் இவ்வாறு பின்தொடர்ந்து சென்றது கிடையாது. அதிலும் துயர்படியாக ஒவ்வொரு இடங்களிலும் அன்னோருக்குத் தோல்வி கிடைத்துவிட்டதால், அவர்கள் தாங்கள் நினைத்த காரியம் நிறைவேறாது தங்கள் முயற்சியில் அபஜெய மடைந்து உட்கார்ந்து விட்டனர். எனவே, இச்சுற்றுப் பிரயாணத்தில் காதியானிகள் அடைந்த முழுத் தோல்வியின் விபரமும் கூடிய சீக்கிரம் வெளி வருமென பஹீரா அஞ்சுமென ஹிஸ்புல் அன்ஸார் செக்ரிடரி அப்துற்றஹ்மான் மியானவீ அறிவிக்கின்றார்.

[நண்பர்காள்! வட இந்தியாவின்கண் காதியானி இயக்கத்தை நசுக்குவதற்கு அனேக சங்கங்கள் வேலை செய்து வருவது யாவரும் நன்கறிந்தவையே. இந்நிலைமையில் அஞ்சுமன் ஹிஜ்புல் அன்ஸார் சார்பாக தக்கப் பிரசார சபை ஒன்றமைத்து அவ்வியக்கத்தை அடியோடு அகற்ற முயற்சித்து, அன்னேர் அக்காரியத்தில் தக்க ஜெயம்பெற்று விட்டனர். நமது நாட்டிலோ, வழிகெட்ட காதியானிக் கொள்கையைப் பரத்த மறைமுகமாகப் பிரசாரம் நடைபெற்று வருவதை சாமான்யர்களும் நன்கறிவர். எனவே, அக்கொள்கையையும், அதற்குள்ள மறைமுகமான துர்ப்பிரசாரத்தையும் தடுக்க இவண் நமது சங்கமொன்றே முயற்சித்துவருகின்றது. இதைப்போன்று நம் தென்னுட்டிலுள்ள சகல சங்கங்களும் தக்கப்படி முயற்சித்து வருமாயின், வழிகெட்ட காதியானிக்கொள்கையும், அதன் மறைமுகமான பிரசாரமும் இருந்த இடந் தெரியாது அழிந்தொழிந்து போகுமென்பது திண்ணம். ப—ர்.]

எம்பெருமானுர் (ஸல்.) அவர்களும், சக்தி அற்றேரும்.

உலக தயாளர் சற்குண சீலர், எம்பிரான் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களில் காணப்பட்ட, மனக்கவர்ச்சியை அளிக்க வல்ல சற்குணங்களில், அவர்கள் சக்தி அற்றேரை ஆதரித்ததானது, மிகமிகப்போற்றத்தக்கதே யாகும். எனவே, கீழே குறிப்பிடப்படும் சிற்சில சம்பவங்களைக்கொண்டு எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் பெரியார்களுக்குமட்டுமின்றி சக்தி அற்றேருக்கும் தக்க மரியாதை செய்து, அவர்களை அன்புடன் நடத்தியிருக்கின்றூர்கள் என்பது நன்கு புலனுகும். உதாஹரணமாக ஹஸ்ரத் சுஹைப், பிலால், ஸல்மான் பார்ஸீ (ரலி.) முதலானேர் பிரதேசவாசிகளாகவும், ஏழைகளாகவு மிருந்தார்கள். ஹஸ்ரத் ஜைத், உம்மார் (ரலி.) போன்றூர் அரபிகளா யிருந்தும் ஏழைகளாக யிருந்தார்கள். இந்நிலைமையில்அன்னேர்மீது எம்பிரான் (ஸல்.) அவர்கள் அளவற்ற பிரீதிகொண்டிருந்தார்கள். அதாவது ஜைத் (ரலி.) அவர்களை, ஹஸ்ரத் கதீஜத்துல் குப்ரா (ரலி.) அவர்கள் விலைக்கு வாங்கி எம்பெருமானுர் (ஸல்.) அவர்களது சமுகத்திற்குக் கொண்டுவந்தார்கள். உடனே சற்குணசீலர் அவர்கள் ஜைத் (ரலி)க்கு உரிமை அளித்துவிட்டார்கள். அதற்குப் பின்னும் அன்னேர்மீது எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் செய்துவந்த நன்றியானது, மிக்க பிரயோஜன மளித்து விட்டது. ஆதலின் ஜைத் (ரலி.) அவர்கள் உலக தயாளர்மீது அளவற்ற பிரீதிகொண்டவராய்விட்டார். எனவே, அவரது தாயாரும் மற்றும் உறவினர்களும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது சமுகமெய்தி, ஜைத் (ரலி) யைத் தங்களுடன் சுயபதிக்கு அழைத்துச் செல்ல அனுமதி யளிக்கவேண்டுமென வேண்டிக்கொண்டனர். உடனே எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள், அவர் இஷ்டப்பட்டால் அழைத்துச் செல்லுங்களென சந்தோஷத்துடன் அனுமதி அளித்தார்கள். இது கேட்டு ஹஜ்ரத் ஜைத் (ரலி.) அவர்கள் கூறியதாவது:—ஏகத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள் எம்மீது புரிந்துவரும் பேருபகாரமானது அளவிடப்பாலனவாக யிருக்கின்றது. அவை என் தாய்தந்தையர் செய்யும் உபகாரங்களைவிட எத்தனையோ மடங்கு அதிகமாக யிருக்கின்றது. ஆதலின் நான் என் தாய் தந்தையர்களிடம் செல்வதைப் பார்க்கினும் எம்பெருமானுர் (ஸல்.) அவர்களது திருசமுகத்தில் இருப்பதையே மேலாகக் கருதுகின்றேன் என்பதே.

இதைக் கேட்டு எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள், "ஜைத் (ரலி.) என் குடும்பத்திலுள்ளவர்களில் கணக்கிடப் படுபவரென"க் கூறினர்கள். எனவே, அவ்வாறு கூறியது மனதிருப்திக்காகவல்லவென்னும் உண்மையை யாவரும் நன்கறிந்தே இருந்தனர். உதாஹரணமாக எம்பெருமானுர் (ஸல்.) அவர்

கள் தங்கள் பந்துக்களிலுள்ள 'ஜைனப்' என்னும் பெண்மணியை அன்னோருக்கு விவாகஞ் செய்து கொடுத்தார்கள். பிறகு ஜைத் (ரலி.) அவர்களது சாமர்த்தியத்தைக் கண்டு அன்னோரைப் படைத்தலைவராகச் செய்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி.) அவர்களுக்கு, மக்காவின் ஜெயத்தினத்தன்று எம்பெருமானார் (ஸல்.) அவர்களுடன் சேர்ந்து ஒரே ஒட்டகத்தின்மீது சவாரி செய்யும் பாக்கியம் கிடைத்தது.

ஹஸ்ரத் பிலால் (ரலி.) அவர்களுக்கு முஅத்தின் வேலை அளித்திருந்ததுடன் தங்கள் குடும்பக் காரியாதிகளை கவனித்து வரும் ஏஜெண்டாகவும் நியமித்திருந்தார்கள். எனவே, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பிலால் (ரலி.) யை நோக்கி, "நான் சுவர்க்கத்தில் எனக்குமுன் உமது அடிச் சத்தத்தைக் கேட்கின்றேன்" எனக்கூறினார்கள்.

இதுவன்றி சுயபதியிலுள்ள ஏழைகளுடனும், சக்தி அற்றோருடனும் அதிகப் பிரீதி கொண்டிருந்தார்கள். இதுவிஷயம் அன்னோருக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித்துவந்தது. ஆதலின் அவர்கள் இதனை தங்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமென மதித்து "எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களுடன் உட்கார்வார்களாயின், சேர்ந்து ஒட்டிக் கொண்டதுபோல் உட்காருவார்கள்" அதாவது அவர்களது முட்டுக்கால் தங்களது முட்டுக்காலுடன் சேர்ந்தாப்போலிருக்கும் எனக் கூறுவார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் பத்து வருடங்கள் வரை எம்பெருமானார் (ஸல்) அவர்களது பணிவிடை செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் கூறுவதாது:—இப்பத்து வருடங்களுக்கிடையில் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்விஷயத்திலும் என்னைக் கோபிக்கவுமில்லை, ஏன் இக்காரியத்தை இவ்வாறு செய்தாய் என்று கேட்டதுமில்லை. அவர்கள் என்மீது கொண்டிருந்த பிரீதியினால் என் தாயாருக்கு மரியாதை செய்வார்கள்; என் சகோதிரருடன் அன்பு பாராட்டுவார்கள். ஒரு தடவை என் சகோதரர் வந்தபொழுது அவரது தலை மீது கை வைத்து உன் பக்ஷி என்ன செய்கிறதெனக் கேட்டார்கள். அதனால் அவரது மனம் குளிர்ந்துவிட்டது. நாங்கள் பெரும் சந்தோஷமடைந்தோம் என்பதே.

நன்றி பாராட்டுத் தன்மை

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மரணமான பின்புங்கூட, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மாதை மறந்துவிடாது அவர்களது சினேகிதிகளுக்கும் மரியாதை செய்து வந்தார்கள். அவர்கட்கு சாமான்களை இனாமாக அளிப்பார்கள். இதன்மீது ஆயிஷா (ரலி) அவர்களுக்குப் பொறாமை ஏற்பட்டு "நான் அபூபக்ர் (ரலி)யின் மகளாகவும், சிறுபாலியமுள்ள பெண்ணாகவும், அழகிலும் குணத்திலும் சிறந்தவளாகவு மிருக்கும் நிலைமையில், காலஞ்சென்ற ஒரு கிழவியின்மீது இவ்வாறு பிரீதி கொண்டிருப்பது எதற்காகவென்று கோபத்துடன் கேட்டனர். இதைக் கேட்டு, "என்னை யாரும் அறியாத காலத்தில் கதீஜா (ரலி) தமது ஐசுவரியத்தைக் கொண்டு எனக்கு உதவிபுரிந்தார். அதனால் அவர்மீது எனக்கு அளவற்ற பிரீதி ஏற்பட்டுவிட்டதென" எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள், தங்களைச் சிறுபிராயத்தில் சவரக்ஷணை செய்துவந்த ஹலீமா ஸஅதிய்யாவை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருந்தார்கள். எனவே, ஒருநாளன்று அம்மாதின் கூட்டத்திலுள்ள பெண்மணிகள் யுத்தக்களங்களிற் பிடிபட்டு முஸ்லிம்களின் கைவசமாயினர். எனவே, ஹலீமா ஸஅதிய்யா அவர்களை விடுவித்துக் கொண்டு போவதற்காக எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார். அம்மாது, கிராமவாசியாக யிருந்ததுடன் பிரயாணஞ் செய்துவந்ததால் அவர்மீது தூசுபடிந்திருந்தது. இதைப் பார்த்து எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் அம்மாதிற்கு மரியாதை செய்வான் வேண்டி, வெண்மையான துப்பட்டியை விரித்து வரவேற்று உபசரித்தார்கள். அக் கூட்டத்திலிருந்தோர் யாவரும் ஆச்சரியமுற்று இம்மாது யாராகு மென வினவினர். அதற்கு எம்பெருமானார் (ஸல்.) அவர்கள், அம்மாது எமது பால்குடித்தாயாராக இருக்கு மெனக் கூறினார்கள். எனவே, அம்மாது சமத்துவத் தூதர் (ஸல்.) அவர்களை நோக்கி, முஹம்மதே! நீர் உம்முடைய தாய் தந்தையர்களின் சகோதரிகளை சிறை

செய்து வைத்திருப்பது தருமா வென வின வியவுடன், குறைஷியர்களின் பாகத்திற்குக் கிடைத்திருந்த மாதுக்களை விடுதலை செய்து விட்டார்கள். பிறகு லுஹர் தொழுகையின் போது மற்றவர்களிடமும் சிபாரிஷ் செய்து கொண்ட காரணத்தால் யாவரும் விடுதலை அடைந்து விட்டனர்.

"ஹபஷா" தேச வாசிகள் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் சமூகம் வந்தனர். அது பொழுது உலக தயாளர் (ஸல்.) அவர்கள் எழுந்து அன்னோருக்கு மரியாதை செய்து நம்மவர் அங்கு ஹிஜ்ரத்துச் சென்றலை இவர்கள் தக்க வசதி அளித்திருக்கின்றார்கள். ஆதலின் நாமும் அவர்களோடு தக்க முறையில் நடந்து கொள்ள வேண்டு மெனக் கூறினார்கள்.

ஏகத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள் காலித் (ரலி.) அவர்களது சுத்த வீரியத்தைப் பாராட்டி அன்னோருக்கு மரியாதை செய்திருக்கின்றார்கள். மேலும் அவர்களை "ஸைபுல்லாஹ்" அல்லாஹ்வின் வாளாயுதமெனவும் அழைப்பார்கள். தவிர ஹஸ்ரத் அபூ உபைதாபின் ஜர்ராஹ் (ரலி.) அவர்களில் ஆழ்ந்த யோசனை, புத்தி சாதுர்யம், அமானத் போன்ற சற்குணங்கள் அமைந்திருந்ததால் அவரைப் போற்றிப் புகழ்ந்து அவருக்கு "அமானுல் உம்மா" என்னும் பட்டமு மளித்தார்கள். யாராகிலும் அம்பு எறிவதின் வித்தையைக் காண்பிப்பாராயின் அதனை மிகப் பாராட்டுவார்கள். யாராகிலும் அழகிய தொனியில் குர்ஆன் ஷரீப் ஓதுவாராகில் அதனைப் போற்றிப் புகழ்ந்து அதிலேயே மனதைச் செலுத்திவிடுவார்கள். முடிவாகக் கூறுமிடத்து, சகல காரியாதிகளுக்கும் நன்றி பாராட்டிக்கொண்டிருந்தார்க ளெனக் கூறுவது மிகையாகாது.

ஹஸ்ரத் அபூபக்ர், உமர், உதுமான், அலீ (ரலி) இவர்களது விஷயத்தில் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் எவ்வளவுதூரம் நன்றி பாராட்டி இருக்கின்றார்க ளென்பது யாவருமறிந்தவையே. அம்மகான்கள் ஆரம்பத்தில் செய்துவந்த தியாகங்கள்மிகமிகப் போற்றத் தக்கனவே யாகும். எனவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றவர்களைவிட பேருபகாரஞ் செய்திருக்கின்றார்கள். அதாவது சினேகிதக் கடமையையும் நிறைவேற்றி இருக்கின்றார்கள். தங்கள் ஐசுவரியங்களையும் செலவு செய்திருக்கிறார்களென எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய நற்செய்தியைக் கேட்டு எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பூரித்து 'அல்லாஹு அக்பர்' என்று ஒரு சப்தம் கொடுத்து, ஆண்டவன் உமர் (ரலி) அவர்களது இஸ்லாத்தை ஒப்புக்கொண்டு சந்தோஷ மடைந்தவனாக யிருக்கின்றான் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் பேரன்பு பூண்டொழுகி வந்திருக்கின்றார்கள். அவர்களுக்குத் தங்கள் ஈரல் துண்டாகிய ஹஸ்ரத் பாத்திமா (ரலி) அவர்களை விவாகஞ் செய்து கொடுத்துச் சிறப்பித்து மிருக்கின்றார்கள்.

எம்பெருமானார் (ஸல்.) அவர்களது பெரிய தந்தையாராகிய ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஒரு யுத்தத்தில் சிறையாக்கப்பட்டு மதினாவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார்கள். உலகதயாளர் சற்குணசீலர் (ஸல்.) அவர்கள் அன்னோரைப் பார்த்தவுடன் மதிமயங்கிவிட்டார்கள். இரவில் துயில்புரியவில்லை. எமது தந்தையாகிய அப்பாஸ் (ரலி) அவர்களின் கையை தளட்டி விடுங்கள் அதனால்எனக்குக் கஷ்ட மேற்படுகிறது எனக் கூறினார்கள். அதுபொழுது அப்துல்லாஹ்பின் உபை (ரலி.) அவர்கள் தங்கள் சட்டையை அப்பாஸ் (ரலி.) அவர்களை அணிந்து கொள்ளும் படி செய்தார்கள். இதனை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் ஞாபகத்தில் வைத்திருந்து அன்னோர் மரணமானவுடன் தங்களுடைய சட்டையை அவருடைய கபனிற்காக அளித்துக் கண்ணியப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி.) அவர்களின் மரணத்திற்காக எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் பெரிதும் வருந்தினார்கள். மேலும் அவர்களுடைய ஜனாஸாத் தொழுகையில் 70-தக்பீர் சொன்னார்கள். "அவுஸ்" கூட்டத்தாரின் தலைவரான ஸஅதிப்னுமுஆத் அன்ஸாரி (ரலி.) அவர்கள் மரணமானவுடன் இம்மரணத்தினால் அல்லாஹ் தஆலாவின் அர்ஷும் நடுக்கத்தில் வந்து விட்டதெனக் கூறினார்கள்.

ஆகவே, மேலே கூறப்பெற்றுள்ள சம்பவங்களினால், எப்பெருமானார் (ஸல்.) அவர்கள் ஆண் பெண் யாவருக்கும் சங்கை மரியாதை செய்து அவர்களோடு அன்பு

பாராட்டி இருக்கின்றார்கள் என்பதும், அவர்களுக்கு நன்றி பாராட்டுவதில் பெரியோர் சிறியோர் என்னும் பாகுபாடு செய்யவில்லை என்பதும், ஒரு கூட்டத்திலுள்ளவர்களில் யாராகிலுமொருவர் உபகாரம் புரிந்திருப்பாராயின், அக் கூட்டத்தினர் யாவரையும் பாராட்டி வந்தார்களென்பதும், எம்பெருமானார் (ஸல்.) அவர்களது சற்குணங்கள் உலகத்தை பிரமிக்கச் செய்து விட்டனவென்பதும் நன்கு புலனாகின்றது.

காலத்தின் அருமை.

ஓர் அரிய போதனை.

தொழிலாளி வர்க்கத்தினர் அபிலாஷைக் கொள்வதைப் போன்று, நித்திய வேலை செய்வோரும் தமக்குப் பகல்காலம் 8-மணி நேரங்கொண்டதாயிருக்கக் கூடாதாவென் றெண்ணுகின்றனர். இவ்வாறே தொழிலாளிகளிடம் வேலை வாங்கும் முதலாளி வர்க்கத்தினரும் பகல் காலமானது (அதாவது ஆபீஸ் நேரமானது) 10-மணி நேரங் கொண்டதா யிருக்கக் கூடாதாவென்று ஆசைப்படுகின்றனர்.

எவ்வகையிலும் ஒவ்வொரு மனிதர்க்கும் இரவு பகல் 24-மணிகளில், இரண்டொரு மணி அவகாசமாவது நிச்சயம் கிடைக்கும். விவேகசாலிகளும், தம் பிற்கால சம்பவங்களை யோசித்துப் பார்ப்போரும் அந்தச் சொற்ப நேர அவகாசத்தில் பெரும்பெரும் பிரயோஜனங்களை அடைந்து கொள்கின்றார்கள். மேலும் அத்தகைய புத்திசாலிகள் தங்கள் வாழ்நாளின் ஒவ்வொரு விநாடியும் வீணாகக் கழிந்துபோக விடவே மாட்டார்கள்.

அமெரிக்காவின் மிகப் பெருங் கவிராயரான 'லாங்கு பெல்லோ' என்பார் 'இன்பர்னோ' என்னும் மகா காவியத்தின் மொழி பெயர்ப்பைச் செய்து முடித்த விதம் எவ்வாறென்பதை ஈங்கு கூறுவாம். அவர் தமக்குக் காலையில் தேவைப்படும் காப்பியை சிறு அடுப்பின்மீதுவைத்துவிட்டு, அதுகொதிப்பதற்குள்ளான நேரமாகிய பத்து நிமிஷத்திற்குள் பல பக்கங்களை மொழிப் பெயர்த்தெழுதிவிடுவார். இவ்வாறே தமக்கு ஒவ்வொருநாளும் மிகச் சொற்பமாய்க் கிடைத்து வந்த சில நிமிஷ அவகாசத்திலேயே உழைத்துக் குன்றா ஊக்கத்தோடு அந்தப் பெரிய காவியத்தை மொழிபெயர்த்துப் பூர்த்தி செய்துவிட்டார்.

இவ்வாறே, ஆங்கிலமொழியில் மிக்கப் பிரபல்யமாகிய கவிக்களஞ்சியமான 'பிரேடாய்ஸ் லாஸ்ட்' என்னும்கிரந்தத்தின் நூலாசிரியரும், சொற்ப அவகாசம் கிடைக்கக்கூடிய உபாத்தியாயராகவே இருந்தார். இன்னவர் தமது அவகாச நேரத்தில், ஐக்கிய நாணயச் சங்கக் காரிய தரிசியாகயிருந்து அவ்வேலையைப் பார்த்துவந்துள்ளார். இதுவுமன்றி அன்னவர் "ஆர்ட் பெர்ட் பேக்டர்" சபையின் காரிய தரிசியாகவு மிருந்து வந்துள்ளார். இவ்வாறெல்லாம் அவர் பற்பல விவகாரங்களில் ஈடுபட்டுழைத்து வருங்காலை, இதுவன்றி மிகச் சொற்பமாய்க் கிடைத்து வந்த அவகாச நேரத்திற்றான் மேற்படி கவிக்களஞ்சியமான காவியத்தை எழுதிவந்தார்.

"ஜான் ஸ்டுவார்ட் மில்" என்பவரின் பெயரை தற்கால நாகரீக உலகம் நன்கறிந்துள்ளது. எனினும் அவர் ஈஸ்ட் இந்தியா ஹவுஸ் காரியாலயத்தில் உத்தியோகம் பார்த்துவந்தபோது கிடைத்த சொற்ப நேர அவகாசத்தின் போதுதான் அநேக நூற்கள் இயற்றி கீர்த்திபெற்று விளங்கினார். அவர் அச் சொற்ப சாவகாசத்தில் எழுதிக் குவித்த நூற்களை வைத்துக்கொண்டு இக் கால ஆங்கிலேயர் பெருமைப் பாராட்டி வருகின்றனர்.

'மெக்காயில் பிராடே' என்பார் புஸ்தக பைண்டு வேலை மட்டுஞ் செய்து கொண்டிருந்தவராவர். இவர் இத் தொழிலிலீடுபட்டு வேலைசெய்த நேரம் போக, வேறு கிடைத்த சொற்ப. கால அவகாசத்தை 'சைன்ஸ்'

விஞ்ஞான ஆராய்ச்சியிற் செலவிட்டு வந்ததின் பயனுய் அவர் மின்சார வித்தையிற் தேர்ச்சிபெற்றுக் கண்டுபிடித்த நூதனக்கருவிகளின் மேன்மைகளை இக்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர் மிகமிகப்புகழ்ந்து வருகின்றனர். எனவே, இக்காலத்தில் மின்சார ஆராய்ச்சி முன்னேற்றமடைந்து வந்துள்ளதானது, பிராடேகெலூனி முதலியோர் தம் அவகாச நேரத்தில் முயன்று வேலை செய்து வந்ததின் பயனேயாகும்.

மேலும், மேரின் ஹார்லெண்டு என்னும் பெண்மணி பத்திரிகை வியாசத் தொழிலிலும், கதைகள் எழுதுவதிலும் இணையற்ற கீர்த்திப் பிரதாபம் அடைந்திருந்தார். அவ்வாறு அப் பெண்மணி எழுதி வந்ததெல்லாம், அவள் தன் பிள்ளைகளைத் தாலாட்டித் தூங்கப் போட்டு விட்டபின் கிடைத்த சொற்ப அவகாச நேரத்திலேயாம்.

தவிர, ஐக்கிய அமெரிக்க நாடுகளில் மிகக் கீர்த்திப் பிரதாபம் பெற்றிருந்த தத்துவ ஞானியாகிய "வேர் மௌண்ட்" என்பார் ஓர் சாதாரண சக்கிலித் தொழில் செய்பவராகவே யிருந்தார். ஆயினும் அன்னவர் தினமும் ஒவ்வொரு மணிநேரத்தை புத்தகம் படிப்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் செலவிட்டு வந்தார்.

'பிரான்க்லின்' என்ற தத்துவ ஞானியானவர் தமது ஜீவிய காலமனைத்திலும் பாடுபட்டுழைப்பதில் சற்றும்சோர்வடையாதவராகவே யிருந்துவந்தார். மேலும், அவர் சிறிய பையனுகயிருந்த காலத்தில் அவரது தந்தையார் உணவருந்தப் போகும்போது நீண்ட நேரம் ஜெபிப்பது அவருக்கு மிக வெறுப்பாகக் காணப்பட்டுவந்தது. எனவே, ஒருநாள் அவர் துணிந்து தன் தந்தையை நோக்கி, "அப்பா! தாங்கள் முழுப்பீப்பாய் சாராயத்தின்மீது ஒரே நாளில் பூரா ஜெபத்தையும் செய்துவிட்டால், தினமும் நேரத்தை வீணிற் கழிக்கவேண்டிய அவசியமில்லாது போகுமல்லவா?" எனக் கேட்டார். (இங்ஙனம் சொற்ப நேரத்தையும் வீணில் கழிக்க மனமில்லாதவராக யிருந்துவந்தார்)

'கோயிட்டே' என்ற கவிவாணர், எந்த சந்தர்ப்பத்திலும் தமது சிந்தையில் ஓர் நல்ல கருத்து உதித்தபோதிலும் அதனை நழுவ விடாமல் உடனுக்குடன் எழுதி வைத்துக் கொள்ளும் வழக்கமுடையவரா யிருந்து வந்தார். எனவே, ஒருமுறை இராஜாவைக்கண்டு பேசும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. அதுபொழுது இராஜா அன்னவருடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் திடீரென சில நிமிஷத்திற்காக விடைபெற்றுக்கொண்டு பக்கத்திலுள்ள அறைக்குட் சென்று, அச்சமயம் தன் சிந்தனையில் பட்ட அரிய தத்துவக் கருத்தை ஏட்டில் எழுதி வைத்துவிட்டுப் பிறகு இராஜருடன் வந்து பேசினர். இவ்வாறே அவர் அரிய தத்துவக் கருத்துக்கள் அமைந்த அரும்பெருங் கவிகளை அந்தந்த சந்தர்ப்பத்தில் எழுதிச் சேகரித்துப் பெரியதோர் காவியமாக்கி, கல்வித் துறையில் மாபெரும் கீர்த்தியும் பதவியும் பெற்று விளங்கினர்.

'ஸர் ஹம்ப்ரே டெவி' என்பார், ஆழமான சுரங்கங்களிலும்,விஷ ஆவிகள் பரவியிருக்குங் குன்றுகளிலும் ஆராய்ச்சிசெய்வதற்குப் பேரனுகூலமாயுள்ள ஓர் நூதன விளக்கைக்கண்டு பிடித்தவராவர். இவர் ஆதியில் ஒரு மருந்துக் கடையில் வேலைசெய்துகொண்டிருந்த காலை, தமக்குக் கிடைத்த சொற்ப அவகாச நேரத்தை வீணிற் போக்காமல் புத்தக ஆராய்ச்சியிலும், ரசவாத ஆராய்ச்சியிலும் அதிக மீடுபடுத்தி வந்தார். எனவே, இதன் காரணத்தினலேயே இவர் கியாதி பெற்று விளங்கி வந்தார்.

'லார்டு புரோகம்' என்பாரும் அவகாசமான ஒரு நிமிஷத்தையும் வீணிற் செலவிடாது உழைத்து வருபவராகவே இருந்து வந்தார். அப்படியிருந்துங்கூட அவர், தமக்கு மற்றோரைக் காட்டினும் அதிக அவகாசமிருப்பதாகக் கருதி அதிகமாக உழைத்து வருவார். இங்ஙனம் அதிகப்பிரயாசைப்பட்டு வந்ததின் பயனுய் இராஜீயம், சட்டம், விஞ்ஞானம், தத்துவஞானம் முதலிய துறைகளிலெல்லாம் பாண்டித்தியமுடையவராய் அழியாப் புகழ் பெற்றுத் திகழ்ந்தார்.

இதுவன்றி அவகாசமாக பத்து நிமிஷமோ, ஐந்து நிமிஷமோ, அல்லது வேறு சொற்ப நேரமோ கிடைத்தபோதிலும், விவேகசாலிகளும், உழைப்பாளிகளுமான மக்கள், அதனை உபயோகப்படுத்தி, இத்தாரணியின்கண் பெரும் பெருங் காரியங்களைச் சாதித்து விடுகின்றார்கள். உண்மை

யாகவே புத்தகம் படித்தல், இயற்கை யாராய்ச்சி புரிதல், அனுபவப் பயிற்சி செய்தல் ஆகிய காரியங்கள் அநேகமாய் அத்தகைய அவகாசமான நேரங்களிற் கைகூடக் கூடியதாகவே இருக்கின்றன. ஏனெனின், நாம் ஜீவனோபாயத்திற்காகவென்று தினமும் எவ்வளவு நேரத்தைச் செலவழிக்க நிர்ப்பந்திக்கப்பட்டவர்களா யிருக்கின்றோமோ அவ்வளவு நேரத்தைச் செலவிட்டே ஆகவேண்டியிருக்கின்றது.

நிற்க, சத்தியத் திருத்தூதரான நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், 'வீண் வேலைகளில் பிரவேசிக்கக் கூடா''தென்று நம்மவர்களை விலக்கியிருப்பதும், மேற்கூறியபடி மனிதர் தம் அரிய நேரத்தை வீணில் போக்கக்கூடாதென்ற அரிய தத்துவத்தை ஒரு நோக்கமாகக் கொண்டேயாகுமென்பதை நன்குணரல் வேண்டும். தவிர, கைவிட்டுப்போன செல்வமும், இழக்கப்பட்டுப்போன சௌகரியமும் மனிதர்க்கு மீண்டும் கிடைத்துவிடக்கூடியதா யிருந்தபோதிலும், கைவிட்டுப்போன அருமைநேரமானது, திரும்பக்கைகூடுவது அசாத்தியமாகும்.

மேலும், நபிகணாயகம் ரஸூல் (ஸல்) அவர்கள், "ஒவ்வோர் முஸ்லிமான ஆண் மீதும், முஸ்லிமான பெண்மீதும் கல்வி கற்பது கடமையாக இருக்கின்றது" என திருவாய் மலர்ந்தருளி யிருக்கின் றார்கள். எனவே, உண்மையில் கல்வியானது, அவகாசமான நேரத்தில்தான் எளிதில் கற்றுக் கொள்வதற்கு ஏற்ற சாதனமாக இருக்கின்றது. ஆகையால் நாம், நமக்குக் கிடைத்துள்ள அவகாசமான ஒவ்வொரு நிமிஷங்களையும் வீணிற் போக்காது, அதனைப் புத்தக ஆராய்ச்சியிலும், அனுபவ ஆராய்ச்சியிலும் பயன்படுத்துவோமாக. அரிய நேரத்தை வீணாகப் போக்குவதினால், "ஆ நாம் இவ்வளவு நேரத்தை வீணில் கழித்தோமே" என்ற கவலைமட்டுந்தான் ஏற்படுகிறது எனக் கருதிவிடக்கூடாது. உண்மையில் நமது செல்வம், அறிவு, சரீர சுகம் யாவையும் இழந்து விடுகிறவர்களாகிவிடுகின்றோம். எனவே, வீண் காலப் போக்கானது, உண்மையில் அனுஷ்டான சக்தி, ஜீவிய சக்தி, குண ஒழுக்க சக்தி ஆகிய சகலத்தையும் வியர்த்தமாக்கி விடுவதைக் கண் கூடாகக் கண்டு கொள்கின்றோம்.

தத்துவக் கவிவாணரான 'பிராங்க்லின்' என்பார் "நீங்கள் உங்களது வாழ்நாள் அரியதா யிருப்பதாகக் கருதுவீர்களாயின், ஒருபோதும் அந்நேரத்தை வீணாக்காதீர்கள் எனவே, உங்கள் வாணாளானது காலத்தின் பல அரிய சந்தர்ப்பங்களான அருஞ்சாதனங்களாகும்" என்று கூறியிருக்கின்றார். இந்த அரிய முதுமொழியின் உண்மையை யாரே மறுக்கவல்லார்? ஆகவே, நமது ஜீவிய வாழ்க்கையானது, எவ்வாறிருக்கிறதென்பதை ஆழ்ந்து சிந்திப்போமாயின், இவ்வுலகின்கண் நாம் ஜீவித்திருப்பதற்குக் கிடைத்துள்ளது சொற்ப காலமேயாகுமென்பது புலனாகும். எனவே நாம் அந்த அரிய சொற்ப நேரத்தையும் வீணாகக் கழித்து விடுவோமானால், 'நமது வாழ்நாளை நாமே நமது கரத்தால் பாழ்படுத்திக் கொள்கிறோம்' எனக் கூறுவது மிகையாகாது. இக் கருத்தை அனுசரித்தவாறே பிரபல தத்துவக்கவியான ஷேக்ஸ்பியரும் "யான் நேரத்தைப் பாழ்படுத்தி விட்டேன்; இப்போது நேரமே என்னைப் பாழ்படுத்துகின்றது" எனக் கூறியுள்ளார்.

ஆனால் ஹிந்துஸ்தானத்தில், நேரத்தின் அருமையை கவனித்து நடப்போர் மிக சொற்பமாகவே காணப்படுகின்றனர். அதிலும் நம் முஸ்லிம்களை எடுத்துக் கொள்வோமானால், நேரம் வீணில் கழிந்து போவது அவர்களது பார்வையில் ஒரு பொருட்டாகத் தென்படுவதே இல்லை. எனவே, நமக்குக் கிடைக்கும் அரிய சந்தர்ப்பத்தை நாம் அனுஷ்டானத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கு பதிலாக, "நாம் வேலை செய்யவேண்டியதா யிருக்கிற நேரமும் நமக்கு அவகாச நேரமாய்விடக் கூடாதா? இரவு பகல் 24-மணி நேரத்தை வீண் விளையாட்டில் கழிக்கலாமே" என்ற ஏக்கங்கொண்டவர்களாய் இருப்பதைக் காண்கின்றோம். நாம் நமக்குரிய சந்தர்ப்பத்தை அரியதென மதிக்காத காரணத்தால், நாமே பிறருடைய அரிய சந்தர்ப்பத்திற் குறுக்கிட்டு பாழ்படுத்துவதையும் ஒரு பொருட்டாய் மதிப்பதில்லை.

அவ்வித சம்பவங்கள், நமது வாழ்நாளில் மிகவும் சர்வ சாதாரணமாக இருந்துவருகின்றன. எவ்வாறெனின், நாம் யாருடனாவது சந்தித்துப் பேசச்சென்றால், அவ்விடத்திலேயே

ஊன்றி உட்கார்ந்துகொண்டு அகாரணமாக வும், அனுவசியமாகவும் பேச்சைவளர்த்திக் கொண்டிருப்பதனுல், பிறரையும் அவரது வேலையில் ஈடுபடுவதை விட்டும் முட்டுக் கட்டை போட்டு விடுகின்ருேம். இது எத் துணை தூரம் இழிவைத் தரத்தக்கதாகயிருக் கிற தென்பதை உற்றுணர்ந்து பார்ப்பீர்க ளாக.

முன்ஞெரு காலத்தில் மகாதத்துவக், கவி யான "பென்ஜிமன் பிரான்க்லின்" என்பார் நடத்திவந்த பத்திரிகாலயத்திற் கெதிரில் ஒரு கனவான் வெகு நேரமாக அங்குமிங்குமாய் உலாவிக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு பத்திரி காலயத்திற்குள் நுழைந்து(விற்பனைக்கிருந்த) ஒரு புஸ்தகத்தை யெடுத்து "இதன் விலை யென்ன?" என்று கேட்டார். அங்கு காரி யாலயத்துள் புஸ்தக வேலைக்கு ஏற்படுத் தப்பட்டிருந்த உத்தியோகஸ்தர் "அப் புஸ்தகத்தின் விலை ஒரு டாலர்" என்று சொன்னுர். அதற்கம்மனிதர் வியப்படை ந்து, இதன்விலை இதைவிடக் குறையாதா? வென மீண்டுங் கேட்டார். அதற்கந்த உத்தி யோகஸ்தர், "இல்லை" என்று சொல்லிவிட் டார். பிறகு அம்மனிதர் சற்று நேரம்வரை புஸ்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் படித்துக் கொண்டிருந்துவிட்டு அதன் பிறகு "மிஸ் டர் பிரான்க்லின் ஆபீஸில் இருக்கின்ருரா?" என்று கேட்டார். அதற்கந்த உத்தியோ கஸ்தர் "ஆம்! இருக்கின்ருர். ஆனுல், ஒரு முக்கியமான காரியத்தில் கருத்தாயிருக்கின் ருர்" என்று பதிற் சொன்னுர். பின்பும் அந்த கனவான், மிஸ்டர் பிரான்க்லினை கட் டாயம் காணவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டபடியால், மிஸ்டர் "பென்ஜி மன் பிரான்க்லின்" தமது முக்கிய வேலையை யும்விட்டு எழுந்துவந்தார். அது பொழுது இருவர்க்குமிடையே நடந்த சம்பாஷணையா வது :—

கனவான் :-"மிஸ்டர் பிரான்க்லின்! தாங் கள் இந்த புஸ்தகத்திற்காக விலை வாங்கினுல் என்ன வாங்குவீர்கள்?"

பிரான்க்லின் :-"$1\frac{1}{4}$ டாலர் வாங்குவேன்!"

கனவான் :—ஹா! இதற்கு ஒரு டாலர் தான் விலையென்று இப்போதுதானே உங் கள் ஆபீஸ் உத்தியோகஸ்தர் சொன்னுர்."

பிரான்க்லின் :—"ஆம்! வாஸ்தவந்தான், அந்தச் சமயம் நான் என் முக்கியக் காரியத் தைவிட்டு வராதிருந்தேன்."

கனவான் :—"சரி! பரிகாசம் வேண்டாம். இந்த புஸ்தகத்திற்காக என்னதான் விலை வாங்குவீர்களென்பதைச் சரியாய்ச் சொல் லுங்கள்."

பிரான்க்லின் :—"$1\frac{1}{2}$ டாலர் இப்போது வாங்குவேன்."

கனவான் :—ஹா! சற்று முன் தானே தாங்கள் $1\frac{1}{4}$ டாலர் வாங்குவேன் என்று சொன்னீர்கள்?

பிரான்க்லின் :—ஆம்! வாஸ்தவந்தான். அச்சமயத்தில் என் அரிய நேரங்கள் அதிக மாய்ச் செலவாகாதிருந்தது. ஆனுல் இப் போது செலவாய்விட்டதன்ருே!"

மிஸ்டர் பிரான்க்லியின் இவ் விவேக மொ ழியை செவியுற்ற கனவான், வெட்கநாண மடைந்தவராய், வேறு மறுமொழி கூற வகை யற்றவராய் ஒன்றரை டாலரை எடுத்துக் கொடுத்து புஸ்தகத்தை வாங்கிச் சென்று விட்டார்.

பென்ஜிமன் பிரான்க்லின் அவர்கள், தமது அரிய நேரத்தை வீணிற் செலவாகும்படி செய்ததற்காக நஷ்டயீடு வாங்கியதைப் போல் ஒவ்வொருவரும் வாங்கத் தொடங்கு வார்களாகில், சொற்ப காலத்திற்குள் வீணர் களின் தொந்தரவு சடுதில் எடுபட்டுப் போ மென்பதில் ஐயமில்லை.

வெற்றிகரமான (இலாபகரமான) சந்தர்ப் பம் நம்மவர்க்கு அடிக்கடி கிடைப்பதில்லை. அந்த சந்தர்ப்பம் கிடைப்பதாயிருப்பினும் அது நமக்கு முன்னறிக்கை செய்வதுமில்லை. இலாபகரமான சந்தர்ப்பமானது, ஒவ்வொரு மனிதர்க்கும் (வாஸ்தவத்தில்) கிடைக்கத் தான் செய்கின்றது. ஆனுல் நாம், ஏற்கென வே, அரிய சந்தர்ப்பத்தைப் பாழ்படுத்திக் கொள்ளும் வழக்கமுடையவர்களாய் விட்ட மையால், அவ்வரிய சந்தர்ப்பத்தையும் கை நழுவ விட்டு விடுகின்ருேம். எனவே, இறுதி யில் நம்முடைய எக்காரியமும் ஜயமடைவ தில்லை.

நிற்க, வெற்றியானது, தன்னுடைய அரிய சந்தர்ப்பத்தை வீணுகப் போக்கிவிடாமல், அவ்வரிய நேரத்தை மதித்துப்பயன்படுத்திக் கொள்பவருக்கும், இதரர்களுடைய அரிய

நேரத்தைப் பாழ்ப்படுத்தாம லிருப்பவர்க்கும், தமது தினசரி வியபகாரங்களில் கழிந்தது போக மிஞ்சிய சொற்பநேரத்தைப் பெரிதென மதித்து, அதனைத் தவறவிடாது பயன்படுத்திக் கொள்பவர்க்கும் சொந்தமானதாகும். ஏனெனின் அவ்வரிய சந்தர்ப்பத்திலுள்ள சில நிமிஷத்தில் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து அடையப் பெறும் வெற்றிதான் இவ்வுலகினில் மக்களை குபேரர்களாகவும், பாக்கியசாலிகளாகவும் ஆக்கிவிடுகின்றது.

ஆகையால் காலத்தின் அருமையைப்பற்றி நன்ருய் சிந்தித்துப்பாருங்கள்! சில நிமிஷமேனும் அதனை வீணாகக் கழித்துவிடாமல் அதில் ஏதேனும் பிரயோஜனமான காரியங்களைச் செய்து பயன்பெறுங்கள்! முயற்சி திருவினையாக்கும். ஆகையால் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுங்கள்.

சுகாதாரம்—க்ஷயரோகம்

மானிடர்களுக்கு இது ஒரு சகஜமான வியாதியாக இருந்தபோதிலும், மற்ற எந்த நோயைக் காட்டினும், அதிகமான மரண விகிதத்திற்குக் காரணமாக விருந்தபோதிலும், க்ஷயரோகம் என்பது இன்னதென்றே அநேகருக்குத் தெரியாதிருக்கின்றது.

இப்பூஉலகில் வருஷவாரி சற்றேறக்குறைய 50 லக்ஷ ஜனங்கள் க்ஷயரோகத்தினல் மாள்கின்றனர் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 10 செகண்டுகளுக்கு ஒருதரம் ஒரு மனிதன் இந்த வியாதியால் மரணமடைகிருன். இந்தச் க்ஷயரோகம் இல்லாத நாடு இல்லவே இல்லை. ஆகிலும், அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா கண்டங்களில், மனிதன் நுழையாத உட்பிரதேசங்களில் இதுவரையிலும் இந்த வியாதி இருந்ததாகத் தென்படவில்லை. ஆனல் நாகரீகம் விருத்தியாகி, போக்கு வரத்து சாதனங்கள் ஏற்பட்டபிறகு, எல்லாக் கண்டங்களின் உட்பிரதேசங்களிலுங்கூட, இந்தத் தொத்து வியாதி பரவ ஆரம்பித்து, இதனல் மரண விகிதமும் அதிகமாய்க்கொண்டு வருகிறது. எகிப்து, கிரீஸ், ரோமாபுரி முதலிய புராதன நாடுகளில் இருப்பதுபோல, இந்தியாவிலும் இந்த வியாதி தொன்று தொட்டு இருந்து வந்ததாகத் தெரியவருகிறது. ஆனல் கொஞ்ச காலமாக, ஜனங்கள் பட்டணங்களிலும் நகரங்களிலும் ஒன்று கூடுவதினலும், உட்பிரதேசங்களுக்குப் போக்கு வரவு சாதனங்கள் அதிகமாக ஏற்பட்டுவிட்டபடியாலும், இந்த வியாதி எல்லா நாடுகளிலும் அதிகமாய்ப் பரவி, அதனல் மரண விகிதமும் அதிகமாக இருந்துகொண்டு வருகிறது. இந்தியாவில் மட்டும் இப்போது வருஷத்தில் க்ஷயரோகத்தால் 10-லக்ஷ ஜனங்கள் மாள்கின்றனர். கைத் தொழில் அதிகமாகவிருக்கும் நகரங்களிலும், பட்டணங்களிலும் ஜனங்கள் நெருக்கடியான இடங்களில் வசிப்பதினலும், அங்கே ஜீவனம் கஷ்டமாயிருப்பதாலும், கிராமாந்தரங்களைவிட இங்கே மரணவிகிதம் அதிகமேற்படுகிறது. பட்டணங்களில் 1000-க்கு 3-முதல் 4-பேர் வரையிலும் இறக்கின்றனர், கிராமங்களிலோ 1000-க்கு 2-3-பேர்கள் மட்டுந் தான் இறக்கின்றனர்.

க்ஷயரோகமானது, தேகத்தின் எல்லா உறுப்புக்களையும், தசைநார்களையும் தாக்குகின்றது. நுரையீரல்களைத்தான் இது முக்கியமாய்த் தாக்குகின்றது. இதற்குக் காசநோய் என்று பெயர். கோளங்களும் அதிலும் முக்கியமாய்க் கழுத்துக் கோளங்கள் தாக்கப்படுகையில் அதற்குக் கண்டமாலை என்று பெயர். அநேகரின் கழுத்துக்களில் அசங்கியமான வடுவுகள் காணப்படுவதற்கு இந்த வியாதிதான் காரணம். தவிர காசநோயால் எலும்புகளும், பூட்டுகளும் தாக்கப்படும். கூன், முழங்கால் முட்டி அடிபடுதல், நொண்டிக்கால் முதலிய அரூபங்கள் இதனல் ஏற்படுகின்றன. அடிவயிற்றிலுள்ள கோளங்கள் நோய்ப்பட்டு, குழந்தைகளிடம் அடிக்கடி காணப்படும் வயிற்றுப் போக்கு முதலியன இதனல் உண்டாகும்.

மூளையின் ஜவ்வுகள் இந் நோயால் தாக்கப் பட்டால் இசிவுகள், பிரஞ்ஞை தப்பிப் போதல், நரம்பு சம்பந்தமான வியாதிகள் உண்டாகும். சுருங்கச் சொல்லு மளவில் க்ஷயரோகமானது, தேகத்தின் எல்லாப் பாகத்தையும் தாக்கக்கூடியதாக யிருக்கின் றது.

க்ஷயரோகத்தை உண்டுபண்ணக் கூடிய விஷக்கிருமிக்கு "டியிபர்கில் பாஸிலஸ்" என்று பெயர். இதை 1882-ம் ஆண்டில் ஜர்மன் டாக்டர் ராபர்டுகச் என்பவர் கண்டு பிடித்தார். க்ஷயரோகியின் கோழையில் இது அதிகமாய்க் காணப்படும். நோய்ப் பட்டகோளங்கள், எலும்புகள் இவைகளி லிருந்து வரும் கழிவிடைகளில் அதை விடக் கம்மியாய்க் காணப்படும். நுரை யீரல்களிலிருந்து வரும் கோழையின் தொத் தினுற்றான் அபாயம் அதிகம். க்ஷயரோகி உமிழும் கோழையிலிருந்து கோடிக் கணக் கான விஷக்கிருமிகள் தினம் வெளிவரு கின்றன. இந்தக்கிருமிகள், சரியாய்க் கட்டப் படாத, சரியான காற்ரேட்டமில்லாத வீடு களின் இருட்டான மூலைமுடுக்குகளில் உயி ருடன் சில வாரங்கள், அல்லது சில மாதங் கள் கூட பிழைத்திருக்கும். ஆனுல் நேராகப் படும் சூரிய வெளிச்சத்தில் உடனே இறந்து போகும். சூரிய வெளிச்சம் பரவியிருக்கும் நல்ல காற்ரேட்டமுள்ள வீட்டில் கொஞ்சம் தாமதமாய் இறக்கும். இதனுற்றான் காற் ரேட்டமில்லாத இருட்டான வீடுகளில் இது அதிகமாய் விருத்தி யடைகிறது. நல்ல வெளிச்சமும் காற்ரேட்டமுமுள்ள வீடுகளி லும், வெளிக்காற்றில் போடப்பட்ட கூடா ரங்களிலும் இது தலையெடுக்கிறதில்லை. வாஸ் தவத்தில், ஆதிகாலத்து மனிதர் காடுகளில் வசித்துக்கொண்டு, ஊர் ஊராய்த் திரிந்து கொண்டிருக்கும்போது, க்ஷயரோகம் இருந் திராது. மனிதன் ஜனசமூகத்தில் ஈடுபட்டு, கூட்டங்கூட்டமாய்க்குக்கிராமங்களிலும்,ஊர் களிலும், பட்டணங்களிலும், நகரங்களிலும் வசிக்க ஆரம்பித்த பிறகுதான் இது உண்டா யிற்று. இந்த வியாதி நாட்டுப்புறங்கள், கிராமாந்தரங்களை விட, பட்டணங்களி லும், நகரங்களிலும் அதிகமாய் வியாபித்தி ருக்கிறதென்பது தற்காலத்திய அனுபவம். குறைவான ஆகாரம், கம்மியான காற்று, சுற்றுப் பக்கங்களில் அசுத்தம், ஜனநெருக் கம், தொழிற்சாலைகளில் அதிக வேலை. இவையாவும் ஒன்றுகூடுவதினுல், நகரங் களிலும் பட்டணங்களிலும் இந்த வியாதி அதிகமாகப் பரவும்படி நேரிடுகிறது மேலும் காடுகளில் எதேச்சையாய் சஞ் சரிக்கும் மிருகங்களுக்கு க்ஷயரோகம்கிடை யாது. அதே மிருகங்களை வளர்த்து வீட்டிலாவது, மிருகக் கூண்டிலாவது, தொழுவங்களிலாவது கட்டி வைத்திருந் தால், அவைகளுக்கு இந்நோய் பரவுகிறதா கத்தெரிகிறது. பால் கறக்கும்படியான மாடு களிலும், மிருகக் கூண்டுகளில் அடைபட்டுக் கிடக்கும் மிருகங்களிடத்திலும், வீடுகளிலும், ஆராய்ச்சி சாலைகளிலும் வளர்க்கப்படும் முயல்கள், குரங்குகள், முதலியவற்றிலும் காச நோய் ஒரு தொத்துவியாதியாக அடிக் கடி பரவிக்கொண்டு வருகிறது. ஆனுல் இப் பிராணிகள் இயற்கையில் காடுகளில் சஞ் சரித்துக்கொண்டிருக்கையில் காச நோயால் ஒருபோதும் வருந்தினதில்லை.

மேற்சொல்லிய விஷயங்கள், 'காச நோயைத் தடுப்பதெவ்விதம்' என்னும் கஷ்ட மான பிரச்சினைக்கு முக்கியமான வழியைக் காண்பிக்கின்றது. காசநோய் என்னும் கொள்ளையை மனிதன் ஒழிக்கப் பிரயத்தனப் படுகையில், உடனே வெளிக்காற்றில் வசிக்க ஆரம்பித்தல்வேண்டும் ஸ்கௌட்டுகள், கைட் டுகள், வெளிக்காற்றில் வைக்கப்படும் பள்ளிக் கூடங்கள் இவைகளிடம் காணப்படும் வெளிக் காற்றின் உபயோகமும், பள்ளிக்கூட அதி காரிகள் வெளிக்காற்றில் தேகாப்பியாசம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவதும், தற்காலத்தில் காற்ரேட்டமுள்ள வீடுகள் கட்டவேண்டுமென்று சுகாதார சாஸ்திரங் கள் முறையிடுவதும், இவை யாவும் காச நோயைத் தடுப்பதில் வெளிக் காற்றின் விசே ஷத்தை ஒட்டியே ஏற்படுத்தப்பட் டிருக்கின் றன. தோட்டத்தின் மத்தியில் செவ்வை யாய்க் கட்டிய ஜனநெருக்கமில்லாத வீடுகளை விட, பட்டணங்களிலும் நகரங்களிலுமுள்ள நெருக்கடியான இடங்களிலும், சேரிகளிலும் காசநோய் அதிகம் பரவியிருப்பதாக சுகா தார அதிகாரிகள் அடிக்கடி ஜனங்களுக்கு எடுத்துக்காட்டி யிருக்கின்றுர்கள். காசநோய் பட்டணங்களிலும் நகரங்களிலும் நெருக்கடி யான இடங்களிற் தான் குடிகொண்டிருக் கின்றது. ஆனதுபற்றி, நகரங்களுக் கப்பால்

வெளிப் புறங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டு, சுற்றுப் பக்கங்களில் நல்ல காற்று வரும்படி அமைத்துக் கொள்வது, வியாதியை அதிலும் முக்கியமாய்க் காசநோயைத் தடுத்து, விலக்குவதற்கு முதல்முதல் செய்ய வேண்டிய காரியமாகும்.

நிரூபசாரம்

கொழும்பு

ஜாமிஉல் அல்பர் பள்ளி கமிட்டி மீட்டிங்.

1932ம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் பள்ளியில் கூடிற்று.

புதிதாய்த் தெரிந் தெடுக்கப்பட்ட 21 மெம்பர்கள் விஜயம் செய்திருந் தார்கள். கனம் ஹாஜீ உம்பிச்சி ஜே. பி. அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி கனம் ஹாஜீ பா. சு. க. வி. பல்லாக்கு லெப்பை ஆலிம் சாஹிப் அவர்கள் பிரரேபித்தார்கள். கனம் ஹாஜீ அ. மு. மு. முஹம்மது முகியித்தீன் மரைக்காயர் ஆமோதித்தபின் கனம் ஹாஜீ உம்பிச்சி ஜே.பி. அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

25-9-32ல் நடைபெற்ற கமிட்டி மீட்டிங் தீர்மானப்படி புதிதாக 33 மெம்பர்கள் தெரிந்தெடுத்த மினிட் புக்கை கனம் ஹாஜீ அ. மு. மு. முஹம்மது முகியித்தீன் மரைக்காயரால் படிக்கப்பட்டது.

கனம். மு. வா. செ. முஹம்மது பாக்கிர் அன்பிரதர்ஸ், கனம் முஹம்மது ஷம்சுத்தீன் ஆலிம்சாஹிப் அவர்களால் பள்ளியின் வக்பு சாசனம் படிக்கப்பட்டது. அப்பால் 33 கமிட்டி மெம்பர்கள் தெரிந் தெடுக்கப்பட்டனர்.

தீர்மானங்கள்.

(1.) மேற்படி 33 கமிட்டி மெம்பர்களில் ஊர்காரர் களாகிய 10 மெம்பர்கள் சப் கமிட்டி மெம்பராகத் தெரிந் தெடுக்கப் பட்டனர்.

(2.) 11 மெம்பர்கள் ஆஜரானல் கமிட்டியையும் நடத்தலாமென்று தீர்மானிக்கப் பட்டது.

(3.) காலஞ்சென்ற டிரஸ்டி ஹாஜீ கொ. முஹம்மது அப்துல் காதிர் ஆலிம் சாஹிப் அவர்களால் கடைசியாக அச்சிட்டு வெளிப்படுத்திய பள்ளியின் வரவு செலவுக் கணக்கிற்குப் பிறகுள்ள கணக்குகளைத் தணிக்கை செய்து ரிப்போர்ட்டுத் தயாரித்து, 16-10-32 கமிட்டி மீட்டிங்கில் ஆஜர்படுத்து வதற்காக ஏ. எஸ். எம். எம். ஹாஜியார் அன் கம்பெனி மானேஜராகிய எஸ் எம். மீருசாஹிப் அவர்களையும், மு. வா. செ. முஹம்மது பாக்கிர் அன்பிரதர்ஸ் பங்காளியாகிய முஹம்மது ஷம்சுத்தீன் ஆலிம் சாஹிப் அவர்களையும், என். எம். முகியித்தீன் கஸ்ஸாலி முஹம்மது கனி ஹாஜியார் அவர்களையும், கணக்குப் பரிசோதகர்களாகத் தெரிந்தெடுத்து, பள்ளி சம்பந்தமான கணக்குகளை மூவர்களிடமும் ஒப்புவிக்கப்பட்டது.

கனம் ஹாஜீ அ. மு. க. முஹம்மது முகியித்தீன் ஆலிம் சாஹிப் அவர்களால் பாத்திஹா ஓதப்பட்டு மீட்டிங் இனிமையாக முடிந்தது என்று ஜனப் கொ. செய்கு முஹம்மது எழுதுகின்றார்.

கம்பம்

கம்பம் "இஷாஅத்துல் இஸ்லாம்" சங்கத்தார் நம் தூய்மை வாய்ந்த சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கத்தைப் பரத்துவான் வேண்டி செய்துவரும் அரும் பெரும் தொண்டுகள் போற்றத் தக்கனவேயாகும். அங்கு "இஷாஅத்துல் இஸ்லாம்" மாகாண மகாநாடு நடைபெற்ற பின் அநேக நண்பர்கள் மனஉகப்போடு நம் சுத்த சத்தியதீனுல் இஸ்லாத்தைப் பின்பற்றி வரும் சந்தோஷகரமான உண்மைகள், அப்போதைக்கப்போது நம் ஸை. இ. வாயிலாய் வெளிவந்திருப்பதை நேயர்கள் நன்கறிவர். ஆனால் போதிய பண வசதி இல்லாக் குறைவினல் தக்கப் பிரசாரம் புரிய ஹேதுவில்லாதிருக்கின்றது. எனவே, இவ்வுண்மையை நன்

குணர்ந்த நீடூர்வாசியாகிய ஜனுப் மௌலவீ முஹம்மது அப்துல் கரீம் சாஹிப் (பாக்கவீ) அவர்கள், தங்களது அரிய முயற்சியால் மாயவரம் தாலுக்காவிலுள்ள சில ஊர்களில் ஒரு தொகை வசூலித்து அவ்வுத்தம காரியங்கள் நன்கு நடைபெற உதவி செய்திருக்கின்றூர்கள். எனவே அன்னேருக்கு எங்களது நன்றி யறிதலான வந்தனத்தைச் செலுத்துகின்றேம். இதைப்போன்று இதரர்களும் செய்ய முற்படுவார்களின் இஷா அத்துல் இஸ்லாமின் அரியசேவைகள் தக்க முறையில் நடைபெறுமென எதிர் பார்க்கின்றேம். (ப—ர்.)

ஜனுப் மௌலவீ அவர்களது வசூலின் விபரம். நீடூர் நெய்வாசலில் ரூ. 239-1-0, வடகரையில் ரூ. 39-8-0, அரங்குயில் ரூ. 36-10-0, சீர்காழி தாலுக்கா கீரநல்லூரில் ரூ. 53-4-6 அங்குள்ள மெண்மணிகள் ரூ. 6-0-0, ஆக ரூ. 374-7-6 வசூலா யிருக்கின்றது என பொக்கிஷதார் ஜனுப் இ. அல்லாப்பிச்சை ருவுத்தர் அவர்கள் அறிவிக்கின்றூர்கள்.

கொடிக்கால் பாளையம்.

இவ்வூரின் மேலத்தெருவில் புராதனமாக ஏற்பட்டுள்ள பள்ளிவாசலானது, இடிந்து வெடித்துப்போய்த்தொழுவதற்குச் சௌகரியமில்லா திருந்தது. இதனைப் பழுதுபார்த்து ஒழுங்கு செய்வதற்கு, ஜனுப் மு. கய்ருல் ஆபிதீன் சாஹிப் அவர்கள் தக்க முயற்சி செய்து, தாங்கள் சொந்தமாகச் சில ரூபாய்களைக் கொடுத்தும், இதர நண்பர்களிடம் வசூலித்தும் அவ்வேலையைப் பூர்த்தி செய்து வைத்தார்கள். பிறகு 30-9-32 வெள்ளிக்கிழமை ஜும்ஆவில் குத்பா ஓதப்பட்டு அப்பள்ளியிற் தொழுகை ஆரம்பிக்கப்பட்டது.

மிர்ஸா மஹ்மூதின் பிதற்றல்.

நேர்வழியிற் செல்லக்கூடிய ஒவ்வொருவரும் நபியாய்விட முடியுமாம்?

காதியானி கோஷ்டித் தலைவரான மிர்ஸா மஹ்மூத் அஹ்மத் என்பார் ' நபித்துவத்தின் உண்மை" என்னும் பெயருள்ள நூலொன்றை இயற்றியிருக்கின்றூர். அதில், நபித்துவமென்பது ஈமானினுல் ஏற்படும் ஓர் உயர்பதவிக்குச் சொல்லப்படுமென்றும், மானிடன் அதில் முன்னேற்றமடைந்து அப்பதவியை அடைந்துவிட முடியுமென்றும் கூறி, இதனை குர்ஆன் ஷரீபும் நன்கு போதித்திருக்கின்றதென்றும், சஹாபாக்களில், ஆண்டவனை உறுதிகொள்வதிலும் அவனுக்கு வழிப்படுவதிலும், அவனது கட்டளைகளைச் சிறைமேற்கொண்டு நடப்பதிலும் ஒருவகையான குறைவு காணப்பட்டதால், அவர்கள் அப்பதவியை அடைந்துகொள்ள முடியவில்லை என்றும், ஒருவர்மட்டும் 'சித்தீக்' என்னும் பதவியை அடைய முடிந்ததென்றும் விளக்கி இருக்கின்றூர்.

ஆனல் டாக்டர் பிஷாரத்அஹ்மத்சாஹிப் அவர்கள் இக் கூற்றைக் கண்டித் தெழுதுங்கால் கூறுவதாவது:—இதனை நாம் ஒப்புக்கொள்வோமாயின், (1) சங்கைவான்களான சஹாபாக்களினுடைய ஈமானிலும், வழிப்பாட்டிலும், அவர்கள் ஆண்டவனுக்கு பயந்து நடந்ததிலும் குறைவு இருந்ததென்று ஏற்படுகின்றது. (2) அல்லாஹ் தஆலா குர்ஆன் ஷரீபில் சஹாபாக்களைப் புகழ்ந்து கூறி, அல்லாஹ் அவர்கள்மீது சந்தோஷ முடையவனுக இருப்பான், அவர்கள் அல்லாஹ்தஆலாவால் உகக்கப்பட்டவர்களாகவும், அவனிடத்தில் முடுகுதலானவர்களாகவும், ஜெயசீலர்களாகவு மிருப்பார்களெனக் கூறி இருப்பது பொய்யென ஏற்படுகிறது. (3) இக்கூற்றுப்படி குர்ஆன்ஷரீபானது, நபித்துவத்தை சம்பாதித்துக் கொள்ள முடியுமென்னும் வழியை நன்கு விபரித்திருக்கின்றதென்பது உண்மையாகயிருந்து, எம்பெருமானர் (ஸல்) அவர்களது உம்மத்துகளிலுள்ள எவரும் இவ்வழியில் நடந்துசென்று நபியாக ஆய்விடவில்லை என ஏற்படுமாயின், குர்ஆன்ஷரீபின் [illegible]தனையும், எம்பெருமானர் (ஸல்)

அவர்களும் தங்கள் பிரசாரத்தில் தோல்வியுற்றார்களென ஏற்படுகின்றது.

எனவே, டாக்டர் அவர்களால் வினவப்பட்ட வினாக்கள் பாராட்டத் தக்கனவேயாகும். ஏனெனில் மிர்ஸாவின் கூற்றுப்படி சங்கைவான்களான சஹாபாக்களின் தூஷணை ஏற்படுவதுடன், குர்ஆனில் அனுஷ்டிக்க முடியாத விஷயங்கள் குறிப்பிடப்பட் டிருக்கிறதென்னும் அபவாதமும், குர்ஆனின் போதனையிலும், எம்பெருமானார் (ஸல்.) அவர்களுடைய நபித்துவத்திலும் தோல்வி ஏற்பட்டு விட்டதென்னும் அபாண்டமும் ஏற்படுகிறதெனப் புலனாகின்றது. ஆதலின் உண்மையைத் தவறென்று கூறும் இக்கெட்ட கொள்கை மகாப்பாதகமானதாக இருக்கின்றது.

தவிர, மிர்ஸா மஹ்மூத் என்பார், எதற்காக இவ்வாறு நபித்துவமென்பது மனிதன் தம் சுயமுயற்சியால் சம்பாத்தியஞ் செய்து கொள்ளக்கூடிய ஒரு வஸ்துவென்றும், சங்கைவான்களான சஹாபாக்கள் தாங்கள் ஆற்றவேண்டிய வணக்கம் முதலியவைகளில் குறைவுசெய்து விட்டதால், அப் பதவியை அடைந்துகொள்ள முடியவில்லை என்றும் கூறமுற்பட்டாரென்பதை நோட்ட மிட்டுப் பார்ப்போமாயின், தமது தந்தையாகிய மிர்ஸா குலாம்அஹ்மத் காதியானி என்பார், தாம் மற்றவர்களைப் பார்க்கினும் குர்ஆனை தக்கமுறையில் பின்பற்றி நடந்து வந்ததினாலும், இதரர்களைப் பார்க்கினும் ஆண்டவனை அதிகமாக பயந்து நடந்து வந்ததினாலும், தாம் உயர்பதவியிலுள்ள தக்க முஸ்லிமாக இருந்ததாலும் இந்த உம்மத்தில் தாம் மட்டும் நபிப்பட்டத்தை அடைந்து விட்டதாகக்கூறியதை ஸ்தாபிப்பதற்குத் தானென நன்கு புலனாகின்றது.

இவ்வாறான மார்க்க முரணானவும், கவைக்குதவாதனவுமாகிய ஒரு பொய்க்கூற்றை ஸ்திரப்படுத்துவதற்காக வேண்டியே, சங்கைவான்களான சஹாபாக்களை தூஷணிக்கும் வேலையிலும், குர்ஆன் ஷரீபின் மகிமைக்கும், எம்பெருமானார் (ஸல்.) அவர்களது கீர்த்திக்கும் ஹானி ஏற்படுத்தும் வேலையிலும் மிர்ஸா மஹ்மூத் எவ்வாறு ஈடுபட்டாரென்பதுதான் நமக்கு பேராச்சரியமாக இருக்கின்றது. இவ்வாறான நூதனக் கிளர்ச்சியை உண்டாக்குவதற்கு என்ன அவசிய மேற்பட்டுவிட்டன வென்பதுதான் நமக்குப் புலனாகவில்லை. தவிர குர்ஆன் ஷரீபானது, ஒவ்வொரு மானிடனும் நபியாக ஆய்விட முடியுமென்று போதிக்கிறதென அவர் கூறுவதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பம் இன்னதென்பதுதான் நமக்குப் புலனாகவில்லை. ஆகவே சஹாபாக்களின் தெண்டிப்பிலும், அவர்களது வழிப்பாட்டிலும் குறைவு இருந்ததால் அவர்கள் நபியாக ஆய்விட முடியவில்லை என அவர் கூறியது முழு முட்டாள் தனமென்று புலனாகவில்லையா? சங்கை வான்களான சஹாபாக்களை தூஷணிப்பது கொண்டும், எம்பெருமானார் (ஸல்.) அவர்களும், குர்ஆன் ஷரீபும் தங்களது பிரசாரத்தில் வெற்றிபெறவில்லை எனக் கூறுவதுகொண்டும், மிர்ஸா சாஹிப் நபியாய் விட்டதாகவோ, அவருக்கு உயர்பதவி கிடைத்துவிட்டதாகவோ எந்த சாமான்யரும் கூற முன்வரமுடியுமா? தவிர நபித்துவமென்பது மானிடனது சுயமுயற்சியால் கிடைக்கக் கூடியதாக இருக்கிறதென்றும், அதனை அடையும் வழிகளை குர்ஆன் போதித்திருக்கிற தென்றும் கூறப்படுமாயின், முஸ்லிமல்லாதார் இதனை ஆதாரமாகக்கொண்டு, சென்ற பதிமூன்று நூற்றாண்டில் எத்தனை நபிமார்கள் தோன்றினார்களென்றும், எத்தனை மனிதர்கள் அப்பதவியை அடைந்திருக்கின்றன ரென்றும் கேழ்ப்பார்களாயின், அதற்கு மிர்ஸா மஹ்மூத் என்ன பதிற் சொல்வா ரென்பது தான் நமக்குப் புலனாகவில்லை? மிர்ஸா மஹ்மூற் சாஹிப் பிதற்றித்திரியும் இவ்வாபாச வார்த்தைகளை ஆதாரமாகக் கொண்டு, ஒவ்வொருமனிதனும் தாம் நபியாக ஆய்விட்டதாகப் பிரகடனப்படுத்தி, மானிடர்களுக்கிடையே பிரிவினையை உண்டு பண்ண ஹேதுவேற்பட்டு விடுமல்லவா? தவிர குர்ஆனின் நற்போதனையை தக்கமுறையில் சிரமேற்றாங்கி நடக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் நபியாய்விட முடியுமெனக் கூறப்படுவது, எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் தாங்கள்தான் கடைசி நபியாக இருக்கும் எனக் கூறியதற்கு முரண்பாடாகக் காணப்படவில்லையா? எனவே, எம்பெருமானார் (ஸல்.) அவர்கள், குர்ஆன் ஷரீபின் நற்போதனைகளைத் தக்க முறையில் பின்பற்றி நடந்து வந்ததினால் நபியாய்விட்டார்கள்; தாமும் அவ்வாறே நடந்துவந்ததின் காரணததினால்

நபியாக ஆய்விட்டதாக ஒரு மனிதன்கூறுவா னாகில் நமது மிர்ஸா மஹ்மூத் அதனை ஏற்றுக் கொள்வாரா? இல்லையேல், அதனை மறுக்க அவரிடத்தில் என்ன ஆதாரமிருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவாராக.

குர்ஆனின் நற்போதனையைப் பின்பற்றி நடக்கும் ஒவ்வொருவரும் உண்மையான முஸ்லிமாய் விடுவதுடன், மேலான பதவியை அடைவதற்கும் பாத்தியஸ்தரர்ய் விடுகின் றார் என மிர்ஸா கூறுது, அவ்வாறு நடப்பவர் வர் நபியாக ஆய்விடுகின்றார் எனக் கூறுவது எதற்காக? இதுவெல்லாம் ஒற்றுமையாக இருக்கும் "உம்மத்த முஹம்மதிய்யா" க்களு க்கிடையே பிரிவினையை உண்டுபண்ணி, சிற் சில பாமர மக்களைத் தம் பக்கல் சேர்த்துக் கொள்வதற்காக அனுஷ்டிக்கும் சூட்சியே யன்றி வேறில்லை.

இதுவன்றி மிர்ஸா குலாம் அஹ்மத் என் பார், தக்க முறையில் குர்ஆனின் போதனை களைப் பின்பற்றி நடந்துவந்ததால், சங்கை வான்களான சஹாபாக்களைவிடவும், மேன் மை தங்கிய மகான்களை விடவும் மேலாகி, நபிப்பட்டத்தை அடைந்துகொண்டதுடன் மானிடர்கள் பெறக்கூடிய உயர்பதவியின் உச்சஸ்தானத்தையும் எத்தி இருப்பாரா யின், எதற்காக அவர் ஆங்கிலேயரிடம் சிறிய தோர் உத்தியோகத்திலமர்ந்து தமது காலத் தைக் கழிக்கவேண்டும்? இவ்வாறு தொண்டு புரிவதுதான் மானிடனை உயர்பதவிக்குக் கொணர்ந்து சேர்க்கும் சாதனமென அவர் கருதினரா?

ஆதலின், மிர்ஸா மஹ்மூத் சாஹிப் ஆரம் பத்திலேயே தமது தந்தையார், குர்ஆன்ஷரீ பின் நற்போதனைகளை எவ்வாறு பின்பற்றி நடந்தார்; சங்கைவான்களான சஹாபாக்க ளாய ஹஸ்ரத் அபூபக்ர், உமர், உதுமான் அலீ (ரலியல்லாஹு அன்ஹும்) போன்ற மகான்களைப் பார்க்கினும் எவ்வகையில்மேன் பதவி அடைந்துள்ளார்; எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் தாங்கள் கடைசி நபி யெனக் கூறியது தவரு? என்பனவற்றை வெளியாக்கிக் காண்பித்துவிட்டு அதற்குப் பின் தமது தந்தையார் நபித்துவத்தைப் பெற்று நபியாக ஆய்விட்ட வரலாற்றை ஸ்தாபிக்க முன் வருவாராக. இதுவன்றி குருடன் கூற்றுப்பார்த்ததுபோல் யாதொரு தக்க காரணமுங் கூருது, தமது தந்தையார் இதரர்களைப் பார்க்கினும் குர்ஆனின் போ தனைகளைத் தக்கமுறையில் பின்பற்றி நடந்து வந்ததால், நபியாக ஆய்விட்டாரெனக் கூற முற்படுவாராயின், பாமர உலகமுங்கூட இதனை ஏற்றுக்கொள்ளாதென்பது திண்ணம்.

காதியானிகளின் இவ்வபாண்டமானவும், மார்க்க முரணுனவுமாகிய பொய்க் கூற்றை ஆதாரமாகக் கொண்டுதான் தா. இ. ஆசிரி யர் தமது ஜவாஹிருல்புர்கான் என்னும் நூலில் "நபிமார்களுக்கு ஆண்டவனலருளப் பெற்ற அனுக்கிரஹங்களுள் வேத இரகசியத் தைத் தெரிந்துகொள்ளக் கூடிய "வஹீ" என்னும் ஞான வெளிப்பாடும் ஒன்ருதலின் அதை நேர்வழியில் செல்லக்கூடிய ஒவ்வொரு உண்மை முஸ்லிமும் அடைதல் கூடும்........ என எழுதி வைத்திருக்கின்றார்.

இஸ்லாமும், மேனாட்டு மக்களும்.

(டாக்டர் காலித் ஷேல்ட்ரேக் வரைவது)

மேற்குப் பிரதேசத்தார்கட்கு, இஸ்லாமிய சத்போதனைகள் சம்பந்தமா யுள்ள வெகு சில தகவல்களே கிடைத்துள்ளன வாதலின், அவர்கள் இஸ்லாத்தைப்பற்றி அறிந்துள்ளவைகள் சுத்த சூன்னியமாகவே இருக்கின்றது. எனெனில் அன்னேரிலுள்ள பொதுமக்கள் 'முஸ்லிம்' என்ருல் சூரியனை வணங்குபவரென்றும், எத்துணை மனைவிகள் வேண்டுமாயினும் அத்துணை மனைவிகளையும் வைத்துக்கொள்பவ ரென்றும், தவருகக் கருதிக்கொண்டிருக்கின்றனர். தவிர முஸ் லிம் என்ருல் விக்கிரகத்தை வணங்குபவர் என்று அவர்களில் ஒருசிலர் மௌட்டிகமாக எண்ணியிருக்கின்றனர். இன்னும் அன்னே

ரிலுள்ள எண்ணற்ற மக்களின் கொள்கையானது, "எங்ஙனம் கிறிஸ்துவர்கள் ஹஸ்ரத் ஈஸாநபி (அலை) அவர்களை வணங்குகின்றார்களோ அங்ஙனமேதான் முஸ்லிம்களாகிய நாமும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை வணங்குபவர்களாயிருக்கின்றோம்" என்பதேயாகும்.

மேலும், கிறிஸ்துவ மாதா கோயில்கள், பலநூற்றாண்டுகளாக இஸ்லாத்தைப்பற்றி தவறான மூடநம்பிக்கைகளைப் பரத்திவைக்கும் நிலையங்களாயிருந்து வருகின்றதென்பதும், கிறிஸ்துவப் பொதுமக்கள் எந்த மார்க்கத்தில் சத்தியமிருக்கிறதென்று ஆராய்வதற்குத் தலைப்படுகின்றனரென்னும் எண்ணம் பாதிரிமார்கட்கு ஏற்படும் நேரத்தில் உடனே அன்னோர் மிகவும் விஷமத்தனமாக இஸ்லாத்தின்மீது வேண்டுமென்றே பழிசுமத்தி மக்களை மதிமயங்கும்படி செய்துவிடுகின்றனரென்பதும் மறைந்தனவன்று.

தவிர, கிறிஸ்துவர்களின் மார்க்கமானது, ஒருகாலத்தில் ரோமாபுரி இராஜ்ஜியத்தின் அஸ்திவாரக்கல்லாக வைக்கப்பட் டிருந்ததென்பதும், லத்தீன் பாஷையையும், லத்தீன் நாகரீக வழக்க ஒழுக்கங்களையும் சகல உலகிலும் சிறந்தோங்கும்படியாய்ச் செய்துவிடவேண்டுமென்று முயற்சிக்கப்பட்டு வந்ததென்பதும் மறுக்கொணா சரித்திர உண்மையாகும். மேலும் அக்காலத்திலுள்ள கிறிஸ்துவர்கள் எண்ணிறந்த அரபிக் கிரந்தங்களை மொழிப்பெயர்க்கும் வேலையிலீடுபட்டு அதிலுள்ளசிற்சில இடங்களில்வேண்டியமாறுதல் செய்துவிட்டு; அது யாருடைய கண்ணுக்கும் புலப்படக் கூடாதென்னும் குறுகிய நோக்கங்கொண்டு அதன் மூலகிரந்தங்களை ஒழித்துவிட்டிருக்கின்றார்கள். மேலும் பைபிள் வேதத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் சத்தியமற்ற விஷயங்களை உலக ஜனங்கள் உண்மையான சத்தியங்களென்று கருதிக்கொள்ளச் செய்யவேண்டு மென்னும் நோக்கத்துடன் கிறிஸ்துவக்கோயில்களின் அர்ச்சகர்கள் (இஸ்லாத்தின்மீது) முற்றுந் தவறான அபாண்டப் பழிகளையுங்கூட சுமத்திவந்து இஃது தங்கள் வேதங்களிலிருப்பதாகவும் கூறினர்.

அரசியல் நோக்கத்துக்காகப் புரிந்த அட்டூழியங்கள்.

பிரான்ஸ் தேசத்தைச் சார்ந்த தூரிஸ் நகரம் பிடிபட்டச் சம்பவமானது, ஐரோப்பியர்களின் விவேக ஒழுக்க நாகரீகத்தை பல்லாயிர வருடங்கட்குமுன்னிருந்ததைப்போல் மிகக் கேவலமாகச் செய்துவிட்டது. மக்களிடையே பரவியிருந்த குருட்டுக்கொள்கைகளும், மௌட்டீகத் தன்மைகளும் பாமர மக்களைப் பாதிரிகளின் மாயவலைக்குள் சிக்கிக் கிடக்கும்படி செய்துவிட்டது. எனவே, கிறிஸ்துவ அரசாங்கத்தினர் ஏதேனுமொரு நாட்டைப் பிடிக்கவேண்டுமென்று ஆசைக் கொண்டவுடன் அதைப் பாதிரிகள் மூலமாகச் செய்துகொள்வார்கள். பாதிரிகளோவெனில், பாமர மக்களைக்கூட்டி,. "முன்னர் நம்மவர்களோடு சிலுவைச் சண்டைப்புரிந்த அநாகரிக ஜாதியாரை முறியடிப்பதற்காக நாம் இப்போது சண்டை போடவேண்டியிருப்பதால், மதசம்பந்தமான யுத்தத்திற்கு ஒவ்வொருவரும் முன்வரக்கடவர்" என்று விஷம போதனை செய்து பாமரர்களைத் திரட்டிக்கொள்வார்கள். இப்படிப்பட்ட அட்டூழியச் சிலுவைச்சண்டை இப்போதுங்கூட நடைபெறுவதாகத் தெரிகிறது.

எனவே, இதுகாலை இஸ்லாத்திற்குவிரோதமாய் மேனாட்டுப் பாமர மக்களிடையே பரவியிருக்கும் அறிவீனங்கட்கும், குரோதங்கட்கும் காரணம், பாமர மக்களின் நட்புகளல்லவென்பதையும், இவ்விஷமத்தனங்களைப் பிரசாரஞ் செய்து, இஸ்லாத்தின் அறிய சத்திய தத்துவங்களை உருட்டிப் புரட்டிச் சீர்குலைத்துக் கூறி பல நூற்றாண்டுகளாய்த் துற்பிரசாரம் செய்து வரும் அந்த (பாதிரிக்)கோஷ்டியினரே காரணஸ்தராவார் என்பனவற்றையும் மேலே கூறப்பட்டுள்ள விஷயங்களால் நன்குணர்ந்திருப்பீர்கள்.

பாதிரிகளின் தவரான பிரசாரம்.

கி. பி. 1903-ம் ஆண்டில் யான் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டமையால், யான் ஒரு முஸ்லிம் என்ற நிலைமையில் இஸ்லாமியச் சரிதைகளை நன்காராயவேண்டிய சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. எனவே, யான் பண்டைப்போது இஸ்லாமிய நாடுகள்மீது ஏற்பட்ட படை எடுப்புகளின் காரணத்தையும், அழிவு அட்டூழியங்களின் வரலாறுகளையும், அப்போதைக்கப்போது நிகழப்பெற்று வந்த விஷமங்களின் நோக்கங்களையும் உள்ளுணர்ந்து பார்த்ததில், உண்மையில் அவைகளுக்கு யார் காரணகர்த்தர்க

ளாகுமென்பதை நன்கு தெரிந்துகொண்டேன். எனினும் யான் எந்த ஒரு தனிக்கூட்டத்தின் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லாமல் பொதுப்படையாய் "மேற்படி விஷமங்கட்கெல்லாம் பொறுப்பாளிகள் எல்லா ஐரோப்பிய வர்க்கத்தினரும், அமெரிக்கக் குழாத்தினர்களுமே யாவர்" என்று மட்டும் கூறிவிடுகின்றேன்.

மேலும், மேனாட்டாரில் பலர், பொதுச் சபைகளின் பிரசங்க மேடைகளில் நின்று மிக பகிரங்கமாய் இஸ்லாத்தைப்பற்றி முற்றுந் தவறான விஷயங்களைக் கூறிக்கொண்டிருந்ததை யான் பன்முறையும் பார்த்திருக்கின்றேன். அங்ஙனம் அன்னோர் கூறுயவை முற்றுந் தவறென்பதை அன்னோர் உணர்ந்திருந்தும், அதனை பகிரங்கத்தில் கூறத் துணிந்துவிட்டதே அன்னோரின் அளவற்ற குரோதத்தை வெளிப்படுத்துகின்றது. ஒரு முறை ஒரு பாதிரியார் கூறிய ஒரு அபாண்டப் புளுகை, யான் மறுத்துப் பேசத் துணிந்தபோது, எனது கன்னத்தில் ஓர் அறையும் விழுந்தது. எனினும் யான் அவ்வடியையும் பொறுத்துக்கொண்டு, "இந்த மனிதர், தான் பேசும் விஷயத்தின் உண்மை யாதென்பதையுங்கூட அறியாது கண்டவற்றை யெல்லாம் பொய்யும் புரட்டுமாய் உளறிக்கொட்டுகின்றார்" என்று பகிரங்கமாய் எடுத்துக் கூறிவிட்டேன். இப்படிப்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் யான் பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டேன். ஆகையால் என்னுடைய உயிரே அக்காலை பேராபத்திலிருந்ததெனலாம். சையத் ஹஸன் பல்கிராமீ கூறியபடி "தற்காலையும் யான் நாரோடில் இஸ்லாமியப் பிரசாரம் செய்துவந்தபோதிலும் எனக்கு விரோதமாக ஆங்கு ஓர் பெருங்கிளர்ச்சித் தோன்றியிருக்கும்" என்பது நிச்சயமே. இவ்வாறான குரோதம் நிறைந்த பிடிவாத குணமானது, 1903-ம் ஆண்டில் அங்குநிறைந்திருந்தது. ஸர் அப்துல்லாஹ் சுஹரவர்தியின் சங்கம், பத்திரிகை, போபால்பேகம் சாஹிபாவின் மஸ்ஜிது, ஸர் சாலார்ஜங்கின் வெஸ்ட் ஹவ்ஸ், தி ஈஸ்ட்ரன் இஸ்லாமிக் சொஸைட்டி இவைகளைக் குறிப்பிட்டுவிட்டு இதுபோலொத்த (ஸ்லாமிய பிரசார சபைகள் மேனாட்டின் எள், ஆங்காங்கு ஏற்பட்டு, இஸ்லாத்தைப்பற[ ]த்த சத்திய போதனைகளை உள்ளபடி பிரகடனஞ்செய்து பிரசாரம் புரிந்து வந்ததன் பயனாகவேதான் தற்போது மேனாட்டுலகத்தின்கண் மக்கள் இஸ்லாத்தைச் சீரான முறையில் உணர்ந்துக்கொள்ள வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, இப்புனிதமான வழியில் இன்னும் பல காரியங்கள் புரிந்தாகவேண்டியது அவசியமாக யிருக்கின்றது.

மக்களிடையே கிறிஸ்துமத வெறுப்பு.

எனக்குத் தெரிந்தமட்டில், ஆங்குள்ள (மேனாட்டு) மக்கள் ஒரு புதிய மார்க்கத்தை யடைவதற்கு பேரவாக் கொண்டவர்களாயிருக்கின்றார்கள். நடுத்தரமான அறிவுள்ள ஜனங்களுங்கூட பொதுப்படையாக கிறிஸ்துவ மார்க்கத்தின்மீது தீரா வெறுப்படைந்திருக்கின்றார்கள். அன்னோர், எந்தவிதமான கற்பனை மதத்தின் மீதும் ஒரு சிறிதேனும் நம்பிக்கைக் கொள்ளாதவர்களாகவே இருந்து வருகின்றனர். ஆதலின் பிறிதொரு சாராரும், கிறிஸ்துவமார்க்கத்தின்மீது தங்களுக் கேற்பட்ட அலக்ஷியத்தையும், வெறுப்பையும் வெளிப்படையாகக் கூறி வருவதின் காரணமாய் ஆங்குள்ள நடுத்தர மக்கள், தங்கள் ஆயுள் காலங்களில் மூன்றே முறைதான் கோயிலுக்குப்போய் வருகிறவர்களாக இருக்கின்றனர். அம்மூன்று முறையாதெனின்: 1-வது அன்னோர் ஞானஸ்நானம் பெறும் போது, 2-வது கலியாணஞ் செய்துகொள்ளப்போகும் போது, 3-வது கடைசியாக அவர்களது சவப்பெட்டியை இதர ஜனங்கள் தூக்கிக்கொண்டு போகும் பொழுது. இச்சம்பவம் ஆங்கு பழமொழிபோல் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் அந்நாட்டின் பெரும்பாலான மக்களின் ஆசாரவழக்கமும் இந்த விதமாகவே தானிருந்து வருகின்றது.

சினிமாப்படங்களில் அசூசையான முயற்சிகள்.

பல நூற்றாண்டுகளாக மேனாட்டின்கண் பாதிரிகள் இஸ்லாத்தின் தத்துவங்களை மாற்றிப் புரட்டித் திரித்துக் கூறி, பொது ஜனங்களிடையே விஷமப்பிரசாரஞ்செய்து வருகின்றனர் என்பதற்கேற்ப, இதுகாலை நாவல் கதை எழுதுவோரும், சினிமாப்படங்கள் தயார்செய்வோர்களுங்கூட அவ்விதமான அசூசை மிக்க தீய பிரசாரங்களைச் செய்து இஸ்லாத்தின்மீது வெறுப்பேற்படும்படிசெய்

து வருகின்றார்கள். ஆங்கு அநேகமாய் சினிமாத் தொழிலானது, யூதவர்க்க முதலாளிகளுடைய ஆதிக்கத்திலிருந்து வருகின்றது. குரோதம் மிக்க யூதர்கள் அவ்வித வேலைகட்கான சகல செலவையும் தாங்களே ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அச்சினிமாப் படங்களில் நடிக்கும் ஆக்டர்களும் அநேகமாய் யூதர்களாகவே இருக்கின்றனர். இத்தியாதி அனுகூலங்களால் தயார் செய்யப்படும் ஒவ்வொரு சினிமாப்படத்திலும் இஸ்லாமியத் தொழுகை முறையை மிக மிக இழிவான விதத்தில் பரிகசிக்கத்தக்க விதமாய் எடுத்துக் காட்டுகின்றார்கள். அதில் முஸ்லிம் சமூகத்தினரை விஷமிகள்போல் எடுத்துக் காட்டப்படுகின்றது. பண்டைய முஸ்லிம் வீரர்கள் அஞ்சா நெஞ்சத்தோடு எதிரிகளை எதிர்த்து ஒழிக்கக் கூடியவர்களா யிருந்தனரென்பது உலகமறியக் கிடக்க, முஸ்லிம்களுடைய போர் முறையை மிக மிக தீயதாகவும் இழிவாகவும் எடுத்துக்காட்டி, முஸ்லிம்கள்மீது பிறர்க்கு அருசை ஏற்படும்படியாகச் செய்கின்றனர்,

வோக்கிங் மஸ்ஜிதில் பெருநாள் (ஈத்) தொழுகை நடைபெற்றபோது எடுத்த படம் சமீபத்தில் காட்டப்பட்டது. அப்படத்தைக் காட்டினவர் அதனை அளவுக்கதிகமான வேகத்தில் ஒட்டித் தொழுகிறவர்களின் நிதானமான அனுஷ்டானங்களைத் துரிதப்படுத்தி, வெகு விசித்திரமானவும் இழிவானவுமாகிய முறையில் காட்டினார். இதைக் கண்ணுற்ற ஜனங்கள் பரிகாசஞ்செய்து சப்தமிட்டுச் சிரித்துக் கைகொட்டினார்கள். இங்ஙனம் குரோத புத்தியுள்ள சினிமாக்காரர்கள் தொழுகையைப் படம் பிடித்துக்கொள்ளும்படி அனுமதி கொடுத்ததே மிக மிக வருந்தற்குரிய விஷயமாயிருக்கிறது.

அன்னிய விஷயமென்ற தவறான உணர்ச்சி.

மேனாட்டு மக்கள், இஸ்லாம் மதத்தை முற்றும் ஓர் அன்னிய-வேற்றான விஷயமென்றே கருதிவருகின்றனர். ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களும் கீழ்நாட்டை (ஏஷியாவை)ச்சேர்ந்தவர்களாகவும், கருப்புநிற மனிதரைச்சேர்ந்தவர்களாகவும், யூத இனத்தவர்களாகவும் இருந்தனரென்பதையும், கிறிஸ்துவ மார்க்கங்கூட ஓர் அன்னியவிஷயமேயாகும் என்பதையும் அம்மேனாட்டினர் ஒரே அடியாக மறந்துவிட்டனர்போலும்! நிற்க இக்காலை ஈஸா (அலை) அவர்களின் உருவத் தோற்றத்தை, மேனாட்டு மனிதரின் உருவத் தோற்றத்தில் காட்டப்பட்டு வருகின்றது. மேலும் இக்காலை பைபிள் வேதத்தின் பிரதிகளை அதிகமாகத் தயாரித்து அதன்மூலமாய் கிறிஸ்துவ மார்க்கப்போதனைகள் சகல ஸ்கூல்களிலும் மிகச் சாதாரணமாக நடைபெற்று வருவது வெளிப்படை. ஆகையால் ஒவ்வொரு சிறுவனும்சிறுமியும் ஈஸா (அலை) அவர்களது வாழ்க்கை வரலாறுகளைத் தெரிந்துகொள்வதற்கு மிக இலேசான-சௌகரியமான வழிகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றனர். ஆயினும் அம் மாணவர்கள் கலாசாலைகளில் கற்றுத் தேர்ந்தபின், அதைவிட்டு வெளியில் வந்து தனிமையில் சுயேச்சையோ டிருந்து கொண்டு சற்று சிந்தித்து ஆராய்ச்சி செய்து பார்ப்பார்களாகில், "இதுகாறும் அவர்களை ஸ்கூல்களில் மூடர்களாகச் செய்துவிடவே முயற்சிகள் புரியப்பட்டுவந்துள்ளன வென்பதை ஐயமறத் தெரிந்துகொள்வார்கள். அத்துடன், கிறிஸ்துவ மார்க்கத்தைத் தவிர்த்து வேறு சத்திய சன்மார்க்கமும் இத்தரணியில் வியாபித்திருக்கிறதென்பதையும் தெரிந்துக் கொள்வார்கள்.

"அந்தரங்கத்தில் பிரிட்டிஷ்மக்களும், இந்தியமக்களும் ஒரே சங்கிலியைச் சேர்ந்த இருவளையங்கள் (ஒரே இனத்தைச்சேர்ந்த இருபிரிவுகள்) என்ற உண்மையை யான் உங்கட்குப் புதிதாகச் சொல்வதைக்கொண்டு நீங்கள் வியப்படைவீர்கள். உண்மையில், இவ்விருசாராரும் ஐரியன் இனத்தைச் சேர்ந்தவர்களே யாவர். இப்போதோ அன்னோர் வம்ச இனத்தைப்பற்றிய ஐயமுங் கொள்ளாது, தங்கள் மதங்கள் எங்கிருந்து ஆரம்பமாயிற்றென்ற வரலாரையுந் தெரிந்து கொள்ளாது மௌனமாக இருக்கின்றனர். தவிர அக்கிறிஸ்துவர்கள், தங்கள் தேவாலயத்திற்குப் பெரிய நீண்ட மனாராக்களும், சிறியகதவுகளும், அதற்குள் பலபெரிய அறைகளும் எதற்காக ஏற்பட்டன? யாரால் ஏற்படுத்தப்பட்டன வென்பவற்றையுங்கூட அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். மேலும் "மத்ரா" மார்க்கஸ்தா[illegible]னத்தின்மீது கிறிஸ்துவர்கள் ஆதிக்கஞ்செ[illegible]டு, மேன்மைக்கு வந்தனரென்பதை [illegible]ந் தெரியாதவர்களாகவே இருக்கின்[illegible]ர். ஈதெல்லாவற்

றையும்விட பிரதானமாய், பரிசுத்த இஸ்லாத்தைபற்றியும், நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களது போதன மகாத்மியங்களைப்பற்றியும் தெரிந்துக்கொள்ளாதவர்களாகவேயிருந்து வருகின்றனர்.

மேனுட்டுக் கிறிஸ்துவர்கள், இவ்வாறிருந்தும் தங்களுடைய கிறிஸ்துவ மார்க்கத்தை விட்டு அதற்கு பதிலாக வேறு மார்க்கத்தைத் தேடிக்கொண்டும், கிறிஸ்துவத்தின் மீது வெறுப்படைந்துகொண்டு மிருக்கின்றனர். இவ்வாருன அரிய சந்தர்ப்பத்தில் பரிசுத்த தீனுல் இஸ்லாமை அதன் இயற்கையான திவ்விய முறைமையில் அன்னோர்க்கெடுத்துக் காண்பித்தால், அதி துரிதத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் இஸ்லாத்தைத் தழுவி சிறப்பும் பெருமையும் அடைந்து விடுவர். ஆகையால் நாம் ஆரம்பத்தில் முக்கியமாய் அன்னேரின் மனதில் குடிகொண்டிருக்கும் தவருன எண்ணங்களையும், அறுவறுப்புகளையும் அகற்றி, இஸ்லாத்தின் தத்துவங்களையும், மானுஷ்ய முன்னேற்ற இயற்கை வழிகளையும் எடுத்தோதுவோமாகில், சந்தேகமின்றி தூய்மைவாய்ந்த இஸ்லாமிய மதத்தில் இன்னும் பல்லாயிரக் கணக்கானேர் வந்துசேர்ந்து விடுவரென்பது திண்ணம்.

பிரசாரப் பிரசுரத்தின் அவசியம்.

சிற்சில சந்தர்ப்பங்களிலேற்படும்பிரசங்கத்தின்போது பல பகுதியிலுமுள்ள ஜனங்களை ஒரே இடத்திற் சேர்த்துவிடுவது முடியாததாகி விடுகின்றது. ஏனெனின், அவரவர் தம் தம் உத்தியோகவேலைகளை விட்டுவரக் குறைந்தது 7 மணி ஆகின்றது. அன்னேர் வீட்டுக்கு வந்ததும் உணவருந்தவும், சொற்பநேரம் உல்லாசமாக இருக்கவும் பிறகு துயில் புரிந்து எழவுமே அவர்களின் நேரம் செலவாய்விடுகிறது. ஆகையால் அன்னேர் சொற்பமான அவகாசநேரத்தில் படித்துப் பயன்பெறும் முறையில் ஏதேனும் பிரசுரம் தயார்செய்து பரத்தல்வேண்டும். அதற்காக 4 5-ரூபாய் விலை பெறும்படியான கிரந்தம் வெளியிடுவது வியர்த்தமாகிவிடும். ஏனெனில், எளியோர்கள் அவ்வளவு அதிகப் பணத்தைச் செலவிடமாட்டார்கள். பணம் அதிக செலவாகாத முறையிலும், எளிதில் படித்துப் பயன் பெறும் முறையிலும், எளிதில் விளங்கிக்கொள்ளும் முறையிலும் ஏதேனும் சிறு பிரசுரங்கள் வெளியிடல் வேண்டும். அப்படிப்பட்ட நற்பயன் அளிப்பதற்கு நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது சரித்திரப்பிரசுரமே ஏற்றதாகும். எனவே, இரண்டோர் அணுக் கொடுத்து நபிகள்பிரான் (ஸல்.) அவர்களது சரித்திரப் பிரசுரத்தை யாவரும் எளிதில் வாங்கிக்கொள்வர். இவ்வாருன அரிய தொண்டை, ஷீரத் பிரசுர இயக்கமானது (பட்டி ஷீரத் கமிட்டியார் செய்துவரும் ஊழியம்) தக்க முறையில் நிறைவேற்றி வருகின்றது.

எனவே, ஷீரத் பிரசுரஇயக்கத்தைஇன்னும் விசாலமான முறையில் நடத்தவேண்டும். ஒவ்வொரு மொழியிலும் இலக்ஷக் கணக்கான பிரசுரங்கள் தயாரித்து யாவருக்கும் இலவச வினியோகஞ்செய்ய ஏற்பாடு புரியவேண்டும். இதுதான் சரியான விதத்தில் "இஷாஅத்துல் இஸ்லாம்" செய்வதாகும். இதுவன்றி பிரசங்கம் புரிவதுமட்டும் இவ்வளவு பிரயோசனத்தை அளித்துவிடமாட்டாது. எல்லோரும் ஒருவருடைய வாயிலிருந்து வெளியாகும் பிரசங்கத்தைக் கேட்டுப் பிரயோசனம் பெறுவது முடியாது. ஆகவே ; நாயகச் சரித்திரப் பிரசுரம்தான் இஸ்லாத்தின் தத்துவங்களை நன்ருய் எடுத்து விளக்கும்படியானதாயிருக்கின்றது.

பிரசாரப் பத்திரிகையின் அவசியம்

இரண்டாவது "இஸ்லாமிய" பிரசாரத்திற்கென்று செல்வாக்குள்ள பிரசாரப் பத்திரிகையும் அவசியம் வேண்டற்பாலனவாக இருக்கின்றது. இவ்வாருன பத்திரிகைகள் எவ்விடத்திலும்எளிதில்கிடைக்கக்கூடியதாக்யிருக்கவேண்டும். அவ்விதப் பத்திரிகையின் பல பிரதிகளை இலவசமாய் வினியோகிக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். கிறிஸ்துவர்கள் இவ்விதப் பிரசார பத்திரிகைகளிற் பலதை நடத்தி வருகின்றனர். ஆகையால்அவர்களைக் கண்டாகிலும் புத்துணர்ச்சிப்பெற்று முஸ்லிம் சமூக ஊழியம் புரியவேண்டும். எனது இச்சொற்கள் முஸ்லிம்களின் உள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்து நல்லுணர்ச்சி யுண்டாக்குமென்று ஆதரவு வைக்கின்றேன். வஸ்ஸலாம்!

ஆசிரியர் குறிப்பு

முஸ்லிம்களுக்குள் ஒற்றுமை:—நம் முஸ்லிம் சமூகத்தினருள் அரசியல் கோரிக்கை சம்பந்தமாய் அபிப்பிராய பேதமேற்பட்டு, சர்வகக்ஷி மகாநாட்டைச்சார்ந்த முஸ்லிம்கள் ஒரு சார்பினராகவும், காங்கிரஸைப் பின்பற்றிய தேசிய முஸ்லிம்கள் என்பார் மற்றொரு சார்பினராகவும் இருந்துவந்தார்களென்பது வெளிப்படை. எனவே, சர்வகக்ஷி முஸ்லிம்கள் ஜனாப் ஜின்னாவின் பதினான்கு அரசியல் கோரிக்கைகளையும், இந்தியாவுக்கு வழங்கப்படப் போகும் அரசியல் அமைப்புத் திட்டத்திற் சேர்த்து அமைக்கவேண்டுமென பிடிவாதமாய் நிற்கின்றனர். இவைகள் முஸ்லிம்களின் குறைந்த மிதமான கோரிக்கைகளென்றும், முஸ்லிம் சமூகத்திற்கும் மார்க்கத்திற்கும் பாதுகாப்பளிக்கத் தக்கவைகளென்றும், எச்சமூகத்தினருக்கும் எவ்வித இடையூரையும் விளைவிக்கக் கூடியவைகளல்லவென்றும் தக்க ஆதாரங்களோடு எடுத்து விளக்கி நிரூபித்துள்ளார்கள்.

காங்கிரஸ் ஹிந்துக்கள் இக்கோரிக்கைகளிற் சிலவற்றை ஆக்ஷேபித்ததினாலேயே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படாமல் சுமார் நான்கு வருஷ காலமாய் வேற்றுமையும், விரோதமும், பகையும், குரோதமும் ஏற்பட்டுக் கொண்டிருந்தனவென்பது வெளிப்படை. தவிர மௌலானா அபுல்கலாம் ஆஜாத், டாக்டர் அன்ஸாரி, டாக்டர் சையத் முஹம்மத் முதலிய ஒரு சில முஸ்லிம்கள் தேசியக்கக்ஷி முஸ்லிம்களென்ற பெயரால் காங்கிரஸ் ஹிந்துக்களுடன்சேர்ந்துகொண்டு அவர்களது பிரசாரத்திற்கு ஆதரவளித்தும், சர்வகக்ஷி முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டும் வந்தனரென்பது நேயர்களறிந்த விஷயம்.

இச்சீர்கேடான நிலைமையை நிவர்த்தித்து ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே சமரசத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்காக இந்நான்கு வருஷங்களுக்கிடையே பன்முறை முயற்சிக்கப்பட்டும் கடைசியாக லண்டன் 2-வது வட்டமேஜை மகாநாட்டின் போதும் பகீரத முயற்சி எடுத்துப்பார்த்தும் அஃது பயனற்றதாகவே முடிந்தது. தவிர பெரும்பாலாராகிய சர்வகக்ஷி முஸ்லிம்கள் காங்கிரஸை விட்டு விலகிக்கொண்டமையால், காங்கிரஸ் ஹிந்துக்களின் கோரிக்கைகளிலெதுவும் நிறைவேறாமற் போயிற்றென்பதும், தேசியக்கக்ஷி முஸ்லிம்கள் எனப்படும் ஒரு சாரார், பெரும்பாலோர்களாகிய சர்வகக்ஷி முஸ்லிம்களோடு ஒற்றுழைக்க மறுத்துவிட்டபடியால், சர்வகக்ஷி முஸ்லிம்களின் கோரிக்கைகள் பூராவும் அரசாங்கத்தினராலும் காங்கிரஸ் ஹிந்துக்களாலும் அங்கீகரிக்கப்படாமற் தடைபட்டிருக்கிறதென்பதும் நேயர்கள் நன்கறிந்த விஷயமேயாகும்.

தேசியக்கக்ஷி முஸ்லிம்கள் பெரும்பாலான முஸ்லிம்களை விட்டுப் பிரிந்து, காங்கிரஸ் ஹிந்துக்களோடு சேர்ந்து அவர்களுக்காதரவளித்து வந்தார்களெனினும் காங்கிரஸ் ஹிந்துக்கள் அவர்களுக்குத்தக்க மதிப்பு கொடுக்காமலும், அரசாங்கத்தினர் அன்னோர்களை முஸ்லிம்களில் ஒரு கக்ஷியினர் என மதிக்காமலுமிருந்துவிட்டனரென்பது திண்ணம். இதன்பயனாக எவ்வாறேனும் ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே ஒரு சமரஸத்தை ஏற்படுத்திக்கொண்டு, சர்வகக்ஷி முஸ்லிம்களோடு ஒற்றுழைப்பதே தங்களுக்குச் சிறந்த வழி என்ற உணர்ச்சி தேசியக்கக்ஷி முஸ்லிம்களுக்கு ஏற்பட்டதெனினும், சர்வகக்ஷி முஸ்லிம்கள் தங்களது பதினான்கு கோரிக்கைகளிலெதையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை என்பதையும், காங்கிரஸ் ஹிந்துக்கள் முஸ்லிம்களின் கோரிக்கைகளை அப்படியே ஆதரிக்க இணங்கமாட்டார்களென்பதையும் அறிந்து கொண்டவர்களாக இருந்துவந்தனர். இந்நிலைமையில், காந்திஜீ மரணப் பட்டினி விரதங்கொண்டதை முன்னிட்டுத் தாழ்த்தப்பட்டோருக்கும் காங்கிரஸ் ஜாதி ஹிந்துக்களுக்கு மிடையே பூனா சமரஸ ஒப்பந்த மேற்பட்டதென்பது நேயர்கள் அறிந்த விஷயமாகும். அவ்வொப்பந்தத்தில் காங்கிரஸ் ஜாதி ஹிந்துக்கள், சிறுபான்மை வகுப்பினர்களில் ஒரு சாரராகிய தீண்டாதாருக்கு வெகுதூரம் அவர்கள் கோரியபடி